1215

# தமிழரசு

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
16 JUN 1939



எம். கே. தியாகராஜ பாகவதர்

ஆனித் திங்கள்

# தமிழரசு

ஒவ்வொரு தமிழ் மாதம் முதல் தேதியும் வெளி வரும்.

## சந்தா விவரம்

| | | |
|---|---|---|
| வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட | இந்தியா, சிலோன் உள்நாட்டிற்கு | 1—0—0 |
| | பர்மா, பினாங்கு சிங்கப்பூர், தென் ஆப்ரிக்கா முதலிய வெளி நாடுகளுக்கு | 2—0—0 |
| | ஜீவிய சந்தா | 20—0—0 |
| | தனிப் பிரதி விலை | 0—1—0 |
| | மலாய் நாட்டுக்கு 10 காசு அல்லது | 0---2---0 |

## சந்தா நேயர்களுக்கு

1. சந்தாத் தொகை முன் பணமாகவே மணியாடர் செய்ய வேண்டும். வீண் செலவு அதிகமாகிறபடியால் வி. பி. யில் அனுப்ப முடியாது.

2. விலாசம் மாறும் சந்தாதாரர்கள் புதிய விலாசத்தையும் சந்தா நம்பரையும் பத்திரிகை வெளியாவதற்கு ஒரு வாரம் முன்னதாகவே எழுத வேண்டும்.

3. பதிலுக்கு ரிப்ளை கார்டோ, தபால் தலையோ அனுப்ப வேண்டும்.

## கட்டுரை எழுதுவோருக்கு

1. கருத்தமைந்த கட்டுரைகள், ஹாஸ்ய வியாசங்கள், சிறு கதைகள் எளிய - இனிய நடையிலுள்ள பழைய - புதிய கவிதைகள், கலைகள் சம்பந்தமான கட்டுரைகள், நல்ல மொழி பெயர்ப்புகள், ஏற்றுக் கொள்ளப்படும்.

2. விஷயங்கள், நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தெளிவாக எழுதப்பட வேண்டும். சுருக்கமான விஷயங்கள் முன்னர் கவனிக்கப்படும்.

3. அனுப்பும் எல்லா விஷயங்களுக்கும் காப்பி வைத்துக் கொண்டே அனுப்ப வேண்டும். பிரசுரமாகாத விஷயங்களைத் திருப்பி அனுப்ப வேண்டுமானால் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

4. மதிப்புரைக்கு நூல்களும், மாற்றுப் பத்திரிகைகளும், வெளியிட விஷயங்களும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்ப வேண்டும்.

ஆசிரியர்,
'தமிழரசு'
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

சென்னை

டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரவர்களுக்கு
சிவப்பிரகாச சுவாமிகளால் அருளப் பெற்ற
வரப்பிரசாதங்கள்.

பர்மாவில் சகலராலும் புகழ்ந்து
கொண்டாடப்படும் நவரத்தினங்கள்.

# இனி நீங்கள் கவலைப்பட வேண்டாம்

நீங்கள் பசியின்றிக் கஷ்டப்பட்டாலும், இருதய வியாதி, பித்த சோகை, வீக்கம், மதுமேகம், பாரிச வாய்வு, க்ஷய இருமல், சுரம் இவற்றில் எந்த நோயால் நீங்கள் பீடிக்கப்பட் டிருந்தாலும்,

# இன்பசாரம்

புருஷத் தன்மையைத் தரும்



புத்திர உற்பத்தியை யளிக்கும்

என்ற எங்கள் ஒப்பற்ற உயரிய மருந்தை வரவழைத்து உபயோகியுங்கள். உங்கள் நோய் உடனே பரிதி முன் பனிபோல் நீங்கி விடும்.

THE REGISTRAR OF BOOKS 16 JUN 1939 MADRAS
207678
சென்னை
M 241, N30TA

இன்பசார மாத்திரையை இரவில் படுக்கைக்குப் போகும் போது தூள் செய்து வாயில் போட்டுக்கொண்டு பால் சாப்பிட்டு வரின் பசி அதிகரிக்கும்; நரம்புகளுக்கு உணர்ச்சி ஏற்படும்; இரத்த விருத்தி யுண்டாகும். இம் மாத்திரையானது தங்கம் ஒன்றையே செந்தூரம் செய்து பவளம், முத்து, காரோபா முதலான சத்து வஸ்துக்களுடன் விதை தினுசுகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இன்பசாரம் ஆணுக்கு இழந்துபோன ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்வதோடு, இரு பாலர்களின் இச்சையையும் பூர்த்தி செய்து கொள்ள வேண்டிய வலிமையை அளிக்கும். நெடுநாள் குழந்தையில்லாத தம்பதிகளுக்குப் புத்திரசந்தானத்தையும் உதவும்.

இன்பசார மாத்திரையானது க்ஷய இருமலையும் சுரத்தையும் 10 நாளில் குறைத்து விடுகின்றது. க்ஷயரோகத்தைப் போக்குவதில் இதற்கு நிகரான மருந்து இல்லை என்பது நிச்சயம்.

இன்பசார மாத்திரைகள் ஒடிந்த எலும்பைக் கூட்டுவதிலும், சொர்ப்பன ஸ்கலிதத்தை நீக்குவதிலும், சரீரத்திலுள்ள இரணத்தை ஆற்றுவதிலும் சிறந்தது. நூற்றுக் கணக்கான நல்லுரைகள் பெற்றுள்ளது. ஒரே வேளையில் குணம் தெரியும்.

விளம்பர மருந்துகளைப்போல் இம்மருந்தை நினைத்தலாகாது. இதன் அரிய குணத்தை டாக்டர்களும், நோயாளிகளும் ஏராளமாக அனுபவித்துப் புகழ்ந்திருக்கிறார்கள்.

## இன்பசார மாத்திரையைப்பற்றிய சில நற்சாக்ஷிப் பத்திரங்கள்

### ஓர் அரிய சஞ்சீவி

14 வயதுள்ள பெண் குழந்தைக்குச் சன்னிபாத சுரமும், கபவாத சுரமும், அதிகரித்து அபாய நிலைமையில் இருக்கும்போது டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரிடத்தில் காண்பித்ததில் அபாயகரமான நிலையாயினும் இன்பசார மாத்திரையால் குணமடையும் என்று மூன்று மாத்திரை கொடுத்தார். முதல் மாத்திரை கொடுத்த அரைமணி நேரத்திற்கெல்லாம் 105 டிக்கிரி இருந்த சுரம் 102-க்கு இறங்கி விட்டது. மற்ற இரண்டு மாத்திரை கொடுத்ததும் 99-டிக்கிரிக்கு இறங்கி விட்டது. மீண்டும் சுரம் அதிகரிக்கவில்லை. பிறகு டாக்டர் காஞ்சிபுரம் உற்சவத்திற்குச் சென்றார். இப்போது குழந்தை சௌக்கியமாய் இருக்கின்றது. இன்பசாரம் என்னும் மாத்திரை ஓர் அரிய சஞ்சீவி எனவே சொல்லலாம்.

சாமி. வேங்கடேச பெருமாள் செட்டி.

## க்ஷயரோகம் நீங்கிற்று

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய நாயகிக்கு ஏற்பட்டிருந்த க்ஷயரோகம் காரணமாய் அதிகமாய்க் காய்ந்துகொண் டிருந்த சுரமும், இருமலும் தங்கள் இன்பசாரம் என்னும் மாத்திரைகளில் சில புட்டி சாப்பிட்டவுடன் நீங்கிவிட்டது. இப்போது நிறையிலும் அதிகப்பட்டிருக்கின்றது. இருமலும், சுரமும் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டன. தங்களுடைய இன்பசார மாத்திரை ஆச்சரியகரமான மருந்து என்பதில் சந்தேகமில்லை. இதை க்ஷயரோகத்தால் துன்பப்படும் என்னுடைய சிநேகிதர்களுக்கும் சொல்லி வருகின்றேன்.

வி. ராமநாத ஐயர்,

7—5—32. கார்ட்டன் வூட்ராம் கம்பெனி, மதராஸ்.

---

## குழந்தை பிறந்தது

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் இருபது வருஷமாக காசி, இராமேஸ்வரம் முதலான இடங்களுக்குச் சென்று, பல தானங்களைச் செய்தும் எனக்குப் புத்திர சந்தான மில்லாத காரணத்தால் தங்கள் மருந்தால் புத்திர உற்பத்தி யுண்டானால் இருபது ஆயிரம் கொடுப்பதாய் வாக்களித்தேன். தங்களுடைய இன்பசார மாத்திரையின் பெருமையை என்னென்று புகழ்வேன்.

எனக்கு உள்ள சொத்து ஒன்பதாயிரம் தாளக்கூடிய வீடு ஒன்றுதான். என்னிடம் வேறு பணங் கிடையாது. வேண்டுமானால் கிருஷ்ண அண்டு கம்பெனியாரையும், கங்கிபாட்டி சுப்பிரமணியம் செட்டியாரையும் கேட்டுக் கொள்ளுங்கள்.

தங்களுடைய மருந்தால் எனக்கு ஆண் குழந்தை ஒன்று பிறந்தது. இத்துடன் 4 சவரன் அனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொண்டு என்னை மன்னிக்கவும்.

தங்கள் அன்புள்ள,

தேவரப்பட்டு அப்பய்ய செட்டியார்.

கவனிப்பு:—இன்னும் அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் சில மாத்திரம் இங்குக் குறிப்பிட்டோம்.

ஒரு மாதம் சாப்பிடக் கூடிய

**30 மாத்திரைகள் அடங்கிய புட்டி விலை ரூபா 5.**

# சகல மேக சித்தாதி எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலையில் ஒரு தேக்கரண்டி அல்லது அரை அவுன்சு எடுத்துக்கொண்டு ஆழாக்கு பசும்பாலில் கலந்து சாப்பிட வேண்டும். இரண்டு மூன்று தரம் மலம் தள்ளும். மேக வாய்வு, கைகால் பிடிப்பு, உடம்பு வலி நீங்கும். வயிற்றில் தங்கிய வாய்வையும் வெளிப்படுத்துவதுடன், பெண்களுக்குண்டாகும் சூதக வாய்வு, சூதக வலி, பித்த குன்மம், வெள்ளை வியாதி, மூலம், பவுத்திரம், குஷ்டம் இவைகளைப் போக்கும். வயிற்றிலுள்ள இரணங்களை ஆற்றும்.

இந்த எண்ணெய் சாப்பிடும்போது தயிர் சாதம் அல்லது மோர் சாதம் சாப்பிட வேண்டும். எண்ணெயை இரண்டு நாளைக்கு ஒரு முறை சாப்பிட வேண்டும். பாரிச வாய்வுக்கு இது உயர்ந்த எண்ணெய். வாத சரீரம் இளைத்துவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

திரு. டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒரு வருட காலமாய்ப் பல வைத்தியர்களிடம் எண்ணெய்களும், லேகியங்களும், ஆங்கில மருந்துகளும், இன்ஜெக்ஷன்களும் கொடுத்து என் மனைவிக்குச் சிகிச்சை செய்து ஒன்றும் பயன் படவில்லை. கடைசியில் சென்னைக் கோபாலாசாரியார் உங்களைப் பற்றிக் கூறினர். அவர் வார்த்தைக் கிணங்கி தங்களிடம் வந்து சகல மேக சித்தாதி எண்ணெயை வாங்கிக்கொண்டுபோய் 5-நாள் கொடுத்தேன். முதல் நாளிலேயே கணுக்களில் இருந்த மேக நீரினுண்டான வீக்கங்கள் நீங்கிவிட்டன. மூன்றும் நாள் சம்பூரண சுகத்தைத் தந்தது. நீங்கள் கூறியபடி 3-ஆம் நாள் எண்ணெய் சாப்பிடும் வரையில் தயிரன்னத்தை இரவு பகலாகக் கொடுத்து வந்தோம். இப்போது என் மனைவி உலாவி வருகின்றுள். இனி என்ன மருந்து கொடுக்கலாம் என்பதைத் தெரிவிக்கவும்.

சென்னை }
15—5—30 }

இப்படிக்கு,
அண்ணவையங்கார்.

கனம் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

நான் ஒண்ணுக்குப் போகும்போது நீர்துவாரத்திலிருந்து இரத்தம் விழுந்து வந்தது. அதற்குத் தங்கள் சகலமேக சித்தாதி எண்ணெய் 3 வேளை சாப்பிட்டதில் பூரா குணம்பெற்றேன்.

இப்படிக்கு,
இராஜரத்தினம் செட்டி.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தங்கள் முன்னம் அனுப்பிய சகல மேக சித்தாதி எண்ணெயைச் சாப்பிட்டு என் வியாதி சௌக்கியமாய் நீங்கிவிட்டதற்காக நான் தங்களுக்கு மிகவும் நன்றியுள்ளவனு யிருக்கிறேன். இப்பவும் நமக்கு வேண்டியவர்களின் தேவைக்காக என் விலாசத்துக்கு சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1 வி. பி. யில் அனுப்பி வைப்பதுடன் அனுபான பத்திய விவரமடங்கிய டைரக்ஷன் நோடீசும் அனுப்பி வைக்கவும்.

தங்களன்புள்ள,

கிருஷ்ணசாமி நாயகர்,

2—7—34. பாங்கி குமாஸ்தா, மேட்டுத்தெரு, ஆத்தூர்

சேலம் ஜில்லா.

இத்தகைய இன்னும் எண்ணிறந்த நற்சாட்சிகள் பெற்ற

சகல மேக சித்தாதி எண்ணெய் புட்டி 1-க்கு விலை ரூ. 5.

# தைலாமிர்தம்



இத் தைலம் பலவித உயர்ந்த பச்சிலைகளின் ரசமும் பசுவின் பால் கோரோசனை முதலான உயர்ந்த வஸ்துக்களும், மூளையைக் குளிரச் செய்யும் வித்துத் தினுசுகளும் மற்றும் பல கடைச் சரக்குகளும் சேர்த்துத் தயார் செய்யப்பட்டது.

இத் தைலத்தைத் தேய்த்து ஸ்நானம்செய்து வர, கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர் வடிதல், கண் குத்தல், கண்ணில் பூ விழுதல், பார்வை மந்தம், கண் கூசல் முதலான சகல நேத்திர ரோகங்களையும், மூளைக் கொதிப்பு, தலை சுத்தல், மயக்கம், புத்தி மந்தம், சோம்பல் முதலானவைகளையும் நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியைத் தந்து, புத்தித் தீட்சண்யத்தை உண்டு பண்ணும். ஒத்தைத் தலைவலி, கழுத்து நரம்பு வலி, மண்டைக் குத்தல் இவைகள் போம். மூளையின் கொதிப்பால் உண்டாகும் பைத்தியம் நீங்கும்.

**5-பலம் கொண்ட டின் விலை ரூபா 1.**

<u>இணையற்ற</u> **அயத்தங்க திராவகம்**



நண்பர்களே! இந்த மருந்தானது மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே காட்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி பரிகரிக்கும். இம்மருந்தைச் சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்த பாண்டு, ஊதுகாமாலை, எலும் புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்க ளாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதியர் வரை ஆண் பெண் இரு பாலர்களும்

எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம். மக்கள் சுகம்பெற வெண்ணியே குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது.

**நான்கு மாதம் சாப்பிடக் கூடிய மருந்து விலை அணா 12.**

## அபிப்பிராயம்

அன்புள்ள உண்மை வைத்தியரே!

நான் அடைந்த சுகத்திற்கு என் ஆயுளுள்ளவரை உங்களை மறப்பது நீதியாகாது. என் உடல் மிகவும் மெலிந்திருந்தது; இரத்தம் வற்றியிருந்தது; சோம்பல் அதிகரித்திருந்தது; மயக்கம், அசதி, தூக்கம், செமியாகுணம் இவைகள் என்னை அடக்கியாண்டன. பல வைத்தியர்கள் என்னைக் கைவிட்டு விட்டனர். ஒரு பிரபல டாக்டர் இது உனக்கு முற்றிவிட்டது. இனி இதை நிவர்த்திப்பது மிகவும் கடினம்; ஆண்டவன் பிராப்திபடி நடப்பதே இனி ஆகக் கூடியது. நீ வைத்தியம், வைத்தியம் என்று ஏங்காதே! மனம் நாடிய சகல வஸ்துக்களையும் தின்று உன் ஜீவிய காலத்தை முடி. ஒருகால் இவ்வித வழியில் நீ சுகம் பெறலாம்; வைத்தியத்தினுல் பெற முடியாது!' என உபதேசித்தார். என் வாழ்க்கையே சமாப்தி அடைந்ததாக நான் அப்பொழுது எண்ணினேன்.

நிற்க, உங்கள் 'தமிழரசு' பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்து, உங்கள் 'அயத்தங்க திராவகத்'திற்கு 3 பாட்டில்களுக்குச் சென்ற 1933-ம் வருடம் நவம்பர் மாதம் ஆர்டர் கொடுத்தேன். அதை தாங்கள் உடனே அனுப்பினீர்கள். அந்த மருந்தை இந்த 1934-ம் வருடம் டிசம்பர் 6வ வரை சாப்பிட்டேன். அது எனக்குப் புத்துயிர் அளித்தது! புனர்ஜன்மம் கொடுத்தது' என்னை ஒரு வீரபுருடனாக ஆக்கியது. இப்போது நான் சரீர சுகஜீவியாய் இருந்து வருகிறேன். சரீர சம்பந்தப்பட்டமட்டில் உள்ள சுக அம்சங்கள் யாவும் எனக்கு உண்டாகி இருக்கிறது. நான் உங்களை வாழ்த்துகிறேன். உங்கள் குடும்பமும், மருந்தும் ஓங்குவதற்குக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன். எனது இந்திய சோதர சோதரிகள் இதை உட்கொண்டு நன்மை அடைவார்களாக!

G. M. அலிஹுஸையன் M. H. A.

கௌரவ காரியதரிசி, 'ஹுஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிபெட் நாகூர் 26–12–34.

எமது விலாசம்:

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# சௌமியன்

ஓர் இனிய

சினிமாக் கதை

ஆசிரியர்:

பாரதிதாசன்

(காபிரைட்)

ஹிம்ஸையா?—அஹிம்ஸையா எது உபயோகமுள்ளது? உலகின் நிலை என்ன? அக்ரமம் ஜயிக்குமா?—இவைபற்றிச் சினிமா முறையில் இயன்ற ஓர் இனிய நாடகம்.—விலை அணா 6.

நூற்றுக்கணக்கில் வேண்டியவர்கள் விலை விவரம் எழுதித் தெரிந்து கொள்க.

விலாசம்:—

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| பொறுப்பற்ற செய்கையும் பேச்சும் | .... | 402 |
| ஆசிரியர் குறிப்புகள் | .... | 404 |
| இந்தியக் காங்கிரஸ் மந்திரி சபைக்கு எனது வேண்டுகோள் | .... | 409 |
| கோபம் | .... | 412 |
| குழந்தைப் பேறு—பாட்டு | .... | 414 |
| நான் குச்சுக்காரியல்ல. கற்புடையவளே! | .... | 415 |
| யுத்தத்திற்குப் பின் | .... | 417 |
| தமிழ்ப் படங்களின் தற்கால நிலை—சினிமாப் பகுதி | | 419 |
| தியாக பூமி—விமர்சனம் | .... | 425 |
| தங்கம்மாள் யார்? | .... | 430 |
| இரு கைக்குட்டைகள் | .... | 434 |
| 'அபலைத் தாய்' | .... | 439 |
| நகைச் சுவை | .... | 442 |
| தமிழரசு—ஆட்சியும் மாட்சியும் | .... | 445 |
| வறியோன் கண்ட வான்மதி!—பாட்டு | .... | 452 |
| அல்லியும் அரவிந்தமும் | .... | 453 |
| இரு மார்புக்கு ஒரு வாள் | .... | 455 |
| இலங்கை | .... | 459 |
| கருணை—கனகா | .... | 461 |
| 'சாட்சி சொன்ன புறு'—சிறுவர் விருந்து | .... | 465 |
| 'இந்திராபாய்'—தொடர் நாடகம் | .... | 467 |
| வனிதா அல்லது கொலை யுண்ட காரிகை | .... | 472 |


---

குறிப்பு:—'தமிழர'சில் வெளி வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களாகும். அவை யாரையும் குறிப்பிடுவன வல்ல.

கட்டுரையாளர்களின் கருத்துக்களுக்கும், அபிப்பிராயங்களுக்கும் ஆசிரியர் ஒரு சிறிதும் பொறுப்பாளி யாகார்.

நம்பிப் பிரசுரிக்கும் கட்டுரைகள் முன்னரே உரிமை செய்யப்பட்டவையாயின் அதற்குப் பத்திராதிபர் உத்தரவாதியாகமாட்டார்.

அன்பே ஆண்டவன்

# தமிழரசு

(மாத வெளியீடு)

'எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன்....'

ஆசிரியர் : டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்

| மலர் 10 | பிரமாதி ஞு ஆனி மீ 1939 ஞு ஜூன் மீ 15 உ | இதழ் 6 |
|---|---|---|

## பொறுப்பற்ற செய்கையும் பேச்சும்

இப்போதைய சர்க்கார் ஏற்பட்டுச் சுமார் இரண்டு வருஷங்கள் ஆகின்றன. கட்டாய இந்தியை இந்த முட்டாள்தனமான சர்க்கார் ஏற்படுத்திச் சுமார் ஒரு வருஷம் ஆகிறது. கட்டாய இந்தியைத் தமிழர் ஒரே முகமாக எதிர்த்தனர். எதிர்க்கின்றனர். பெரும்பான்மையோர் எதிர்த்தும் அது இருந்து தான் தீரவேண்டும் என்று இந்தச் சர்க்கார் கருதி வந்தது. இந்தச் செயலை முட்டாள்தனம் என்று சொல்லி விட்டால் போதாது. போக்கிரித்தனம் என்றுதான் சொல்ல வேண்டும்.

கட்டாய இந்தியை எதிர்த்தவர்கள்—'தமிழ் வாழ்க! இந்தி ஒழிக!' என்று முணுமுணுத்தார்கள் என்றால், அது இந்தச் சர்க்காருக்கு ஓர் பெருங் குற்றமாகப்பட்டது. ஐயோ பாவம்! என்ன புத்தி! இதன் பொருட்டு குழந்தை, பெண்கள், ஆண்கள், தொண்டு கிழவர் ஆகிய 1001 பேர்களைச் சிறையில் தள்ளினார்கள். தலைவரை— பெரியாரைச் சிறையில் இட்டார்களே!

இதை முட்டாள்தனம் என்றோ, போக்கிரித்தனம் என்றோ சொல்லிவிட்டால் பொருத்தமாகுமா? இந்தச் சர்க்காரை நரபலி கேட்கும் அம்மையார் என்று தானே கருத வேண்டியிருக்கிறது.

பிரதம மந்திரியாகிய ராஜாஜி அவர்கள் சட்டசபையில் கேள்வி கேட்கும்போது, 'இந்தியை எதிர்ப்பதற்காகக் கைது செய்யவில்லை.

வீதிகளில் 'நியூஸென்ஸ்' செய்ததற்காகச் சிட்சிக்கப்படுகிறது' என்றும் பொது மேடைகளில் பேசும்போது இந்தி எதிர்ப்பிற்காக ஒருவரைக்கூட ஜெயிலுக்கு அனுப்பவில்லை எனவும் சொல்லி வந்திருக்கிறார். ஜெயிலுக்கு அனுப்பப்பட்டவர்கள் எல்லாம் 'படிக்காதவர்கள்—காலிகள்—கூலிகள்' என்றும் சொல்லி வந்தார். அதுவுந் தவிற, அவர்கள் அரசியல் கைதிகள் அல்லவென்றும் சொன்ன இவர், இன்று 'இந்தியை எதிர்த்துச் சிறை சென்ற அரசியல் கைதிகளை விடுதலை செய்திருக்கிறோம்' என்று பத்திரிகைகளில் வெளியிட் டிருப்பது, இவர் பேச்சுக்களின் பொய்ப் பிறட்டுகளைக் காட்டி விட்டதல்லவா?

அத்தனைக்கும் ஒரு மாற்று! நல்ல சவுக்கு! இனி மேலாவது புத்தி வருமா? இனிமேல் இந்தவித அக்ரமம் செய்யாதிருக்குமா? இந்தச் சர்க்காருக்கு—'இந்தி எதிர்த்துச் சிறை சென்ற தமிழன்பர் அத்தனை பேரையும் விடு' என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

விடாமல் என்ன பண்ணுவது? சுதந்திர புத்தியுள்ள சர்க்காரோ இது. 'ஓ! ஐயங்கார் சர்க்காரே நீங்கள் ஆண்டது போதும் போதும். இனி நீங்கள் ஓய்வெடுத்துக் கொண்டுபோய், ஏதாவது வேறே பழைய வேலையிருந்தால் அதை நடத்திக்கொண்டிருங்கள்' இதுதான் பொது மக்களின் ஆசீர்வாதம் இன்றைய சர்க்காருக்கு.

ஆனந்தவிகடன் தமிழ்ப் பெரியார் விடுதலை பெற்றதுபற்றி ஓர் குறிப்பு எழுதுகிறது. எல்லா வகையிலும் பெரியாரைப் புகழ்ந்தது. ஆனால், அவர் நல்ல வழியில் அவர் தம்மை உபயோகப்படுத்திக் கொள்ளவில்லையாம்.

ஆனந்த விகடன் கட்சிக்கு—இந்த வார்த்தையை அது சொல்லிக்கொள்ளட்டும். இருந்தாலும் நியாயம் அநியாயம் என இரண்டு இருப்பதாக, ஆனந்தவிகடனுக்கு வெகு நாட்களாக ஞாபகமே இல்லை. பாவம் ஆனந்தவிகடனுக்கு, 'ஆச்சாரி சர்க்கார் செய்வது அத்தனையும் சரி' என்று சப்பைக்கட்டுக் கட்டுவதிலேயே தனது சக்தி செலவழிந்து விட்டது.

தமிழ் நாட்டில் பிறந்து, தமிழ் நாட்டில் வளர்ந்து தமிழர்களுக்கே உலை வைத்து விடுவதே தன் கொள்கையாகக் கொண்டு விட்ட ஆனந்தவிகடன், இனி மேலாவது தமிழர்கள் விஷயமாக ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்று உரைக்கும் நேரம்கூட நெருங்குகிறது.

அதற்குள் தமிழ்ப் பெருங் கூட்டத்தாரைப் பார்த்து 'திருந்துக' என்று சொல்லிக் கொண்டே இருக்கட்டும். மண்டைக் கொழுப்பைத் தமிழர்கட்கு ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கட்டும்.




## இராமசாமிப் பெரியார் விடுதலை

தமிழ் நாட்டின் தலைவரும், ஜஸ்டிஸ் கட்சி லீடரும், உலகப் பெரியாரும் ஆகிய ஈ. வே. ரா. அவர்களை இந்தி எதிர்ப்பு சம்மந்தமாக ஓர் வருடம் தண்டித்துச் சிறையில் வைத்திருந்தார்கள். அவரை யாது காரணமும் கூறாமல் திடீரென கால அளவுக்கு முன்னாலேயே விடுதலை செய்து விட்டார்கள். இதைக் கேட்கச் சந்தோஷப் படுகிறோம்.

ஆனால், பெரியார் பேசியது சட்டப்படி குற்றம் என்று நீதிபதிகள் தீர்மானித்து ஜெயிலுக்கு அனுப்பியது நியாயம் என்று சொல்லும்பட்சத்தில், அந்த நியாயமான தண்டனையினின்று ஒருவருடைய வேண்டுதலும் இல்லாமல் மந்திரி அவர்கள் விடுதலை செய்தார் என்றால் இது அர்த்தமாகவில்லை. ஒன்று மந்திரிக்கு அப்பீல் செய்திருக்க வேண்டும். அல்லது மந்திரிமார்களே நியாயாதிபதி செய்தது தவறு என்று உணர்ந்திருக்க வேண்டும். அப்படிக் கூறுவதற்கு இடமில்லை. ஒரு சமயம் பொது மக்கள் ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டிக் கண்டிப்பதை முன்னிட்டு, விடுதலை செய்திருப்பார்களா என்று பார்த்தால் அப்படியும் சொல்ல முடியாது. ஏனெனில், இந்தி கூடாது என்றும், விற்பனை வரி கூடாது என்றும், புகையிலை வரி கூடாது என்றும் பொது மக்கள் எவ்வளவோ கூப்பாடு போட்டும், அதைப் பொருட்படுத்தாத காங்கிரஸ் அரசாங்கம், பெரியாரை மாத்திரம் பொது மக்களின் ஆர்ப்பாட்டத்திற்குப் பயந்து விடுதலை செய்திருப்பதாகவும் எண்ண இடம் இல்லை. அன்றியும், கூப்பாட்டிற்குப் பயந்து மதிப்புக் கொடுத்து விடுதலை செய்திருப்பார்களேயானால், கட்டாய இந்தியையும் எடுத்திருக்க வேண்டும். அப்படிக்கில்லாமல், பிரதம மந்திரி கவர்னருடன் மே மாதம் 20-ந் தேதிக்குமேல் கலந்து பேசியதின் பின்னர், விளம்பர மந்திரியினால் விடுதலை செய்திருப்பதை நோக்க, ஒரு சமயம் கனம். சர். ஏ. ராமசாமி முதலியார் அவர்கள் ராஜப் பிரதிநிதியிடம் அதாவது வைஸ்ராய் அவர்களிடம் எதிர்க் கட்சியின் தலைவரை சிறையிட் டிருப்பது ஞாயமில்லை என்று விவாதித்திருக்க வேண்டும். அதனை அனுசரித்து வைஸ்ராயின் உத்தரவு பெற்று, ஒரு வேளை விடுதலை செய்திருப்பார்களென்று யூகிக்க வேண்டி யிருக்கிறது. அகில இந்திய அரசியல் குற்றவாளிகளை

விடுதலை செய்ய வேண்டுமென்ற கிளர்ச்சி வடநாட்டில் இருந்ததால், வைஸ்ராய்க்கு எல்லா அரசியல் குற்றவாளிகளையும் விடுதலை செய்ய வேண்டுமென்று காங்கிரஸ்காரர்கள் மனுச் செய்த காரணத்தால், எல்லா அரசியல் குற்றவாளிகளையும் வைஸ்ராய் அவர்களே விடுவிக்க ஏற்பாடு செய்திருப்பாரென்று நினைக்க இடமிருக்கிறது. இந்தி எதிர்ப்புக் குற்றவாளிகள் அரசியல் குற்றவாளிகளானதால் விடுதலை செய்யும்படி உத்தரவிட்டிருக்க வேண்டும். நாம் யூகிப்பது சரியா யிருந்தால் காங்கிரஸ் மந்திரிகள் பதவியி லிருப்பது மானமற்ற செய லாகும். காங்கிரஸ் மந்திரிகள் செய்யும் காரியத்தில் வைஸ்ராய் தலையிட்டால் தாங்கள் பதவியினின்று விலகவேண்டியது. ஆகை யால், வைஸ்ராய் தலையிட்டார் என்பது நன்ருய் வெளிப்படவில்லை. ஆதலால் இன்னும் சில காலத்திலாவது இதற்குக் காரணம் கூற மந்திரிமார்கள் முன் வருவார்களல்லவா? அதுவரை பொறுத்திருந்து பார்ப்போம்.

## ஈ. வே. ரா. பெரியார் தானு?

ஈ. வே. ரா. அவர்களை உலகப் பெரியார் என்று சொல்லுவது பொருந்தும். ஏனெனில், அப் பெரியார் எளிய வாழ்க்கையில் வாழ் கிருர்—எளிய உணவில் வாழ்கிருர்—ஏழைகளோடு உறவாடுகிருர்—ஏழைகள் துக்கம் தனது துக்கமாகப் பாவிக்கிருர்—தன்னைத் தலைவனுக மதிப்பதே கிடையாது—தன்னை எப்பொழுதும் தொண்ட ணுகவே பாவிக்கிருர்—பிறருக்கு நன்மை செய்வதிலே கண்ணுங் கருத்துமா யிருக்கிருர்—பிறரிடமிருந்து தான் எந்தவித நன்மையை யும் எதிர் பார்ப்பதே கிடையாது. ஆகிய இத்தகைய மேலான குணங்கள் அமைந்திருப்பதோ டல்லாமல், ஓய்வின்றிச் சதா காலமும் ஆங்காங்குச் சென்று மக்கட்குச் சொல்ல வேண்டிய வற்றைச் சொல்லிக்கொண்டு வருவதால் சரீரக் கஷ்டத்தையும், சிரமத்தையும் கவனிக்காமலே உழைக்கிருர். இதில் ஆயிரத்தில் ஒரு பங்குகூட மகாத்மாக்களும் பரமாத்மாக்களும் என்று சொல்லப் பட்டவர்கள் செய்ய முடியாதென்பது திண்ணம். அதுவும் தவிற, 'எனக்கு ரத்தக் கொதிப்பு ஏற்பட்டு விட்டது—ஆயாசம் உண்டாய் விட்டது—பலயீன்மா யிருக்கிறேன்—என்னுல் பேச முடியாது. மௌனமா யிருக்கிறேன்—எடையில் குறைந்து விட்டேன்—நாடி வேகமாய்ப் போகிறது—இருதயம் மெதுவாகச் செல்கிறது' என்றெல்லாம் அப்போதைக்கப்போது பத்திரிகைகளில் கொட்டை கொட்டை எழுத்துக்களில் பிரசுரம் செய்துகொண்டு, தன்னை மகாத்மா என்றும், பரமாத்மா என்றும் கூறிக்கொள்ளும்படி செய்யும் வழக்கம் (எண்ணம்) கிஞ்சித்தும் நம் பெரியாரிடத்தில் இல்லவே இல்லை. ஆதலால், இவரை ஒப்பற்ற பெரியார் என்று சொல்வதை ஒருவரும் மறுக்க இயலாது. அப்படி யாராயினும்

மறுப்பார்களேயானால், அத்தகையவர்கள் பிணமணியும் பிசாசுக் குணமும் படைத்த கடினச் சித்தத்தையுடைய, ஆரிய அசுரர்களாக இருப்பார்கள் என்பதிற் சந்தேகமில்லை.

நமது பெரியார் உலகம் போற்றும் பெரியாராக இருந்தும், இந்த ஆரிய ராட்சச மக்கள் ஒன்று சேர்ந்துகொண்டு கட்டுப் பாடாக எதிர்ப் பிரசாரம் மூலம் பொய் சொல்லி மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்துகொண்டு வருவதால், ராட்சச ஆட்சியில் கொஞ்ச காலம் பெரியாருக்குத் துன்பங்கள் விளைவித்து வந்தாலும், சிலகாலம் பொறுத்தாவது உண்மைத் தமிழ் மக்கள் இப்பொழுது ஆரிய அரக்கர் செய்யும் தொழிலை மேற்கொண்டு செய்யவொட் டாமல் தடுத்து விடுவார்களென்பது உறுதி. பெரியார் வெளி வந்திருக்கும் இந்தச் சமயத்தில், பதினாயிரம் ஆண்டுகள் இராமாயண காலத்திற்கு முன்னேயே குடியேறியிருந்த இலங்கை நாட்டில், அறு நூறு வருடங்கட்கு முன்னே குடியேறிய சிட்டகரங் தேசத்தார், இலங்கையில் அந்நாட்டு * இலவ மக்களோடு கலந்து சிங்களவர்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு, தமிழர்களை அந்நாட்டினின்று வெளிப் படுத்த முயற்சிப்பது எப்படி இருக்கிறது என்று கேட் டால், வடநாட்டில் இருந்து வந்த ஆரியர்கள், தமிழ் நாட்டில் ஆலயம் முதலிய சாதனங்களை ஏற்படுத்திக்கொண்டு, தமிழ் நாடு தங்களது என்று சொல்லும் தன்மைபோலக் காணப்படுகிறது. சிங்களவர்கள் தமிழர்களை இலங்கையை விட்டுப் போவென்று சொல் வதில் தப்பில்லை என்றால், ஆரியர்கள் தமிழ் நாட்டைவிட்டு வடநாடு செல்ல வேண்டுமென்று சொல்வதில் கிஞ்சித்தேனும் பிசகில்லை. இதனை ஈ. வே. ரா. பெரியார் அவர்கள் விளக்கிச் சொல்வதால் ஆரியர்களுக்கு ஓர் பெரிய விரோதியாய் ஆகிறாரே யொழிய, வேறு காரணத்தால் அவரை வெறுப்பதற்கில்லை. எனவே, ஆரியர்களும் அவர்களிடம் கூலி வாங்கிப் பிழைக்கும் துரோகிகளும் ஒரு சமயம் பெரியாரைக் குறை கூறலாமே யொழிய, அதுவும் பொய்க் காரணங்களைக் கூறிப்—பொய்ப் பிரசாரங்களைச் செய்து வயிறு பிழைக்கலாமே யொழிய உண்மையால் அல்ல என்பதை உலகம் அறிந்து விட்டது. இனி ஏழை மக்கள் சமதர்மத்தையும், சமதர்மக் கொள்கைகளையுடைய இந்திய நாட்டுத் தலைவர்களாகிய ஈ. வே. ராப் பெரியாரையும், சுபாஷ் சந்திரபோஸையும் பின்பற்றுவார்கள் என்பது உறுதி! உறுதி!! உறுதி!!!

## ராஜ்கோட்டும் மகாத்மா காந்தியும்

ராஜ்கோட்டில் நடந்த சம்பவங்கள் அனைத்தும் இன்று முடி வடைந்து விட்டது. அது எப்படி முடிவடைந்தது என்பதுதான் அபூர்வமும் ஆச்சர்யமுமானது. ராஜ்கோட் தகராறை உண்டு

* 'இலவாஸ்' என்பது அந்நாட்டுப் பூர்வ குடிகள்

பண்ணைத் தலைமை வகித்து நடத்தியவர்கள் பிரஜா பரிஷத் சபையார்களும், சர்தார் வல்லபாய் படேல் அவர்களும், ஸ்ரீமதி காந்தியும் ஆவார்கள். கனம் படேல் அவர்கள் சொல்லும் வார்த்தைகளை சொல்லும் நீதிகளை—சொல்லும் சட்டங்களை வேதமாகப் பாவித்துக் காரியத்தில் நடத்தி வருவோர் மகாத்மா காந்தியவர்கள் ஆவார்கள். ராஜ்கோட் விஷயமாக நடந்த தகராறில் மகாத்மா காந்தியவர்கள் தவறு செய்து விட்டதாகவும் மன்னிக்கும்படியும் எழுதியதால், ராஜ்கோட் தகராறு முடிவுக்கு வந்துவிட்டது. என்றாலும் இப்பொழுது நடந்த தவறானது மகாத்மா காந்தியைப் பொறுத்ததல்ல. தவறு செய்தவர்கள்—யோசனையின்றிக் காரியத்தில் நுழைந்தவர்கள்—பிற்போக்கான வழியில் சென்றவர்கள்—தப்பான மார்க்கத்தை மக்களுக்குப் போதித்தவர்கள் வல்லபாய் படேலும், ஸ்ரீமதி காந்தியாரும், பிரஜாபரிஷத் சபையாரும் ஆவார்கள். அவர்கள் செய்த தப்பிதத்தை, தான் தப்பிதம் செய்ததாக மகாத்மா காந்தியவர்கள் எழுதி யிருக்கிறார். இது தவறு என்றாலும் இதில் யார் தப்பு செய்திருந்தாலும் இதில் வலங்கை காங்கிரஸ்காரர்களுக்கு ஒரு பெருந் தோல்வி. இத்தகைய தான் செய்யும் காரியத்தை யோசனையின்றித் தவறான வழியில் செய்யக் கூடிய இவர்களைக் கொண்டு காங்கிரசின் மூலம், நாட்டுக்கு நலம் செய்ய முடியும் என்று சொல்வது பொறுத்தமற்றது. தாங்கள் யோசனை யற்றவர்கள்—பொறுப்பற்றவர்கள் என்பதை ராஜ்கோட்டில் காட்டிக்கொண்டார்கள். ஆதலால், இத்தகைய பிற்போக்குடைய—தப்புவழியில் செல்லக்கூடிய இவர்கள் கையில் காங்கிரஸ் சிக்கி யிருப்பது தேசத்தின் துரதிஷ்டமாகும். தேசமக்கள் அனைவரும் மகாத்மாகாந்தி அவர்களால் நாட்டிற்குப் பெரிய நன்மையுண்டாகுமென்று நினைக்கின்றனர். மகாத்மா காந்தியவர்க்கோ வல்லபாய் படேல் அவர்களாலும் தனது சம்மந்தி அவராலும் நாட்டுக்குப் பெரிய நன்மை உண்டாகுமென்று நினைக்கிறார். இவற்றுள், படேலும், ராஜாஜியும் உலகில் மகாத்மா காந்திக் கிருக்கும் செல்வாக்கை வைத்துக் கொண்டு தங்கள் இஷ்டம்போல் எல்லாக் காரியங்களையும் செய்துவிடலாமென்று நினைக்கின்றனர். மகாத்மாகாந்தி அவர்களோ, வல்லபாய் படேல் அவர்களையும் ராஜாஜி அவர்களையும் வைத்துக்கொண்டு உலகில் பேரும் புகழும் செல்வாக்கும் அடைந்து வாழலாமென்று நினைக்கின்றார். ஆதலால், இவர்கள் ஒருவரை ஒருவர் பற்றிக் கொண்டு நிற்கின்றனர். மகாத்மாகாந்தியை விட்டால் படேலுக்கும் ராஜாஜிக்கும் நாட்டில் செல்வாக்கு இராது. அதுபோலவே படேலையும் ராஜாஜியையும் விட்டால் காந்திக்கு செல்வாக்கு இராது என்பது திண்ணம். இதில் பலர் பலவிதமாக நினைக்கலாம். யார் எப்படி நினைத்தாலும் நான் சொல்வது சரி என்பதற்குச் சில திருஷ்டாந்தங்கள் இங்கே குறிப்பிடுகிறேன்.

1932-ம் ஆண்டில் மகாத்மா காந்தியவர்கள் இரண்டாவது முறை வட்டமேஜை மகா நாட்டுக்குப் போய்த் திரும்பி வந்தவுடன், ஆதிதிராவிடருக்குப் பெரிய நன்மையைச் செய்யலாமென்ற அவாவோடு முதல் முதல் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அந்த அறிக்கையில் எல்லா ஆலயங்களும் ஆதிதிராவிடருக்குத் திறந்துவிட வேண்டுமென்று கூறினார். அதுசமயம் காங்கிரசின் தலைவராகயிருந்தார். தலைவர் என்ற ஹோதாவில் அறிக்கை வெளியிட்டார். அத்தகைய அறிக்கையைக் கண்ட இன்றையமேல் ஜாதி சகோதரரெனச் சொல்லிக்கொள்ளும், இப்பொழுது வலங்கைக் காங்கிரசாக இருக்கும் படேல் கூட்டத்தாரும், மேற்படி கூட்டப் பத்திராதிபர்களும் பத்திரிகையின் மூலமாகவும் மேடைகளிலும் சீறிவிழுந்ததோடுமில்லாமல், காசியில் மகாத்மா காந்தியவர்களைக் கொல்ல ஊர்வலம் வரும்போது வெடிகுண்டு வீசி எறிந்தார்கள். தெய்வசகாயமாய் அந்த வெடிகுண்டு விழுந்த காரில் மகாத்மா காந்தியவர்கள் இல்லாததால் அவர் உயிர் காக்கப்பட்டது. இதையெல்லாம் அறிந்த மகாத்மா காந்தியவர்கள் காங்கிரஸிலிருந்து ராஜிநாமாச் செய்துவிட்டு, தனிப்பட்ட முறையில் ஆதிதிராவிடர்களுக்கு வேலை செய்யப் போகிறேனென்று மூலையில் அடங்கி விட்டார். அன்றுமுதல் இன்றுவரை அவர் காங்கிரசில் சேராமல் தனியாகவே இருக்கின்றார். இத்தகைய மகாத்மா ஆனவர் சில காலம் சும்மாயிருந்து, பிறகு மேல் ஜாதி வகுப்பார் அவர்களுடைய விருப்பங்களுக்கு மாறாக நடந்துகொண்டால் நாட்டில் தனக்குச் செல்வாக்கு இருக்காது என்பதை உணர்ந்து, படேல் அவர்களை வலப்பக்கமும் ராஜாஜி அவர்களை இடப் பக்கமும் அமைத்துக் கொண்டார். இவர்களை அமைத்துக்கொண்ட பிறகு இவர்கள் மூலமும் எல்லாப் பத்திரிகைகள் மூலமும் எல்லா மேடைகள் மூலமும் மீண்டும் புகழ் உண்டாயிற்று என்பதை எல்லோரும் உணர்வார்கள். இன்று ஒரு வல்லபாய் படேலோ ராஜாஜியோ மகாத்மா காந்தியை வெறுப்பார்களேயானால், அவரைச் சேர்ந்த பத்திரிகைகளெல்லாம் அவரைத் தூற்றும். அவரைச் சேர்ந்த இனத்தவரெல்லாம் அவரைத் தூற்றுவர். ஆதலால் மகாத்மாகாந்தியவர்கள் பார்ப்பன அடிமையாய் இருந்தால்தான் அவருக்கு நாட்டில் புகழ் கிடைக்கும். அவரைப் போற்றித் திரிந்தால்தான் பார்ப்பனர்களும் புகழோடு வாழமுடியும். ஆதலால், இவர்கள் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிய முடியாது என்பதை உணரவேண்டும். இத்தகைய இவர்கள் எந்தக் காலத்திலும் எந்த வகையிலும் போஸ் கட்சியை ஆதரிக்கவும் அவரோடு சேர்ந்து உழைக்கவும் முடியாது. இந்தப் பெரும் சூட்சியை உணராத பாமர மக்கள், மகாத்மாகாந்தி பேரால் ஏமாந்து பார்ப்பன அடிமைகளாக வாழத் தலைப்படுவது, தற்கொலை செய்து கொள்வதற்குச் சமமேயாகும். அறிவுடைய

# இந்தியக் காங்கிரஸ் மந்திரி சபைக்கு எனது வேண்டுகோள்

[கோழும்பு - தோழர் சோமசட்டநாதன்]

இந்திய நாட்டின் ஏகப் பிரதிநிதி ஸ்தாபனமாகவுள்ளது காங்கிரஸ்! பூரண சுயராஜ்யத்தை லக்ஷியமாகக் கொண்டது காங்கிரஸ்! ஏழைகள் துயரைக் களைந்து வறுமைப் பிணியைப் போக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது காங்கிரஸ்! தாழ்த்தப்பட்டவர் முதலிய சிறுபான்மை வகுப்பினரின் உரிமைக்குப் பாடுபடுவது காங்கிரஸ்! தடிஅடி பட்டும் சிறை வாசம் புரிந்தும் செய்தற்கரிய தேசத் தொண்டு செய்து பெறும் புகழ்பெற்றது காங்கிரஸ்! ஏதுமறியாப் பாமரர்கள் உள்ளத்தும் சுதந்திரம் உணர்ச்சியை ஊட்டியது காங்கிரஸ்! அதிகாரவர்க்க ஆணுவத்தையும் முதலாளி வர்க்க மூர்க்கத் திமிரையும் நீர்த்துளி செய்து பாடு பாடுவது காங்கிரஸ்! தன்னலவாதிகள், தேசத் துரோகிகள் ஏழைகளுக்கிரங்கா ஈனச் செல்வர்கள், பட்டம் பதவி மோகங்கொண்ட திட்டமில்லாத கொள்கை யுடையவர் ஆகியவர்களின் இறுமாப்பையும் செருக்கையும் இறங்கச் செய்து, சென்ற தேர்தல்களில் எல்லாம் அவர்களை முறியடித்து வெற்றி மாலை சூடிவருவது காங்கிரஸ்! ஓர் பால் சில பேர் உண்ட உணவு ஜீரணியாமல் வருந்திப் படுத்துப் புரளவும், மற்றோர்பால் கடுவெயிலில் இளையோரும், பெண்டிரும் முதுமைப் பருவத்தினரும் நெற்றி வியர்வை நிலத்தில் விழவும், தளர்ந்த யாக்கை தள்ளாடவும், இளமை யாக்கை வாடவும், பாடு பட்டுப் பாடுபட்டுப் பாதி வயிற்றுக் கஞ்சியும் பெறுது அலமருங் கோரக் காட்சி நிலையைக் கொலை செய்து, உழையாதவர் உழைத்து ஊதியம் பெறும்படி செய்யவல்லது காங்கிரஸ்! நாள் ஒன்றுக்கு 10 மணி நேரம் தொழிலாளர்களை நனிவருத்திக் கடும் வேலை வாங்கியும், அவர்களுக்குப் போதிய கூலியும் விடுமுறையும் அளிக்காத பணக்கார நயவஞ்சகச் சுயநல முதலாளிகள் கொடுமைகளையும், ஏழைத் தொழிலாளர்கள் தம் இயம்புதற்கரிய இன்னல்களையும், வேரோடு களைந்து சீர்பெறத் திருத்தும் நன்னோக்கம் கொண்டது காங்கிரஸ்! நிறத் திமிர், ஜாதித் திமிர், பணத் திமிர்

---

மக்கள் இவற்றை நன்கு ஆராய்ந்து போஸ் கட்சியை ஆதரித்து, பார்ப்பனக் காங்கிரசை மாற்றி யமைக்கும்படிச் செய்வதற்கு போஸ் கட்சியில் எல்லோரும் மெம்பராகச் சேர்ந்து உழைக்க வேண்டும். போஸ் கட்சியே நம்மை சுதந்தர வாழ்வில் வாழச் செய்யும். படேல் கட்சி நம்மை அடிமைக் குழியில் வீழச் செய்யும் என்பதை உணருங்கள்! உணருங்கள்!! உணருங்கள்!!!

முதலிய திமிர்களைப் பொடி செய்து ஒற்றுமை, சாந்தம், அமைதி முதலிய உயர் பண்புகளை நிலைநாட்ட விளைவது காங்கிரஸ்! உயர்ந்தவர் தாழ்ந்தவர், உறவினர் அல்லோர், இல்லோர் எனும் வேறு பாடு கருதாது யாவரையும் ஒப்ப மதிக்கும் வெற்றி வாய்ந்தது காங்கிரஸ்! தீண்டாமைப் பேயையும் தெரு நடக்க ஒண்ணாமையையும் மாண்டொழியச் செய்ய மடிகட்டி நிற்பதும் காங்கிரஸ்! சரித்திரக் காலந் தொட்டு மக்களை வருத்திய கள்ளரக்கன் குலவேரைக் கல்லி யெறிந்து வருவது காங்கிரஸ்! இத்தகைய பேரும் புகழும் பெருஞ் சிறப்பும், ஆற்றலும் உயர்வும், அமைய வரப்பெற்ற காங்கிரஸ் மகா சபையின் ஆட்சி ஏழு மாகாணங்களில் நடைபெறுகின்றது. ஏனைய மாகாணங்களைவிடச் சென்னை மாகாணத்திலே காங்கிரஸ் மந்திரி சபைக்குச் செல்வாக்கும் மெஜாரிட்டியும் அதிகமென்றே கூற வேண்டும். ஆகவே, இந்த நல்ல தருணத்திலேயே பல நன்மையான காரியங்கள் செய்யப்படல் வேண்டும். நமது காங்கிரஸ் மந்திரிமார்கள் மிக மிக விரைவில் புதிய புதிய சட்டங்களும் திருத்தச் சட்டங்களும் அமைத்து வருகிறார்கள். பொதுமக்கள் நலங் கருதிய சட்டங்கள் வரவேற்கத் தக்கனவே. தேச மக்கள் குறைகளை போக்குவதற்கும் தற்கால நெருக்கடியை ஒருவாறு சமாளிப்பதற்கும் புதிய வரிப் போடுவதைவிட்டு செலவினங்களைக் குறைக்க வேண்டும். காங்கிரஸின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றான ஆலயப் பிரவேசச் சட்டம் ஏற்படுத்தாமல், காங்கிரஸ் மந்திரிமார் காலந் தாழ்த்தி வருவது நாட்டின் துரதிஷ்டமென்றே சொல்ல வேண்டும். மேலும் அடக்குமுறைச் சட்டம், ராஜத்துரோகச் சட்டம், ஒழிக்கப்படல் வேண்டும். சத்தியத்தையும், அகிம்சையையும், சாந்தத்தையும், சமாதானத்தையும், அமைதியையும் கொண்ட காங்கிரஸின் ஆட்சியிலேயே மேற்கூறிய சட்டங்கள் யொழிக்கப் படாமல் இருப்பது காங்கிரஸின் கொள்கைக்கே விரோதமென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். தொழிலாளர் நலன்கள் கவனிக்கப்படல் வேண்டும். முதலாளிமார் கொடுமையின்று தொழிலாளிகள் விடுபடவும், வேலை நேரக் குறைவும் தக்க கூலியும் போதிய விடுமுறையும் பெற்றுத் தொழிலாளர் நலன் உறவும் வேண்டுவன செய்ய வேண்டியது காங்கிரஸ் சர்க்காரின் தலை சிறந்த கடமை. காங்கிரஸ் ஆட்சி நடக்கும் காலத்திலே வேலை நிறுத்தங்கள் நடைபெறுவதும் ஏழைத் தொழிலாளர்கள் இன்னலுறுவதும் முறையல்ல. மேலும் வருங்கால உலகத்திலாவது படித்தறியாத பாமரர் ஒருவரும் இல்லையென்னும்படி, தற்கால இளைஞர் அனைவரும் கல்வி கற்றுத் தேற்சி பெறுவதற்காகக் கட்டாயக் கல்வி முறைத் திட்டம் அமைக்கப்படல் வேண்டும். கூடுமானவரை வரியைக் குறைக்க வேண்டுமே யல்லாது நாட்டு மக்களுக்கு நலந்தருவதாயினும், தற்கால நிலையில் புது வரிகள் விதிப்பது வேண்டத் தக்கதல்ல.

காங்கிரஸ் பதவி ஏற்றதன் காரணமே நாட்டு மக்களுக்குக் கூடிய வரையில் நன்மை செய்வதற்கே யொழிய பதவி மோகத்தாலல்ல. எனவே, காங்கிரஸ் ராஜ்யத்தில் நமது குறைகளெல்லாம் ஒழியு மென்றும், வறுமைப் பிணியே நம்மைவிட்டு நீங்கிவிடுமென்றும், ஏழைத் தொழிலாளரும் ஏழை விவசாயிகளும் எதிர் பார்த்து இருப்பது இயல்பே. இங்ஙனம் எதிர்பார்த்திருந்தும் தொழிலாளர், விவசாயிகள் ஏமாற்றமடையாமல் இயன்ற அளவு பயன் பெறவும், ஹரிஜன மக்களுக்கு ஆலயக் கதவுகள் திறந்துவிடவும், மக்கள் அனைவரும் கல்வி பெற்று, பயனடையக் கட்டாயக் கல்வித் திட்டம் ஏற்படவும், அடக்கு முறைச் சட்டம் அடக்கப்படவும், ராஜத் துவேஷச் சட்டம் ரத்து செய்யப் படவும், செய்ய வேண்டியது காங்கிரஸ் மந்திரி சபையின் இன்றியமையாத கடமையாகும். அன்றியும், இவையே காங்கிரஸின் பொது வேலைத் திட்டங்களும் ஆகும். எனவே, இத்தகைய திட்டங்களைக் கூடியவிரைவில் நிறை வேற்றி நாட்டு மக்களுக்கு நலம் புரியுமாறு காங்கிரஸ் மந்திரி சபையை வேண்டிக் கொள்கிறேன்.

---

## ஓர் நற்சாட்சி

இதைக் கண்ணுறும் சகோதர சகோதரிகளுக்குத் தெரிவித்துக் கொள்வது. எனக்கு வயது 35. என் தலை சுமார் பத்து வருடமாக வழுக்கைத் தலையாக இருந்தது. சுமார் 4 அங்குல அகலத்திற்கு உச்சியில் வழுக்கை ஏற்பட்டிருந்தது. அதற்கு நான் கணக்கற்ற ரூபாய் செலவு செய்து வைடெக்ஸ் (Vitex) முதலான பல மருந்து களையும் உபயோகித்துப் பலன் தராமற் போய்விட்டது. கடைசியில் ஒக்கூர் லக்ஷ்மணன் செட்டியார் அவர்களும் மற்றும் பலரும் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களிடம் சென்று 50 ரூபாய் கொடுத்து மருந்து வாங்கி உபயோகித்து வழுக்கைத் தலையில் மயிர் முளைத்ததாகக் கேள்விப்பட்டு, நானும் சென்னை வைத்தியநாத முதலி வீதி, 31-ம் நெம்பர் வீட்டிலிருக்கும் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களிடம் சென்று விசாரித்தேன். அவர் வழுக்கைத் தலையில் மயிர் முளைக்கச் செய்வதாய் உறுதி கொடுத்தார். பிறகு மருந்தை வாங்கி உபயோகித்துப் பார்த்ததில் 20 நாளில் தலை பூராவும் மயிர் முளைத்து விட்டது. அதைக் கண்ட எனக்கு அளவில்லா மகிழ்ச்சி யுண்டாயிற்று. என் மனம் வழுக்கைத் தலையால் பட்ட கஷ்டம்போல் எத்தனையோ பேர் வழுக்கைத் தலையா யிருப்பதால், அவர்களெல்லாம் ஷை டாக்டரிடம் மருந்து வாங்கி உபயோகித்து தங்கள் மனக் கவலையை மாற்றுவார்க ளென எண்ணி இதை வெளியிட்டேன். —S. K. சாமி, மிராஸ்தார்.




# கோபம்

[ப. சுந்தரவேலு - புதுவை]

தோழி சரோஜினி!

இறைவனருளால் எல்லா நலமும் பெற்று இன்புடன் வாழ்வாயாக.

நினது கடிதம் கிடைத்தது. அது என் மனதைப் புண்படுத்தியதே யொழியச் சந்தோஷத்தை யுண்டுபண்ணவில்லை. அதற்குக் காரணம் உன்னிடம் குடி கொண்டுள்ள கோபமாகும்.

பிறர் பேசுவது நமது கருத்துக்கு மாறுபட விருந்தாலும், நாம் பேசுவதைப் பிறர் சரிவரக் காது கொடுத்துக் கேட்கா விட்டாலும், நாம் சொல்வதையோ செய்வதையோ சரியென ஒப்புக் கொள்ளா விட்டாலும், நாம் அவர் மீது வெறுப்புத் தோன்றப் பேசுவதே கோபம் என்று சொல்லப்படும். கோபமென்பது லோபம் முதலிய அறுவகைக் குணங்களில் முதன்மை உறுவது.

நமதருகே துட்ட சிநேகனிருந்து கொண்டிருப்பதை யொக்கும் கோபமாகிய தூர்க்குணம் இருப்பது. துட்ட சிநேகத்தால் விளையும் தீமைகள் சொல்லி முடியாது. கோபத்தாலுண்டாகும் தீமைகளும் அத்தன்மைத்து என்றால் சாலப் பொருந்தும். கோபம் உண்டாகுமிடத்தில் அதைத் தடுத்துக் காக்க வேண்டும். தடுக்காவிடில் மதியிழந்த மன்னனைப் போலவும், குடிமூண்ட குடிகாரனைப் போலவும், பைத்தியக்காரனைப் போலவும், அறிவிழந்து, கண்சிவந்து, கைகால் துடிதுடிக்கப் பேச்சில் இனிமையொழிந்து கண்டதை யுடைக்கவும் கண்டபடி பேசவும் செய்கிறது.

அதுபோது தாயென்றும், தந்தையென்றும், சகோதரியென்றும், சகோதர னென்றும், மனைவி யென்றும், மக்களென்றும், நண்ப ரென்றும் பார்ப்பவருமுண்டோ? இல்லை! ஆனால் 'குடிகாரன் பேச்சுப் பொழுதுவிடிந்தால் போச்சு' என்பதைப் போன்று கோபந் தெளிந்தபின், தாம் செய்த பிழையை எண்ணிக் கவலைப் படுவாருமுளர். அதனால் ஏற்படும் பயன்தான் என்னே? தன்னைத் தானே கொலை செய்து கொள்வதுதான்.

வெகுளியே உயிர்க்கெலாம் விளைக்கும் தீவினை
வெகுளியே குணந்தவம் விரத மாய்க்குமால்
வெகுளி யறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையால்.

கோபமே பிறவியைக் கொடுக்கும் கொள்கையாம்
கோபமே யறிவினைக் குறைக்குங் குட்டநோய்
கோபமே தாயையுங் கொல்லுங் திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ.

கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினான்
கோபத்தால் நகுடனும் கோல மாற்றினான்
கோபத்தா லிந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே.

என்று திருவாய் மலர்ந்தருளிய ஆன்றோர் செய்யுட்களை நோக்கின் கோபத்தா லேற்படும் தீமைகள் சொல்லுந்தரத்ததோ?

இக்கடிதம் உனக்கெழுதியதின் காரணம் என்னவெனில், உன்னிடம் குடிகொண்டுள்ள கோபமாகிய குட்ட நோயை, மன மெனும் மருந்தால் சௌக்கியப்படுத்தி நல்வழிப்படுவா யென்பதே. இன்று தொட்டே இன்னல்தரும் இராக்கதனை இருதயத்தை விட்டொழி! மந்தையிலுள்ள செம்மறி ஆடுகளில் ஓர் ஆடு முதலில் எங்குச் செல்கிறதோ, அவ்விடத்தை நோக்கியே மற்றைய ஆடு களும் செல்லும். உன் வீட்டுக்கு முதல் பிள்ளையா யிருக்கும் நீ செல்லும் வழியேதான் உன் தம்பி பூபதியும் செல்லுவான். அவன் நல்வழிப்பட முதலில் நீ நல்வழிப்படு!

மற்றைய விஷயங்களுக்கு உன் கடிதம் கண்டு.

இப்படிக்கு,

எந்நாளும் இறைவனிடம் உனது க்ஷேமத்தைக் கோரும் உயிர்ச் சிநேகிதை,

லீலாதேவி.

# குழந்தைப் பேறு

[புதுவை - ந. சபாபதி]

'காதல் விளைவே! கமழும் மணமே!
சோதி நிறைந்த சுடரே! செல்வமே!
என்குருதி பாயும் இன்பவள வயலே!
எனக்கன்பு செய்யும் என்ஆர் உயிரே!
கட்டிக் கரும்பே! கண்ணே மணியே!
மட்டிலா இன்பப்! பெருக்கே!' என்று
கொஞ்சிக் குலவினள் குறுநடைக் குமரனொடு
அஞ்சுகம் என்னும் அன்பார் நங்கை.
அப்பொழு தங்கே யிருந்த கணவன்
இப்புகழ் வார்த்தையை இனிது கேட்டே
'உன்மீது பிள்ளைக் கன்புண்டு; ஆனால்
என்மீ தில்லை. இருக்கிற தென்றால்
மெய்ப்பித்துக் காட்டுவாய்' என்றான்; அந்த
மொய்குழல் அஞ்சுகம் குமரனை நோக்கி,
'கண்ணே! கரும்பே! தந்தைக்கு நீதான்
உண்மை அன்புடன் ஒருமொழி உரைத்திடு'
என்றொரு முத்தம் ஈந்து நிறுத்தினள்.
இளையான் தந்தையை ஏறிட்டுப் பார்த்தான்;
உள்ளம் நினைத்த ஒருசொல் தன்னை
மெள்ள வெளியில் தள்ள நினைத்தும்
முடியாது போகவே, திடுமெனப் பாய்ந்து
வருமொழி குழறிப் பெருஞ்சிரிப் பாகத்
தந்தை ஆரத் தழுவினன் சிறுகையால்!
அந்த விந்தையில் அகம்பறி கொடுத்தான்
நற்குணத் தந்தையும்! பொற்கொடி அஞ்சுகம்
'மொழியால் உரைக்க வழியிலா தென்மகன்
விழியால் உரைத்தான்! மெய்யால் உணர்த்தினன்!
மொழியால் உரைப்பதைக் காட்டிலும் என்மகன்
விழியால் மெய்யால் விளக்கிய அன்பே
சீரிய அன்பிதைத் தெளிந்தோர் போற்றுவர்;
யாரிது போலக் கள்ளமில் லாமல்
அன்புளங் காட்டுவர்' என்றுதன் மகவை
இன்புறத் தழுவினள் எழுந்த
அன்பினால் செய்த செயற்கள விளையே!

# நான் குச்சுக்காரியல்ல, கற்புடையவளே!

[ Anand ]

நான் ஓர் சிறந்த தனவந்தக் குடும்பத்தில் பிறந்தவள். என் பெற்றோர்கள் பெரும் தனவந்தர்களாகையால் என்னைச் செல்வமாகச் சீராட்டித் தாலாட்டிக் குழந்தைப் பருவத்தில் பெருமையுடன் அருமையாக வளர்த்தனர். என் குழந்தைப் பருவத்தில் நான் வளர்க்கப்பட்ட சிறப்பு எனக்கு நன்கு தெரிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்தாலும், பிறர் என்னைப்பற்றிப் பெருமையாக என்னிடத்திலே சொல்வதினின்றும் தெரிந்து மிகவும் பூரிப்படைவேன். என்னுடைய குழந்தைப் பிராயத்தில் என் தாயாரை நோக்கிச் சதா 'பேபி, பேபி' என்று எனக்கு பொம்மை வாங்கிக் கொடுக்கும்படி அழுதுகொண்டு போவது வழக்கமாயிருந்தது. ஆகையால், என்னுடைய உண்மைப் பெயர் விளங்காமல் காரணப் பெயராகிய 'பேபி, பேபி' என்றே எல்லோரும் செல்லமாக அழைத்து வந்தனர். அக்காலத்தில் இட்ட அச்செல்லப் பெயராலேயே இன்று வரையும் என்னை அழைத்து வருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

இப்படிச் சீரும் சிறப்புமாய் வளர்க்கப்பட்ட நான் என்னுடைய ஐந்தாவது வயதில் ஆரம்பப் பள்ளியில் சேர்க்கப் பட்டேன். எனக்குப் படிப்பதில் நல்ல ஆர்வமுண்டு என்று சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன். ஆர்வத்துடனும் அக்கறையுடனும் படித்துப் படிப் படியாகத் தேறி மேல் வகுப்பிற்குச் செல்லலானேன். நான் நான்காவது பாரத்தில் வாசிக்கப்பட்ட காலத்தில் ஓர் யௌவன மங்கைப் பருவமடைந்தேன். அக் காலத்தில் என் அழகைப்பற்றி வர்ணிக்க, முற்காலத்திய கம்பன் போன்ற கற்பனைப் புலவர்கள் இருந்து அவர்கள் கண்ணில் தென்பட்டிருப்பின், அவர்களால் உபமானங் கற்பித்துக் காட்டிய வர்ணனைகளின்றும், என் யௌவன அழகைக் கேட்டு ஆநந்திப்பீர்கள். இந்தக் காலத்தில் நான் கிறிஸ்தவக் கல்லூரியில் வாசித்து வந்தேன். எனது துர்ஷ்டவசமாக என்னை மிகவும் அன்புடனும் செல்வத்துடனும் வளர்த்து வந்த என் தந்தை எமன் கைப்பட்டார். என் செய்வேன். அந்த ஏக்கத்தால் நான் அதிகம் கவலைப் படுவேன் என்ற காரணத்தால், என் தாய் என்னை மிகவும் போற்றிக் கவலை என்பதே இன்னதென்று நான் அறியாத நிலையில் என்னைப் பராமரித்து வந்தாள். என் தாயினுடைய அளவற்ற போற்றுதலினும், எல்லையற்ற பிரேமையினுலும் என் தந்தையை இழந்த ஏக்கமே என்னைச் சாராது, கவலையற்ற வாழ்வுடன் என் படிப்பில் முன்னைக் காட்டிலும் அதிகமாகக் கவனஞ் செலுத்தி உற்சாகத்துடன் இருந்து வந்தேன்.

எனக்குச் சொந்தமான தாய்மாமன் ஒருவர் உண்டு. அவர் ஏறக்குறைய எனக்குச் சொற்ப வயதே மூத்தவரா யிருப்பார். அவர் என்னிடத்தில் அளவுக்குமீறிய வாஞ்சையும் அன்பும் கொண் டிருந்தார். எனக்கும் அவரிடத்தில் அத்யந்தப் பிரேமையும் விசுவாசமும் உண்டு. அவரும் கலாசாலையில் வாசித்துக் கொண் டிருந்தார். நான் சிறுவயதா யிருக்குங் காலத்தில் பள்ளிக்குச் செல்லும்போது இருவரும் ஒன்றாகவே போவோம். அநேகமாக நான் பள்ளிக்குச்செல்லுங் காலத்தில், எனக்காக என் தகப்பனரால் வாங்கிக் கொடுக்கப்பட்ட 'ரோல்ஸ் ராயஸ்' காரில் என் அன்பிற் குரிய மாமா ரூமிற்குச் சென்று அவரையும் என் பக்கத்திலே கூட அமர்த்திக்கொண்டு, இருவரும் உல்லாசமாய்க் கார் சவாரி செய்து கொண்டு செல்வோம். மாமாவைச் செல்ல வேண்டிய கல்லூரியில் விட்டுவிட்டு, நான் என்னுடைய பள்ளிக்குப் போவது வழக்கம். சில நாட்களில் நான் புறப்படத் தாமதமானல், என் மாமா அவர்கள் என்னைத் தேடிக்கொண்டு என் வீட்டிற்குவந்து விடுவார். என்னுடன் வேடிக்கையாகப் பேசுவார். இருவரும் மனம் ஒருப் பட்டு இன்பமாய்ப் பேசுவதைக் கண்டு, என் தாய் அளவிலா மகிழ்ச்சி யடைவாள். பள்ளிக்குச் செல்லக் காலந் தாழ்த்து வருவது கண்டு அவர் துரிதப் படுவார். அவரால் தூண்டப்பட்ட நான் வெகு துரிதமாக அலங்கரித்துக்கொண்டு புறப்படுவேன். கார் தயாராக யிருக்கும். வழக்கம்போல் சென்று, வரும்பொழுதும் ஒருவரை யொருவர் காத்திருந்து அழைத்துக்கொண்டு வீடுவந்து சேர்வது வாடிக்கையா யிருந்தது.

என் மாமா என் தாயிடத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக அலங்கரித்து அனுப்பும்படி ஆசையுடன் வேண்டிக் கொள் வார். அவர் விருப்பப்படியே ஒரு நாளைக்கு என் தாய் எனக்குச் 'சார்ஜெட்' பாவாடையும், 'சில்க்' ஜாக்கெட்டும் போட்டு, கோணவகிடெடுத்து ஜடைபின்னி, இடுப்பின் கீழ்த் தொங்கும்படி யாக அலங்காரமாக விட்டு, தாழை மல்லிகை முதலான புஷ்பங்கள் அணிவிப்பாள். முகத்தில் 'ஹாஸ்லேன்' ஸ்னேதடவி நெற்றியில் சன்ன மாக ஓர் குங்குமத் திலகமிட்டுக் கண்களுக்கு மைதீட்டி, திருஷ்டி பரிகாரத்திற்காக வேண்டி இரு கன்னத்திலும் மச்சம் போற் ரேன்றும்படி, சிறிய இரண்டு புள்ளிகளிடுவாள். கைநிறைய வளையல்களும் விரல்களில் மோதிரங்களும் அணிவிக்கப் பெற் றிருக்கும். கால்களில் ஒலிக்கப் பெற்ற கொலுசுடன் என் பின்னல் கார் டிரைவர் புத்தகம் எடுத்து வர, சந்தோஷ மிகுதியால் சுற்றுச் சுற்றி வட்டமிட்டுக் காருக்குச் செல்லும் காட்சியைக் கண்ட என் மாமா, ஊர்வசி நடனங்கண்டு மகிழ்வதற்கொப்ப ஆனந்தித்து 'பேபி' சீக்கிரம் போவோம் நேரமாய்விட்டது என்பார். அவரிடம் நான் எதிர்பார்ப்பது அன்போடு கூடிய அந்த வாசகமே.

(தொடரும்)

# யுத்தத்திற்குப் பின்

[மு. த. வேலாயுதம்]

[உயர்கவி விக்தோர் உய்கோ (Victor Hugo) தம் தந்தையாரைப்பற்றி அடிக்கடி பேசுவார். தமது தந்தை 1791-ம் வருடம் 17-ம் வயதில் படையிற் சேர்ந்தார். உழைப்பாலும் சேவையாலும் படிப்படியாய் 1825-ம் வருஷத்தில் சேனாதிபதியானார். வீர மிகுந்தவர். உயரிய நோக்க முடையவர். ஒருக்கால் யுத்தம் முடிந்த பின் போர்க்களத்தில் அத்யந்த ராணுவச் சேவகரொருவரோடு குதிரை ஏறிச் செல்லுகிறார். பரிதாபகரமான குரல் கேட்கிறது. நெருங்குகிறார். பகைவர் பட்டாளத்தைச் சேர்ந்தவனின் குரல்தான் அது! பகைவன் இரத்த வெள்ளத்தில் ஆழ்ந்து தண்ணீர்! தண்ணீர்! என்று பரிதாபமான குரலில் கேட்கிறான். சேனாதிபதி தம்மிடமுள்ள சாராயச் சீசாவை உடன்வந்த போர்ச் சேவகர் மூலம் கொடுக்கச் செய்கிறார். அப்போது, பகைவன் சேனாதிபதியைச் சுழல் துப்பாக்கியால் சுடுகிறான். தொப்பி வீழ்கிறது. குதிரை பின்னால் நெளிகிறது. உயிர் தப்புகிறார். பகைவன் குற்றுயிரோடு இருக்கையிலும் தன் தாய் நாட்டிற்குச் சேவைபுரிவதை உணர்கிறார்.

> 'இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
> நன்னயஞ் செய்து விடல்'

என்னும் மூதுரைக் கிணங்க 'அவன் அப்படிச் செய்த போதினும் தண்ணீர் கொடு' எனத் தம்முடன் வந்த போர்ச் சேவகருக்குக் கட்டளை யிடுகிறார். இதையே கவி விக்தோர் உய்கோ எடுத்துக் காட்டுகிறார்.]

விருத்தம்

புன்னகைசேர் இனிமைமிகும் என்றன் றந்தை
புகலரிய மாவீரம் வாய்ந்தசூரர்;
இன்னவர்க்கோ இயல்புடைய வீரருள்ளே
எழிலுருவம் பலங்கொண்டோ ரொருவர்நண்பர்.
இன்னுயிரா மிவருடனே ஒருநாள்மாலை
இறுதியுறும் போர்க்களத்திற் குதிரையூர்ந்து
மின்னலெனச் செல்லுகையில் உயிர்துறந்தோர்
மெய்யைஎலாம் இருள்வந்து மூடிக்கொள்ள. (1)

நிழலினிலே ஒருசிறிய அரவங்கேட்டார்
நேர்பகைவன் குற்றுயிராய்த் துடிதுடித்தே
உழன்றிட்டான் பாதைஓ ரத்திலந்தோ
உடலெங்கும் குருதிதான் தோய,மூச்சும்

இழக்கையிலே பெரும்பான்மை உணர்வுயாவும்
எளியதுர லால்'பச்சா தாபம்வைத்தே
வழங்கிடுவீர் தண்ணீர்'என் றழுதுகெஞ்சும்
வாசகத்தைக் கேட்டிட்டார் என்றன்றந்தை. (2)

மனவிரக்கங் கொண்டவர்தம் சேணந்தன்னில்
மாட்டியுள சாராயச் சீசாவொன்றைக்
கனமுடனே வரும்வீரர் கையிற்றந்து
'காயம்பட் டேகலங்கும் ஏழைக்கீவாய்'
எனஉரைக்கும் போதினிலே அந்தவீரர்
ஏந்தியதைக் கொடுப்பதற்குக் குனியும்போதில்
அனலுளமே கொண்டிட்ட பகைவனந்தோ
அங்கையிலப் போதிறுகப் பிடித்திருந்த, (3)

ஓர்சுழல்துப் பாக்கியினுல் நெற்றிநேராய்
உயிரொழிக்கக் குறிவைக்கும் போதென்றந்தை
பார்த்திடலுங் கூவினுர் ஈசா !என்றுர்
பாழ்வேட்டுத் தப்பியவர் தொப்பிதன்னை
நேராக வீழ்த்தியது குதிரைபின்னே
தெளிந்ததனுல் உயிர்தப்புந் தந்தைசொல்வார்
'நேர்மையிலாச் செய்கைகள்செய் தாலும்அந்த
நீதியிலான் நீர்பருகத் தருவாய்' என்றே. (4)

(மொழி பெயர்ப்பு)

இனம்! இனம்!! இனம்!!!

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் எழுதிய

அனுபவ வைத்திய நூல்

பழைய இரண்டாம் பாகம் இனம்

வேண்டுவோர் 4 அணு தபால் தலை (ஸ்டாம்பு) அனுப்பினுல் புத்தகம் புக் போஸ்டில் அனுப்பி வைக்கப்படும்.

'தமிழரசு' புத்தகாலயம்,

31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

# தமிழ்ப் படங்களின் தற்கால நிலை

[மயூரநாதன்]

'தமிழ்ப் படங்களின் தாழ்ந்த நிலை' யென்று தலையங்கம் தீட்டி இக் கட்டுரையை ஆரம்பிக்கலாமா வென்று முதலில் நினைத்தேன். ஆனல் நம் தமிழ்ப் படங்களை அவ்வளவு அகௌரவப் படுத்த வேண்டாமென ஓர் எண்ணம் திடீரெனத் தோன்றவே மேஷ மகுடமிட்டுக் கட்டுரை எழுதத் தொடங்கினேன்.

உலகில் கலைகள் அநேகம் உண்டு. அவைகளில் நவீனப் படங்களும் ஒன்று. வாழ்க்கைக்குக் கலை இன்றியமையாதது. கலையில்லையேல் வாழ்க்கை சோபித மடையாது. கலைவாழ்வு யில்லையேல், அது ஒரு வாழ்வாகவே கருதப் படமாட்டாது. வாழ்க்கை யெனும் தோணியை நடத்துவதற்குக் 'கலை' யெனும் துடுப்பு மிக மிக முக்கியம். இல்லையேல் தோணியும், அதனுள் இருப்பவர் கதியும் அதோ கதிதான்.

நவீன உலகில் எண்ணிறந்த ஊழல்கள் மலிந்து கிடக்கின்றன. உலக மாந்தர்கள் அந்தகாரத்தில் அழுந்திக் கிடக்கின்றனர். உலக மக்களை அந்த அந்தகாரத்தினின்றும் மீட்பதற்கு நமது படக் கலை மிகவும் உதவி புரியும். ஆகவே, இக் கலையைக் கற்றோர் பிறருக்குப் பயன்படும் வகையில் வளர்க்க வேண்டும். அப்பொழுது, இக் கலையினல் இவ்வுலகம் கணக்கற்ற நன்மைகளை அடைய முடியும். ஆகவே சினிமாக் கலையைப் பேணுவது அறிஞர்களது தலையாய கடமையாகும்.

இந்தியாவின் சினிமாத் தொழில் ஆரம்பித்து இன்றைக்கு 25 வருஷங்களாகின்றன. சென்ற மாதம் பம்பாயில் சினிமா வெள்ளி விழாக் கொண்டாடியதிலிருந்து இவ் விஷயம் யாவருக்கும் தெரிந்திருக்கக் கூடும். பேசும் படங்கள் ஆரம்பித்து சுமார் எட்டு வருஷங்களாகின்றன. இந்த எட்டு வருஷ காலத்தில் நமது தமிழ்ச் சினிமாப் படங்களின் நிலையை எண்ணிப் பார்த்தால் நாம் பெருமை கொள்ள முடியவில்லை. வடநாட்டில் சினிமாத் தொழில் உள்ள நிலையையும், நம் தென்னுட்டில் சினிமாத் தொழில் உள்ள நிலையையும் ஒப்பிட்டுப் பார்க்கும் நாம் வருத்தமடையாம லிருக்க முடியாது. ஏன்? அவ்வளவு தூரம் போவானேன்? ஆந்திரப் படங்களையும், தமிழ்ப் படங்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ஒரே ஸ்டுடியோவில்தான் தெலுங்குப் படமும், தமிழ்ப் படமும் தயாரிக்கப் படுகிறது. இன்னும் சொல்லப் போனல் அதே கலைஞர்கள்தான் தமிழ்ப் படங்களையும், தெலுங்குப் படங்களையும் கையாளுகிறுர்கள்

ஆனல், தமிழ்ப் படம் தரணியிலுள்ளோர் வெறுக்கும் வகையில் வெளி வருகிறது; தெலுங்குப் படமோ எல்லோரும் போற்றும் வகையில் வெளிப் போகிறது. இது தமிழ் நாடும்—தமிழ்



'தீர்க்க சுமங்கலீ பவ' தியாகபூமி

நாட்டவரும் செய்த பாபமோ, என்னவோ தெரியவில்லை. இல்லையேல் பிறர் கண்டு, நகையாடும் நிலைமையில் நாம் இருக்க மாட்டோமல்லவா?

தமிழ்ச் சினிமா உலகில், வடநாட்டார் தென்னாட்டவர்களைச் சரிவர மதிப்பதில்லை. அவர்களுக்குத் தக்க மரியாதையும் கொடுப்பதில்லை என்று நம்மவர்களில் அநேகர் பேசிக் கொள்கிறோம். வடநாட்டாரால் மரியாதையற்ற முறையில் நடத்தப்பட்டவர்களும் சொல்லுகிறார்கள். வடநாட்டாரது இத்தகைய செய்கை மிகவும் கண்டிக்கத்தக்கதே யாயினும், இதற்கு உட்காரணம் யாதாயிருக்கலாமென்று சற்று சிந்தித்துப் பார்ப்போமானால், தென்னாட்டுப் படங்கள் கலை யுலகத்திப் பின்னணியில் நிற்பதுதான் முக்கிய காரணமாக இருக்க முடியுமென ஊகிக்க முடியும். எனவே, தென்னாட்டுப் படங்கள் குறிப்பாகத் தமிழ் நாட்டுத் தமிழ்ப் படங்கள் மிகவும் தாழ்ந்த நிலையிலிருக்கிற தென்பதை நாம் ஒப்புக் கொண்டுதான் தீரவேண்டும்.

தமிழ்ப் படங்கள் எண்ணிறந்தன வெளியாகி விட்டன. வருஷக் கணக்கில் ஓடும் தமிழ்ப் படங்களும் தென்னாட்டில் தமிழ்ப் பாஷையில் வெளி வந்திருக்கின்றன. ஆனால், இன்றுவரை ஒரு வடநாட்டவரேனும் நமது தமிழ்ப் படத்தை விரும்பிப் பார்த்ததில்லை. ஆனால் நூற்றுக்கணக்கான வடநாட்டுப் படங்கள் தென்னாட்டில் தினமும் ஓடிக்கொண்டிருக்கின்றன. எனவே, வடநாட்டில் தயாரிக்கப்படும் படங்கள் யாவும் கலைக்கோவிலென யாரும் ஒப்புக்கொள்ள முடியாது. நம் சாதாரணத் தமிழ்ப் படங்களை விடக் கேவலமான வடநாட்டுப் படங்கள் இங்கு நம் மக்களுக்குக் காண்பிக்கப்படுகின்றன. ஆனால், நமது ஒன்றிரண்டு உயரிய படங்களைக் கூடப் பார்க்க வடநாட்டில் ஆள் கிடையாது. இது வடநாட்டாருக்கு பெருமை யளிக்கா தென்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆகவே வடநாட்டாரது இத்தகைய அசட்டைத்தனத்தை ஒழிக்க நாமும் உயரிய தமிழ்ப் படங்களைத் தயாரிக்க முயற்சி செய்ய வேண்டாமா?

பொதுவாகச் சினிமாப் படங்களை மூன்றுவிதமாகப் பிரிக்கலாம். புராணம், சரித்திரம், சமூகம் என்பதே அவைகள். தேசத்தின் தற்போதைய நிலைமைக்கு எத்தகைய படங்கள் தேவையென்பதில் சூடான வாதங்கள் அவ்வப்பொழுது நடந்து வருகின்றன. பண்டைய பாரத புத்திரிகளின் பதிவிரதாத் தன்மையின் பெருமையையும், மேன்மையும் கண்டு பாரோர் புகழத் திரௌபதி தாரை போன்ற இவர்களது சரிதையைப் புராணத்தினின்றும் திரைக்குக் கொண்டு வந்துகொண்டே இருக்க வேண்டுமென்பது ஒரு சாராரது வாதம். பண்டையவர்களின் மேன்மையும், பெருமையையும் விளக்கச் சேரன், செங்குட்டுவன், சோழன் முதலியோர்களது சரிதைகளும், தற்காலத்திய சமூக சூழல்களைப் போக்கச் சமூக சீர்திருத்தக் கதைகளையுமே படமாகப் பிடிக்க வேண்டுமென்பது மற்றொரு சாராரது வாதம். இவற்றில் யாருடைய கூற்று

உண்மை, யாருடையது பொய் என்பதை முடிவுகட்டும் பொறுப்பை வாசகர்களது முடிவுக்கு விட்டு விடுகிறேன். அம்முடிவு அவரவர்களது மனப்பான்மையைப் பொருத்தது. ஆனால், பொது மக்கள் அதிகமாக விரும்பிக் காணச் செல்வது புராணப் படங்களைத்தான். இதற்கு எழுத்தாளர்கள் பல காரணங்கள் புகல்கின்றனர். தென்னாட்டவர்கள் புராணப்பித்தர்கள் என ஒரு சாரார் கூறுகின்றனர். சமூகக்



'ஏனம்மா சங்கோஜம். நீங்களே பக்கத்தில் தனியாய் நிற்கும் அம்மாளைக் கேளுங்களேன்?' பக்த குமணன்

கதைகளையும், சரித்திரக் கதைகளும் தத்ரூபமாகச் சித்திரிப்பது சாத்தியமற்ற காரியமாகையினால்தான், புராணப் படங்கள் அதிக வெற்றி பெறுகின்றனவென்று பலர் வாதம் செய்கின்றனர். இதிலிருந்து நம்மவர்கள் புராணப் படங்களையேனும் தத்ரூப

மாகப் பிடித்து விடுகிறார்களென நினைத்து விடாதீர்கள். புராணப் படங்களில் டைரக்டர் நினைப்பதே காட்சி. அதை மறுப்பவர் கிடையாது. அப்படி மறுத்தாலும் கேட்பதும் கிடையாது. கேட்கப் போனால் 'நீ மட்டும் கண்டாயோ நேரில் புராணக் காலத்தவர்களை' என்றும் பதில் கேள்வி பிறக்கின்றது. தற்போதுள்ள புராணம் சரித்திரம், சமூகம் ஆகிய எல்லாப் படங்களும் சீரழிந்து கிடக்கின்றன எனவே உயரிய முறையில், கால வர்த்தமானம் பிசகாமல், கலை நுட்பங்கள் புகுத்தும் வகையில் தென்னாட்டுக் கலைஞர்கள் படம் பிடிப்பதில் சிரத்தை காட்ட முயலுவதில்லை. இதனால், நம் தமிழ்ப் படங்கள் பிறரால் போற்றப்படாமலிருந்து வருகிறதென்று சொன்னால் அது மிகையாகாது.

நம் தமிழ்ப் படங்களை வடநாட்டவர்கள் ஆதரிப்பதில்லை யென்றால் நம்மவர்களில்கூட அநேகர் தமிழ்ப் படங்களுக்கு ஆதரவளிப்பதில்லை. 'பால் முனியின் நடிப்பைப் பார்; சாந்தா ஆப்தேயின் சங்கீதத்தைப் பார்; தமிழ்ப் படங்களின் கண்ணருவியைப் பார்' என்று தமிழ்ப் படங்களையே கண்டறியாத தமிழ் நாட்டவர்கள், மேல் நாட்டு வடநாட்டுப் படங்களையும் உயர்த்தித் தமிழ்ப் படங்களைத் தாழ்த்திச் சொல்லுகிறார்கள். உண்மையிலேயே தமிழ்ப் படக் கலையே முன்னேற வேண்டு மென்னும் அக்கரை சிறிதளவேனும் இவர்களுக்கு இருக்குமானால், தமிழ்ப் படங்களைத் தூற்றுவதோடு நின்றுவிடாமல், அவ்வகைகளை முன்னேற்றுவதில் முயற்சி செலுத்த வேண்டும். அஃதின்றி 'ஒரு நோயாளிக்குச் சிகிச்சை செய்யும் எண்ணம் சிறிதளவேனும் கொள்ளாமல், அவனால் நாட்டிற்கு நலனில்லை, நலனில்லை' என்று தம்பட்டம் அடிப்பதிற் பயனென்ன? ஆகவே, தமிழ்ச் சினிமாத் தொழில், தமிழ்ச் சினிமாக் கலை, வளர வேண்டுமானால் நம்மவர்கள் அழித்தல் தொழிலைவிட்டு ஆக்கல் தொழிலில் அக்கரை காட்டவேண்டும். ஆக்கல் தொழில் செய்ய வேண்டு மென்பதற்காக ஒரு மோசமான படத்தைப்பற்றித் தமது பத்திரிகையில் பக்கம், பக்கமாக ஹாஸ்ய நடையில் வானமளாவப் புகழ வேண்டு மென்பது அர்த்தமல்ல.

சமீபத்தில் பம்பாயில் கூடிய சினிமாப் பத்திரிகாசிரியர்கள் மகா நாட்டில் மாகாண பாஷைப் படத் தொழிலை அடியோடு அழிக்கக்கூடிய வகையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட் டிருப்பதாகத் தெரிகிறது. அதை நான் இங்கு ஆராய விரும்பவில்லை. சுருக்கமாகக் கூறவேண்டுமானால் தமிழ்ப் படங்கள் தாழ்ந்த நிலையை இழந்து உயரிய நிலையைப் பாரோர் புகழக்கூடிய நிலையை அடையுமானால் அது தமிழ் நாட்டுக்கும், தமிழ் நாட்டவருக்கும் மிகவும் பெருமை அளிக்கக் கூடியதாகும். அப்பொழுதுதான் சினிமாக் கலை யுலகத்தில் தமிழ் நாடு பிறநாடுகளோடு தலைநிமிர்ந்து

வாழ முடியும். இதை உணர்ந்து நம்மவர்கள் நடக்க வேண்டு கிறேன்.

---



'அங்கே காத்துக்கொண்டிருக்கிருர்களே வாருங்கள்ஷூட்டிங்கிற்கு'
திருநீலகண்டர்

ஆவணக் காப்பக நூலகம்

# தியாகபூமி

[பரமாநந்தம்]

[கதை:—கல்கி, டைரக்ஷன்:—கே. சுப்ரமண்யம், பாட்டு:—பாபநாசம்சிவன், ஸ்டுடியோ:—மோஷன் பிக்சர்ஸ் புரொடியூஸர்ஸ் கம்பைன்ஸ் லிமிடெட்.]

கதை யமைப்பு:—17500 அடி நீளமாக எடுக்கப்பட்ட சமூக சம்பந்தப்பட்ட கதை. இக் கதை அநேகமாக எல்லோரும் படித்திருக்கலாம். கதையில் சில இடங்கள் மிகவும் வெறுக்கத் தக்கதாயிருக்கிறது. ஓர் தமிழ் நாட்டுப் பெண் கணவனை விட்டுப் பிரிந்து அதிர்ஷ்டவசமாக மிகுந்த ஐஸ்வர்யத்துடன் வாழ்கின்றாள்.



‘உன் முறைப்பு என் சிரிப்பிற் கீடாகாது’ கிராதா அர்ஜுனா

கணவன் குற்றவாளி யாக்கப்பட்டதைப் பார்த்து விடுவிக்க முயற்சிக்கிறாள். விடுவித்தபின் அவனை நிராகரிக்கிறாள். அவனுக்கு இவள் ஜீவனும்சம் கொடுக்கிறாள். என்னதான் ஐஸ்வர்யத்துடனும் செல்வாக்குடனும் இருந்தாலும் கணவனை வெறுத்து, ஜீவனும்சம் கொடுக்கும்படி காட்டுவது வெறுக்கத் தக்கதோடல்லாமல்

அவ்வளவு பொருத்தமாகயில்லை. மற்றவர்கட்கும் வழிகாட்டியாக ஏற்படுகிறது. கற்புக்கரசிகட்கிருப்பிடம் எனக் கூறப்படும் தமிழ் நாட்டிலுள்ள மக்கட்கு, இம்மாதிரிக் கணவனை வெறுத்து அடாதது செய்யப்படுவதாகக் காட்டும் படங்களை எடுக்கா தொழிதலே மேலாகும். அப்படிக் கணவனை வெறுப்பவள் விடுவிக்க ஏற்பாடு செய்திருக்க வேண்டியதேயில்லை. மற்றும் தகப்பனைக் காணவேண்டி அளவிலாத் துன்பமனுபவித்துத் தேடி அலைந்து, தற்செயலாக ஓர் இடத்தில் தகப்பனைச் சந்திக்கிருள். அந்த இடத்தில் குழந்தையை வைத்துவிட்டு ஓடிவிடுகிருள். இது கதைக்கு அவ்வளவு பொருத்த மாயில்லை. நம் நாட்டுப் பெண் ஒருத்தி தகப்பனைக் கண்ட காலத்தில் தன் குறைகளை அவரிடம் சொல்லி மாற்றிக்கொள்ள முற்படுவாளே யன்றி, இவ்விதமாகக் குழந்தையைப் போட்டுவிட்டு வேலைக்காகப் பம்பாய்க்கு ஓடமாட்டாள். மற்றப்படி எல்லாச் சமூகப் படங்களிலும் காணக்கூடிய கிராம சீர்திருத்தம், தீண்டாமை ஒழிப்பு இதிலும் காணப்படுகிறது.

நடிப்பு:—சாவித்திரியாக வரும் எஸ். டி. சுப்புலக்ஷிமி நீண்ட நாட்களாகப் படத்தில் தோன்ருமல், இப்பொழுது தோன்றும் படத்தில் மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்த நடிப்பைக் காண முடியவில்லை. இவர் பாடும் பாட்டுக்களும் அவ்வளவு ரசிக்கத் தக்கதாயில்லை. கணவன் வீடு சென்று அங்கு வீட்டை அலங்கரிப்பதற்காக வேண்டி, தலையில் தொப்பியுடன் பாடும் ஓர் பாட்டும் அதற்கேற்ற நடிப்பும் முகபாவமும் அழகா யிருக்கிறது. அளவற்ற சந்தோஷத்தோடு கூடிய காலத்தில், பீரோவைத் திறந்து கண்ட காட்சியால் துக்கித்துக் கலங்கும்போதுள்ள நடிப்பு உண்மையாகத் தோன்றினும், கணவனைப்பற்றி யறியாத காலத்தில் நாடகச் சந்திரமதி போன்ற ஒப்பாரி வைப்பது மிகவும் ஆபாசம்.

பேபி சரோஜா:—இந்நடிகை யில்லாவிட்டால் படமேயில்லை என்று சொல்லி விடலாம். ஒவ்வோரிடத்திலும் அழகாகவும் திறம் படவும் நடித்திருக்கிருர். பள்ளியில் குழந்தைகளை வைத்துக் கொண்டு, பாட்டுக்கேற்ற அபிநயங் காட்டுவதும் அதற்கேற்ற முக பாவங்களும் அவரது நடிப்புத்திறனை விளக்குகிறது. அன்றியும் நாடகத்தில் 'ராதாகிருஷ்ண' நடனமும் பரத நாட்டியமும் போற்றத் தக்கது. இவர் பேசும் பேச்சு நகைச்சுவை பொருந்தியதாய் மக்களை இன்புறச் செய்கிறது.

பாபநாசம்சிவன்:—மொத்தமாக இவரைப்பற்றிக் கூறுமிடத்து திரையில் 'சம்பு சாஸ்திரியையும் அவரது சங்கீதத்தையும் விரும்புவாரைக் காணேம்' எனக் காண்பதுபோல, இனிய சாரீரமில்லாத அவர் பாட்டும், உணர்ச்சியற்ற நடிப்பும், விகாரத் தோற்றமும் சினிமா உலகில் விரும்பத் தக்கதாயில்லை. ரசிப்பவர்களையும் காணேம்.

கே' ஜே. மகாதேவன்:—அமெச்சூர் நடிகராயுள்ள [இவர் முதல் படமாகிய இதில், இயற்கையாகப் பாட்டின்றி நடித்து



'பூக்கொடுப்பும் புதுப் புன்னகையும்,' தியாகபூமி

வெற்றி பெற்றிருக்கிறார். ஆங்கில மாதுடன் செய்யும் நடனம அழகா யிருக்கிறது.

ஜாலி கிட்டு:—எப்போதும்போல் இவர் தன் சாமர்த்தியத்தை இப் படத்திலும் காட்டியுள்ளார். மற்றவர்கள் சாதாரணம்.

லீலாபாய்:—'மேட்ரன்'க நடிக்கும் இவர் தன்னுடைய பாத்திரத்தை இயற்கையாக நடித்திருக்கிறார். இவர் நடிப்பு உயர்ந்த ஹாஸ்ய முறையில் திகழ்கிறது.

டைரக்ஷன்:—மிகவும் கவனிக்கப்பட் டிருப்பதாக ஒப்புக்கொள்ள வேண்டியதே. ஆயினும், சில இடங்களில் ரொம்பவும்



'சேலைவழிச் செல்லுமா முத்தம்?'
பக்த குமணன்

மோசம். ராம பஜனை நடக்கிறது. ராமர், விஷ்ணு முதலிய படங்கள் காணப்படுகின்றன. பக்தர்கள் எல்லாம் விபூதியைப் பட்டை பட்டையாய் அணிந்திருக்கின்றனர். பஜனை செய்விப்போரும் நாமதாரியாகவும் இல்லை. இதோடமையாது முடிவில் நாமாவளி கூறுமிடத்து, 'அரகர நமப்பார்வதிபதயே' என்றும் ஒலிக்கின்றனர். இது ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் வேடிக்கையா யிருக்கிறது. குப்பத்தில் சம்பு சாஸ்திரி கிராம சீர்திருத்த சம்பந்தமாக மக்கட்கு எடுத்துக் கூறுகிறார். 'ஆறு வருடங்கட்கப்பால்' என்ற

எழுத்துக்கள் திரையில் காணப்படுகின்றன. ஆறு வருடங்கட்குப் பின்னும், சாருவாகிய ஒரு பெண் புதிதாகக் காணப் படுவதல்லாமல் மற்றப் பொது மக்கள் எந்த இடத்தில் யார் யார் எந்தெந்த உடையுடனிருந்தனரோ, அப்படியே இருக்கின்றனர். மேலும் எவ்வளவு நாகரீக முதிர்ந்த நங்கையாயிருந்தாலும், பொதுமேடையில் ஒரு ஆடவன் தனக்கு மாலையிட அனுமதிக்க மாட்டாள். அதிலும் தமிழ் நாட்டுப் பெண் அவ்வாறு செய்ய ஒத்துக் கொள்வது என்ருல், இதைவிட மோசம் வேறில்லை. கார்ப்பரேஷன் தலைவராக இருக்கப்பட்ட ஓர் அறிஞரும் இவ்வாறு செய்ய முற்படுவது, தமிழ் நாட்டுப் பெண்களையே இகழ்வதாயிருக்கிறது. உமாராணி குழந்தை சாருவோடு பலவிதமாகப் பலவிடங்களில் பாட்டுப் பாடிச் சந்தோஷப்படுவதோடமையாது, பொதுவிடமாகிய ஒரு நகைக் கடையில் குழந்தைக்கு என்ன நகை வேண்டுமென்று பாட்டாகப் பாடிக் கேட்பது விரும்பத் தக்கதல்ல. அது இயற்கைக்கு முற்றிலும் விரோதம். உமாராணிக்குத் தெருவில் செல்லும் தொண்டர் கூட்டத்தைக் கண்டவுடன் தேச சேவை செய்ய வேண்டுமென்ற ஆவல் ஏற்படுகிறது. உடனே கதருடையும் கதர்க் கொடியும் கைவத்த இடத்திலிருந்து எடுக்கப் படுகிறது. தேசீய உணர்ச்சியே இல்லாத மேனுட்டு நாகரீகத்தில் முழுகியிருக்கும் அம்மையாருடைய வீட்டில் கதருடை முதலியன நினைத்த மாத்திரத்தில் கிடைக்க இடமேது? பின்னணிச் சங்கீதம் சாதாரணம். ஒலிப் பதிவு படப் பிடிப்பு பரவாயில்லை.

'மகாவிஷ்ணு முதலிய தேவர்களும் தியாகபூமியில் பிரேமை கொண்டிருக்கிருர்கள். ஹிந்தி டாக்கிகளுக்குச் சமமாயிருக்கும் ஆங்கிலப் படங்களுடன் போட்டியிடும்' என்றெல்லாம் கல்கி கூறுவதுபோல் அவ்வளவு எதிர்பார்க்க முடியாவிட்டாலும், கடைசியில் அவரே 'தேவலை சுமாராயிருக்கிறது' என்று சொல்வது போல், சாதாரணப் படம் என்ற லிஸ்டில்தான் சேர்க்கலாம்.

---

**ஆச்சரியம்!** **ஆச்சரியம்!!**

நமது நாட்டில் சிறு வயதிலும், நடு வயதிலும் உள்ள அழகிய ஆடவர்களுக்கும் பெண்களுக்கும் தலையில் மயிர் முளையாமல் வழுக்கையாய்க் காணப்படுகின்றனர். அத்தகையவர்களுக்கு 15 நாளில் வழுக்கையான இடத்தில் மயிர் முளைக்கச் செய்யலாம். இதற்குக் காரண்டி யளிக்கப்படும். மற்ற விபரம் எழுதித் தெரிந்துக் கொள்ளவும்.

**டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,**

**31, வைத்தியனுத முதலி வீதி, சென்னை.**

# தங்கம்மாள் யார்?

[R. Z. பொன்னுசாமி முதலியார், வடக்கன்குளம்]

'**ப**கட்டுக்காரி' என்பது என்னருமைத் தங்கம்மாளுக்கு நான் கொடுத்த பட்டப் பெயர். அவளைப் 'பகட்டுக்காரி' என்று நான் அழைப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. தங்கம்மாள் எத்தகைய அழகுடையவள் என்பதையும், அவளுக்கு என் மேல் எவ்வளவு பிரியம் என்பதையும் அறிந்தவர்களுக்கே, நான் அவளுக்குப் 'பகட்டுக்காரி'ப் பட்டம் கொடுத்ததின் முக்கிய காரணம் தெரியும். தங்கம்மாள் ஏற்கனவே நல்ல அழகுடையவள் தான். அவள் சிவந்த மேனியும் கனிந்த கன்னமும், கருவிழிகளும், சுருள் கூந்தலும், பவளப் பற்களும், உருண்டு திரண்ட கரங்களும், உல்லாச நடையும், சல்லாப மொழியும் எவரையும் மயக்கிவிடும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? அதிலும், இயற்கையிலேயே அழகு வாய்ந்த அம் மங்கை தனது அழகுக்கு அழகு செய்யும் பொருட்டு, நாள்தோறும் எடுத்துக் கொள்ளும் சிரமங்களைப் பார்த்தாலே, எவரும் இலகுவில் அவளுக்குப் 'பகட்டுக்காரி'ப் பட்டம் கொடுத்து விடுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை. மேலும் அவள் தன்னை அவ்விதம் அழகு படுத்துவது என் பொருட்டென்றால் நான் ஏன் அவளைப் 'பகட்டுக்காரி' என்று அழைக்கக் கூடாது?

ஒரு நாள் கோணல் வகிடெடுத்துத் தலைமயிரைப் பின்னிச் சடையை முன்புறமாகப் போட்டுக்கொண்டு, நெற்றியில் பொட்டிட்டுக்கொண்டு, நான் தனிமையாக இருக்கும் சமயம் பார்த்து என் அறைக்கு வருவாள். இன்னொரு நாள் பளபளப்பான 'பனாரஸ் சில்க்' புடவையைக் கட்டிக்கொண்டு, உல்லாசமாக ஆடிப் பாடிக் கொண்டு, நடனமாடிக்கொண்டே நடந்து என்னருகில் வருவாள்.

என்னே காலத்தின் கோலம்! பெண்களுக்குள்ள நான்கு நற்குணங்களையும் நீத்து, இப்படியெல்லாம் நடிக்கும் தங்கம்மாளுக்கு நான் 'பகட்டுக்காரி'ப் பட்டம் கொடுத்ததில் குற்றமில்லை என்றே நினைக்கிறேன்.

அன்று பகல் சுமார் பத்து மணியிருக்கும். நான் ஒரு சாய்வு நாற்காலியில் சாய்ந்தவண்ணம் பத்திரிகை யொன்றை வாசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது தங்கம்மாள் 'இங்கே பாருங்கோ. நான் இன்னிக்கு எப்படி இருக்கேன்' என்ற கேள்வியுடன் திடீரென்று என் அறையினுள் நுழைந்தாள். நான் பத்திரிகை படிப்பதை ஒரு க்ஷணம் நிறுத்திவிட்டுச் சற்று நிமிர்ந்து, மூக்குக் கண்ணாடியைத் தூக்கி நெற்றியில் மாட்டிவிட்டு, என் எதிரில் ஊர்வசி போல் வந்து நின்றவளைக் கூர்ந்து நோக்கினேன். அவளுடைய ஆடை அலங்காரங்களில் அன்று ஒரு விசேஷித்த

தெய்விகத் தன்மை காணப்பட்டது. 'குட்டியின் அழகுதான் என்ன?' என்று நினைத்தபடியே உட்கார்ந்திருந்தேன். அவள் தென்றலில் அசையும் கொடிபோல் அங்கு மிங்கும் ஆடிக்கொண்டே என்னைப் பார்த்துப் பார்த்துச் சிரித்தாள். பின் தலையைக் கீழே போட்டுக்கொண்டு தரையை நோக்கினாள். எனக்கோ பரமானந்த மாகி விட்டது. அவள் நாணம் என் மானத்தைக் கெடுத்துவிட்டது. டப்பியிலிருந்து கொஞ்சம் பொடி எடுத்து மூக்கில் செலுத்தினேன். பின் கையை உதறிவிட்டு 'அடி! நீ இன்றைக்கு ரொம்ப ஷோக்கா டிரஸ் பண்ணியிருக்கியே! வாடி இப்படி' என்று சொல்லிக் கொண்டே என் கைகளை நீட்டினேன். அவள் 'குடுகுடு' வென்று ஓடிவந்து என் மடிமேல் தொப்பென்று உட்கார்ந்து கொண்டாள். என் மடியிலிருந்த பத்திரிகை தங்கம்மாளுக்கும் எனக்கும் இடையி லகப்பட்டு மிகுந்த அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தது. ஆம்; அதைத்தான் நாம் 'பத்திரிகை நெருக்கடி' என்று சொல்வது. அன்று தங்கம்மாளுக்கும் எனக்கும் அடியில் வருமாறு சம்பாஷணை நடந்தது:—

நான்:—இது ஏதுடீ புதுப் புடவை?

தங்கம்மாள்:—இதா? எங்கப்பா அன்னிக்கு எங்கக்காளுக்கு வாங்கிக்கொடுத்தா. இதை எங்கக்காளுக்குத் தெரியாமல் கட்டீண்டு வந்துட்டேன்.

நா:—அப்படியா? உன் அக்காள் இப்பொழுது நம்மைப் பார்த்தால் நாம் என்ன பண்றது? 'என் புடவையைக் கட்டிக் கொண்டு அவரோடு உல்லாசமாய்ப் பேசுவதற்கு வந்து விட்டாயோ?' என்று அவள் உன்மேல் சீறிவிழுவாளே?

த:—நீங்க பயப்படாதீங்க. இங்கே இப்போ ஒருவரும் வரமாட்டா.

நா:—அதிருக்கட்டும். நீ ஏன் இப்படி என் அறைக்கு அடிக்கடி வருகிறாய்?

த:—ஒண்ணுமில்லே. ஆனால் உங்க முகத்தை அடிக்கடி பார்க்கணும்னு எனக்கு ஆசையா யிருக்கு. அதான் வந்தேன்.

நா:—அப்படி என்ன என் முகம் ரொம்ப அழகாகவா இருக்கிறது?

த:—உங்க அழகுக்கென்ன குறைச்சல்? நான்....உங்களைத் தான் க....லி....யாணம் பண்ணிக்க வேணும்னு ஆசைப்படரேன்.

நா:—அதென்னடி! உனக்கு என்மேல் அவ்வளவு ஆசை?

த:—இல்லே. நான் கலியாணம் பண்ணின உங்களைத்தான் பண்ணணும்னு தீர்மானிச்சிருக்கேன். வேறு ஒத்தரும் என் மனசுக்குப் பிடிக்கலே.

நா:—அப்படியா சமாச்சாரம்! நான் உன் அக்காளை யல்லவோ கலியாணம் செய்யப் போகிறேன். எனக்கு அவள்மேல் தான் மிகுந்த ஆசை.

த:—அப்படீன்னு நீங்க என்னை விட்டுவிடுவீர்களா? ஐயோ! எனக்கு வருத்தமா யிருக்கே. என் ஆசை யெல்லாம் வீணாப் போச்சே!

நா:—மெதுவாகச் சப்தமிடம்மா. இது வேறு யாருடைய காதிலாவது விழப் போகிறது.

த:—விழுந்தாலென்ன? யார் வேண்டுமானாலும் என்னைப் பரிகாசம் பண்ணட்டும். என்னால் உங்களை மறக்கவே முடியாது. என்ன சொல்றீங்க? உம்...

நா:—உன்னை என்னால் கலியாணம் பண்ணமுடியாதென்று எனக்கும் ரொம்ப வருத்தமாய்த் தானிருக்கின்றது. ஆனால் என்ன செய்வது? அவளுக்கு வாக்குக் கொடுத்து விட்டேனடி.

த:—சரி. எங்க இரண்டு பேரையும் சேர்த்துக் கட்டிக் கொள்ளுங்களேன்.

நா:—சரிதான். எல்லாரும் என்னை 'இரண்டு பெண்டாட்டிக் காரன்' என்று கேலி செய்வார்களே. அப்புறம் உங்களால் திண்டாட வேண்டிவருமே.

த:—உங்களுக்கு அவளைக் கலியாணம் பண்ண ஆசை. எனக்கு உங்களைக் கலியாணம் பண்ண ஆசை. அப்படீன்னு உங்களுக்கு இரண்டு பெண்டாட்டி இருந்துதானே ஆகணும்?

நா:—சீ! உளறுதே!

த:—நானென்ன அழகில்லாதவளா? என்னை நீங்க கட்டினால் என்ன குற்றம்?

நா:—என்னை எல்லாரும் கேலி செய்வார்கள்.

த:—அதனால் நமக்கென்ன?

நான்:—வாயைப் பார் வாயை! பதிலுக்குப் பதில் சொல்லிக் கொண்டுதானே இருக்கிறாய்? நீ நல்ல அழகுதான் அம்மா அழகு தான். ஆனாலும் நான் உன்னைக் கலியாணம் பண்ணமாட்டேண்ணு மாட்டேன்.

த:—நீங்க என்ன சொன்னாலும் நான் உங்களை விடப் போற தில்லே. உங்கள்மேல் எனக்கு அதிக ஆசையுண்டு.

நா:—நீ என்ன சொன்னாலும் நடக்காது. தெரியுமா?

த:—ஆமா அதிருக்கட்டும். அன்னிக்கு ஏன் என்னை உங்க மடியிலே இருத்தீண்டு முத்தனீங்க?

நா:—அப்போ உன்னைக் கலியாணம் செய்யலாம் என்றுதான் எண்ணினேன். ஆனால்........

த:—இப்போ அந்த எண்ணம் போயிடுத்தோ?

நா:—போகவில்லை. குறைந்து விட்டது.

த:—குறைந்து விட்டால் கூட்டணும்.

நா:—அதெப்படி முடியும்?

த:—ஏன் முடியாது? நான் வேணும்னு கூட்டறேன்.

நா:—அதெப்படி?

த:—கூட்டறேன் பாருங்கள். முதலில் நீங்க கண்ணை மூடுங்க.

தங்கம்மாள் என்ன செய்வாள் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும் தெரியாததுபோல நான் என் கண்களை மூடிக் கொண்டேன். தங்கம்மாள் தனது இரு கரங்களாலும் என் கழுத்தைக் கட்டிக்கொண்டு என் கன்னத்தில் ஒரு முத்தமிட்டாள். அவள் அவ்வாறு செய்தது எனக்குப் பேரானந்தத்தைக் கொடுத்தது. எனினும் நான் என் சந்தோஷத்தை மறைத்தவண்ணம் சிறிது கோபமாக, 'சீ! அசடு!! போ வெளியே!' என்று அதட்டினேன். பாவம்! தங்கம்மாளின் சந்தோஷம் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்துவிட்டது. அவள் விசனத்தோடு என் முகத்தைக் கூர்ந்து பார்த்தாள். நான் 'போடி, போ. பத்திரிகை படிக்க வேண்டும். என்னை இப்பொழுது தொந்தரவு செய்யாதே' என்றேன். தங்கம்மாள் வெடுக்கென்று முகத்தை அப்புறம் திருப்பிக்கொண்டு 'உங்க நெஞ்சு, கல் நெஞ்சுதான்' என்று சொல்லிக்கொண்டே சடக்கென்று என் மடியைவிட்டு எழுந்து வெளியே போய்விட்டாள். நானும் 'அகங்காரம் பிடித்த அசடு' என்று முணுமுணுத்துக் கொண்டே கசங்கிக் கிடந்த பத்திரிகையை எடுத்து வாசிக்கலானேன். என் கண்ணாடியும் பழையபடி மூக்கில் வந்து விழுந்தது. தங்கம்மாள் யார் தெரியுமா? அவள்தான் என் மகன் வாசுதேவனின் எட்டு வயதுப் பெண். நான் யார் தெரியுமா? நான்தான் நான். போன ஆடியில்தான் எனது எழுபதாவது பிறந்த நாள் கொண்டாட்டம் நிறைவேறியது.

---

தாதா:—ஏண்டா சம்பு, வாத்தியாருக்கும் மாணவனுக்கும் என்ன வித்தியாசம்?

சம்பு:—வாத்தியார் லேட்டாக வந்தால் நாற்காலியில் சாய்ந்து கொண்டு இளைப்பாறுவார். மாணவன் லேட்டாய்ப் போனால் ஒரு மணி நேரம் பெஞ்சியின் மேல் நிற்பான்.—சம்பு. ஐ. ந. பொன்னேரி

# இரு கைக்குட்டைகள்

['குமாரன்']

(சென்ற மாதத் தொடர்ச்சி)

பாடத்தைத் தொடங்கினன். என்றாலும் சிந்தை அதிற் செல்லவில்லை.

'அந்தக் கைக்குட்டை கொடுத்தாயே !.......'

'நீங்கதான் என்னைத் திரும்பிக்கூடப் பார்க்க மாட்டேன்னுட்டீங்களே !'

'எத்தனை காலமாக உனக்கு இந்த ஆசை? அந்தக் கைக் குட்டை கொடுத்தது முதற் கொண்டா?'

'ஏறக்குறைய 18 மாத காலமாக நான் பட்ட துன்பம்........... போகட்டும். இப்போதாவது உங்களுடன் பேசி மகிழும் பாக்கியம் கிடைத்ததே !'

'அடி அம்மா ! நேற்றிரவு முழுதும் நீ என்னைத் தூங்க விடாமலடித்து விட்டாயே !'

'ஐயோ ! பாவம் !—ஆனல் நான் இந்த 18 மாத காலமாக நல்ல நித்திரை யில்லாமல் பட்டபாடு........நீங்க ஒருநாள் தானே !....'

இப்படியே பேச்சுப் போய்க்கொண்டிருந்தது. நடுநடுவே ராமநாதன் மிகச் சிரமப்பட்டு ஒரு செய்யுளுக்கு உரை சொல்லி முடித்தான். மணி ஆகிவிட்டது. ஆனந்தபாய் எழுந்து அவனை முத்தமிட்டுப் பிரிய முடியாமல் பிரிந்தாள்.

அடுத்த நாட்காலையில் ராமநாதன் மேஜையைத் திறந்தபோது டிராயரில் ஒரு பொட்டணம் இருப்பது கண்டு, ஆச்சர்யமுற்று அதைப் பிரித்துப் பார்த்தான். அதில் மிட்டாயிருந்தது. சற்றுச் சிந்தித்தான். இதை ஆனந்தபாய்தான் தன் மேஜையினுள் போட்டிருக்கக் கூடும் என்ற முடிவுக்கு வந்தான்.

அன்று அவள் வந்தபோது பேச்சின் நடுவே 'இது ஏது?' என்றான்.

'என் தம்பிக்காக அப்பா வாங்கி வந்திருந்ததில் கொஞ்சம் எடுத்துக்கொண்டு வந்தேன். நீங்க ஏன் அதைச் சாப்பிடாமல் அப்படியே வைத்திருக்கிறீங்க?' என்றாள்.

'நான் மட்டுமா இதைத் தின்னுவது?' என்று சொல்லி மிட்டாய் ஒன்றை எடுத்து நீட்டினன் ராமு. அவள் ஒன்றை எடுத்து அவனுக்குக் கொடுத்தாள். இவ்வாறாகத் தினமும் ஒருவர்க் கொருவர் மிட்டாய்த் துண்டுகளை வழங்கி மகிழ்ந்தனர்.

அடிக்கடி இருவரும் தங்கள் காதலைச் சற்று மறந்திருந்து படிப்பில் மனதைச் செலுத்த முயன்றனர்; என்றாலும் அவ்வப் போது ஆனந்தபாயை மீறி அவள் கண்களில் ஜொலிக்கும் ஆசையைக் கண்டு அவனால் வாளா விருக்க முடியவில்லை. உடனுக்குடன் இதமாய்ப் பேசிப் படிப்பிற் கவனத்தைச் செலுத்துமாறு வற்புறுத்தி வந்தான்.

ஓர்நாள் 'கண்ணே! உன் நோக்கம் என்னவென்று தெரிவித்துவிடு. நானே விவாகஞ் செய்து கொண்டவன் என்று உனக்குத் தெரியும். இல்லாடிலில் எப்பாடுபட்டேனும் உன்னை எனக்குச் சொந்தமாக்கிக் கொண்டு விடுவேன். ஆனால் இப்போதிருக்கும் நிலையில் நான் உன்னை நினைத்தல்கூடத் தகாதாயிற்றே என் செய்வேன்?' என்றான் ராமு.

'எனக்கு உங்களுடனிருக்க வேண்டும் என்ற ஒரே ஆசையைத் தவிர வேறில்லை. அப்புறம் உங்களிஷ்டம்'

'என் இஷ்டம் என்று எப்போதும் தனியாக ஒன்றிருந்ததில்லை. என்னால் யாருக்கும் கவலையிருத்தலாகாது என்பதே என் கொள்கை. ஆதலால்தான் நான் இவ்வளவுதூரம் மன்றாடுகிறேன். என்னை நினைந்து நீ வருந்துவதில் பயனில்லை.'

'உங்களுக்கே என்னைப் பிடிக்கவில்லையென்றால் நான் என் செய்வேன்?' என்று வெளுத்த முகத்துடன் கண்ணீர் துளிக்க அவனை நோக்கினாள்.

'என் அன்பே! உன்னை ஏற்று ஆனந்தமடைய இந்தவுலகில் நான் கொடுத்து வைக்காமற் போனதற்காகத்தான் வருந்துகிறேன். உன்னை என்னால் ஒருகணமும் மறக்க முடியாது. இந்த ஜன்மம் அழிந்தாலும் மறக்க மாட்டேன். ஆனால் என் கண்ணே! உன்னை அடையும் மார்க்கந்தான் எனக்குப் புலப்படவில்லை. முதலில் உன் தந்தை நம் காதலுக்கு இசைவரா?'

'அவரைப்பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டியதில்லை. நம் காதலுக்கு அவர் ஒருபோதும் தடை சொல்ல மாட்டார்.'

'இல்லை. நீ தெரியாமற் சொல்லுகிறாய். நம் அன்புக்கு அவர் இடங்கொடுக்க மாட்டார். அவருடைய ஒரே பெண்ணாகிய உன்னைத் தக்க விடத்தில் மணஞ் செய்வித்துப் பார்க்க வேண்டுமென்ற ஆசை அவருக்கிருக்கும். அல்லாமலும் நம் இருவர் மதமும் வேறு. எனக்கு என்னதான் மத வேற்றுமை இல்லையென்றாலும் என்னுடன் நீ வாழ ஒருபோதும் அவருக்கு மனம் வாராது.

அவள் மௌனமாயிருந்தாள். அவள் உள்ளத்தைக் கௌவியிருந்த வேதனை ஒரு பெரிய நெட்டுயிர்ப்புடன் வெளிவந்தது. பிறகு

'காதலரே! எப்போதும் நான் உங்களுடனிருந்து உங்கள் அன்புப் பிரவாகத்தில் குளித்துக்களிக்கும் பாக்கியம் எனக்கு வராதா? என்னுடைய நெடுநாள் பிரார்த்தனையை இந்த அளவாவது பூர்த்தி செய்து எனக்கு உயிர்நல்கிய ஆண்டவன் என்னைப் பின்னும் கைவிட மாட்டார்.'

இப்படியே ஒரு மாதம் ஓடிற்று. ராமநாதன் தன் ஜீவிய வாழ்வில் ஒரு நவயுகம் தோன்றியதாக எண்ணினான். ஒவ்வொரு தினமும் மாலைக் காலம் அவனுக்கு இன்பமாக ஓடிக்கொண்டிருந்தது.

ஓர்சமயம் அவன் தன்னுடைய பால்ய வரலாற்றை அவளிடங் கூறுவதாகச் சொல்லி யிருந்தான். தன் இறந்த கால நிகழ்ச்சிகளை அவளிடஞ் சொல்வதில் அவனுக்கு ஏதோ ஒரு உற்சாகந் தொனித்தது. அவளும் கேட்கப் பிரியப்படுவதாகத் தெரிவித்தாள். ஆனால் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை.

ஓர்நாள் பாடத்தை விரைவில் முடித்துவிட்டுத் தன் வரலாற்றின் ஒரு பகுதியையாவது கூறிமுடிக்கலாம் என்ற முன்னேற்பாட்டுடன் அவள் வரவை எதிர் பார்த்திருந்தான். அவளும் வந்தாள். ஆனால் அருகில் வராதபடி தூர நின்றுகொண்டே 'இன்று அப்பாவுக்கு உடம்பு குணமில்லை. ஆதலால் நாளைக்கு வருகிறேன்' என்றாள். முறுவல் அரும்பும் வதனத்தில் வேதனை காணப்பட்டது. அவன் பெருத்த ஏமாற்றத்தை யடைந்தான். அவன் சிரம் அவள் சொல்லுக்கு விடையளிப்பதுபோல் அசைந்து கொடுத்தது. அவள் போய்விட்டாள்.

அரை மணி நேரஞ் சென்று ஜானைப் பார்க்கப் போவதுபோல் அவன் 'என்ன சார் உடம்பிற்கு? படுத்திருக்கிறீர்களா?' என்று கேட்டுக் கொண்டே வீட்டினுள் நுழைந்தான்.

அவர் கட்டிலிற் படுத்திருந்தார். அவருக்குப் பின்புறத்தே அந்தச் சுந்தரி நின்றிருந்தாள். 'வாங்கள் சார்! உட்காருங்கள்' என்று ஒரு நாற்காலியைக் காட்டினார். அவன் அமர்ந்ததே 'என்னவோ உடம்பு முழுதும் ஒரே வலியா யிருக்கிறது' என்றார்.

'என்ன ஆகாரம் எடுத்துக் கொள்ளப் போகிறீர்கள்? கொஞ்சம் காப்பி போட்டுச் சாப்பிட்டீர்களானால், உடம்பு வலி நீங்கும்!'

'சார்! நான் என் டாட்டரிடத்தில் ரொம்பப் பக்ஷம் வைத்திருக்கிறேன். ஏனென்றால் அவள் தாயற்றவளல்லவா? அவள் விரும்பியதால் தான் உங்களிடம் அவளைப் படிக்க அனுப்பினேன். ஆனால் இந்த உலகம்........'

மேலே பேச முடியாமல் ஒரு நிமிஷம் நிறுத்திவிட்டு அவன் முகத்தைப் பார்த்தார். அவர் என்ன சொல்லப் போகிருரென்று திட்டமாக அவனுல் தெரிந்துகொள்ள முடியாவிடினும் ஒருவாறு ஊகித்துக் கொண்டான். ஒரு பெரிய இடியை எதிர் பார்ப்பவன் போல் அவர் முகத்தைக் கவனித்தான்.

'ஊர் வாயை மூட முடியாது. பலர் முணுமுணுப்புக்கு நாம் ஏன் ஆளாக வேண்டும். ஆதலால், அவள் இனி பாடங் கேட்டுக் கொள்ள வேண்டாம். அதிர்ஷ்டவசமிருந்து பாசாகுலாகட்டும். இல்லாவிட்டாற் போகட்டும்.'

ராமநாதன் கல்லாய்ச் சமைந்து விட்டான். ஆம். உண்மையில் ஒரு பேரிடி அவன் தலையில் விழுந்தமாதிரி யிருந்தது. இந்தச் சொற்களை அவன் சிறிதும் எதிர் பார்த்தவனல்ல. தன் வாழ்க்கை இனிது நடைபெற வேண்டுமானுல், ஆனந்த பாயின் கூட்டுறவு மிக அவசியமானதாக அவன் தீர்மானித்து ஒரு மாத காலத்திற்கு மேலாகிவிட்டது. இந்த ஒரு மாத காலமும் எப்படித்தான் போயிற்று என்றுகூட அவனுக்குத் தெரியாது. அவ்வளவு இன்பம்! அத்தனை சுகம்! ஒவ்வோர் சமயம் இந்த இன்பச் சக்கரம் ஓடாது நின்று போய்விட்டால் என்ன செய்வது என்ற கலக்கமும் அவனுக் கேற்பட்டதுண்டு. அப்போதெல்லாம் அவளது உறுதியான சொற்களால் அவன் நம்பிக்கையிற் சிறிதும் தளராதிருந்தான். ஆனுல் இப்போது—இனி அந்தக் காதல் நாடகம்...........! தன் விதியை நொந்து கொண்டான்.

தன் தடுமாற்றத்தைக் கூடியவரை சமாளித்துக்கொள்ள முயன்ருன். ஆனுல் முடியவில்லை.

'என்ன சார்! மௌனமா யிருக்கிறீர்கள்? என் தீர்மானம் உங்களுக்குச் சிறிது ஏமாற்றத்தை யுண்டுபண்ணி யிருக்கலாம். படிப்பு வேண்டாமென்று சொன்னேனே தவிர, நீங்களிருவரும் பேசலாகாது என்று நான் தடைப்படுத்தவில்லை. உங்களுக்கு ஓய்வு கிடைத்தால் நீங்கள் இப்படி நான் இருக்கும்போது வந்து பேசிக் கொண்டிருப்பதில் எனக்கு ஆட்சேபனையில்லை.'

இது அவனது உள்ளத்தில் சிறிதளவு நம்பிக்கையைத் தோற்றுவித்தது. மெல்ல நிமிர்ந்து ஜானுக்குப் பின்னுல் நின்றிருந்த ஆனந்தபாயை நோக்கினன். அவள் முகாரவிந்தம் மலராது குவிந்து கிடந்தது.

பிறகு ஜானை நோக்கி 'நீங்கள் அப்படியே படுத்துக்கொள் ளுங்கள் சார். கொஞ்சம் தூங்கினீர்களானுல் உடம்புக்கு நல்லது' என்று சொல்லியதே ஜான் சயனித்துக்கொண்டு கண்களை மூடினர்.

அப்போது ஆனந்தபாய் ஒளியிழந்த முகத்துடன் ஏதோ சொல்ல அவனருகில் வந்தாள். ஆனால் ராமநாதன் அதற்குமேல் அங்கே தங்கி யிருப்பது தகாதென எண்ணியவனாய்ச் சட்டென்று எழுந்து போய்விட்டான். (அடுத்த இதழில் முடிவு)

---

நடராஜன்:—என்ன கேசவா! நான் என்றைக்குப் பஸ்ஸில் பிரயாணம் செய்தாலும், அன்று நெருக்கடியா யிருக்கிறது!

கேசவன்:—அப்படியானால், ஒரு நாளைக்கு முன்பே போய் விடுகிறதுதானே. —பெரியஸ்வாமி, சென்னிமலை


டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களால் தயார் செய்யப்பட்ட மருந்துகள் யாவும் கீழ்க்கண்ட விலாசங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

முத்துவிநாயகர் ஸ்டோர்,
கல்லல் S. I. R. (இராமநாதபுரம் ஜில்லா.)

லங்கா குரோஸரி ஸ்டோர்,
செட்டித் தெரு, கொழும்பு.

வி. சா. காசி செட்டியார்,
47, மார்க்கட் வீதி, சிங்கப்பூர்.

A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
19, ஜடாமுனி கோயில் தெரு, மதுரை.

A. N. லெட்சுமணன் செட்டியார்,
வலம்புரி, வலையபட்டி,
பொன்னமராவதி போஸ்டு, புதுக்கோட்டை ஸ்டேட்.

A. V. R. A. ADYCAPPA CHETTIYAR.
Lalji Mansing Building, 1st Floor Lohar Chawl,
Near Crawford Market, Bombay. 2.

# 'அபலைத் தாய்'

[கம்பதாசன்]

'ஐயா !............ஐயா !............'

'யாரது? இந்த நேரத்திலே............'

என்று கடுகடுத்த முகத்தோடு சன்னற் கதவைத் திறந்து, வெளியே தனது பார்வையைச் செலுத்தினான் ராமு.

மழைத் தாரைகளாகிய நரம்புகளில், சூறைக் காற்றின் மிடற்றால் சனித்த 'சடசட' என்னும் இயற்கைக் கீதத்தின் சுவை, தனக்கொருவளுக்கே உரியதெனக் கருதுபவள்போல், ஓர் இளம் நங்கை நடு நிசியில் அதிலும் தனது வீட்டின் முன்பு நிற்பது, அவனுக்கு அச்சத்தையும், புத்துணர்ச்சியையும் ஊட்டிட,

'நீயாம்மா கூப்பிட்டது?' என்றான்.

'ஆமாம்'

'என்ன சமாச்சாரம்?'

'இதைக் கொடுத்துவிட்டு வரச் சொன்னார்.'

'யார்? என்ன இது?'

என்று, திரட்சி பொருந்திய கரங்களினால், தன் மார்புறத் தழுவியபடி வைத்திருந்த மூட்டையைக் கவனித்தான். அன்பு அவன் மனதை ஆட்கொண்டது. இரக்கம் கண்களில் பிரகாசிக்க, அவளைப் பார்த்தான். அரையினின்றும் வந்து வாயிற் கதவைத் திறந்தான். ஆனால், மூட்டைமட்டும் வாசற்படியில் கிடந்தது. அவள் எங்கே?

* * *

மனோ வேகம்போல், விரைவாக வச்சல் ஓட்டிக்கொண்டு வந்த மோட்டார் 'கர்........' என்ற இரைச்சலுடன் நின்றது. சாதத்தைக்கண்ட காகம்போல், சனக் கூட்டம் கவிந்து கொண்டது மோட்டாரை. விவரந் தெரியாப் பேச்சுகள் கடலிரைச்சல் போன்று. கூட்டத்திலிருந்த ஒருவன் :

'என் சார் நிற்கிறிங்க? தூக்கிப் போட்டுக்கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போங்க உடனே. பாவம்! தள்ளாத கிழவி' என்று, வச்சலைப் பார்த்துக் கூறினான்.

'அப்படித்தான் செய்யணும். பெரிய நூசென்ஸாப் போச்சு. இந்தக் கிழங்களெல்லாம் என்னத்திற்கு 'டிராபிக்' அதிகமான ரோட்டில் தன்னந்தனியாய் வரணும்? எத்தனை தரம் 'ஆரன்' அடிக்கிறது.'

என்று சொல்லிக் கொண்டே தன், மோட்டார் சக்கரத்தின் கீழ் சிக்கித் துவண்டு கிடக்கும் கிழவியைத் தூக்கி மோட்டாரில் போட்டான் வச்சல்.

'ஆஸ்பத்திரிக்குப் போவதிலும், நம் வீட்டுக்கே தூக்கிக் கொண்டுபோனல் என்ன? அப்பாதான் டாக்டராச்சே!' என்றதோர் குரல்.

'ர்..........' என்ற சப்தத்தோடு மோட்டார் இடம்விட்டு நகர்ந்தது; ஓடி மறைந்தது காற்ருய்.

* * *

இலவம் பஞ்சு மெத்தையில் அக்கிழவி கிடத்தப்பட்டிருந்தாள். அருகினில் வச்சல் நின்றிருந்தான். சற்றுத் தூரத்தில் வச்சலின் தந்தை அமர்ந்து அவளைப் பார்த்துக் கொண்டிருந்தார். தென்றல் சாளரங்களின் வழியே ஜில்லென வீசிக்கொண்டிருந்தது. நட்சத்திரங்களின் துடிப்பு வானப் பெண்கள், தங்கள் ஒளி உதட்டை சப்தம் செய்யாமல் அசைத்துப் பேசுவது போலிருந்தது.

இரவு பனிரண்டு மணியாகியும் வச்சல் விழித்திருந்தான். அவன் மனச்சாட்சி மனிதத் தன்மையைப் பார்த்து எள்ளி நகைத்திருக்க வேண்டும். இல்லை எனில் நித்திரையின் சுகத்தை நிராகரித்திருப்பானு?

சூர்யகாந்திப் பூ நிமிர்தல்போலக் கிழவி சுருங்கிய தனது இமைகளை விழிதழுவலினின்றும் பிரித்தாள். தன்னைச் சுற்றிலுமுள்ளவற்றைக் கண் வீச்சால் துருவிப் பார்த்தாள். இரும்பைக் கவரும் காந்தம்போல் அவள் நோக்கின் ஒளி, அந்த அறையில் மாட்டப்பெற்றிருந்த படமொன்றின்மீது பதிந்தது. சில விநடிகள்வரை நயனத்தினலே சலனமற்ற அப்படத்தொடு பேசிக்கொண்டாள். எனினும் சாந்தியும் திருப்தியும் அவள் முகத்தில் பிரதி பலிக்கவில்லை. மாஞ்சருகு நிறம்போன்ற அவள் உதடுகள் அசைவு கண்டன அன்பு ததும்பும் ஒலியில்.

'அடே! உன்னல் அல்லவோ அன்றுமுதல் கண்ணற்ற சமூகத்தின் செல்லாக் காசாகப் புறக்கணிக்கப்பட்டேன். என்மீது குற்றமா? இல்லை இல்லை அணுவளவுமில்லை. இயற்கையின் விதி அப்படிப் போலும்! இல்லாவிட்டால் விதவையாகிய நான் உன்னையீன்றிருப்பேனு? என் அன்பின் பரிசான உன்னை நடுநிசியில் சோவெனப் பெய்யும் மழையில் பிரிந்தேன். எதற்காகச் சமூகத்தின் பழிக்காக நிந்தனைக்காக உரிமையற்ற நான் உளம் குலைந்தேன். உணர்விழந்தேன். என்ருலும் நீ சுகமாய் இருக்கவேண்டும். அந்தப் புண்யவான் உன்னைக் கைவிட்டிருக்க மாட்டார். இனி இந்த உலகத்தில் எனக்கென்ன வேண்டும்? நான்.......'

என்று மேலும் ஏதோ சொல்லப் போனவள் மின்சாரம் பட்டவள்போலத் திடுக்கிட்டு இமைகளைத் தளர்த்தினுள். வச்சல் தந்தை முகத்தைப் பார்த்தான். அக்கிழவியின் பிதற்றல் விவரங்

தெரியாதவனாய், குழிவிழுந்த கன்னங்களின் வழியே கண்ணீர் வழிவது வச்சலுக்கு மேலும் பயத்தை மூட்டிற்று அதிர்ச்சி கண்ட ஒலியில்!

'ஏன் அப்பா அழுகிறீர்?' என்றான்.

'வச்சல்!' என்று ஒரு விக்கலொடு தேம்பினர் தந்தை. அவர்நா ஏதோ சொல்லத் துடித்தன. நெஞ்சில் கிட்டி போடுவது போலிருந்தது. என்றாலும் சொல்ல முற்பட்டு விட்டார்.

'வச்சல்!'

'என்ன? அப்பா!'

'என்னை மன்னிப்பாயா?'

'எதற்காக?'

'உண்மையை மறைத்ததற்கு?'

'எந்த உண்மையை? நீங்கள் சொல்வதொன்றும் விளங்கவில்லையே விவரமாகக் கூறுங்கள்.'

'நீ எனது மைந்தன் அல்ல'

'உண்மையாகவா!'

'ஆம் இதில் சந்தேகம் வேண்டாம். எனக்கு நீ வளர்ப்புப் பிள்ளையே'

'எப்படி?'

'இப்போது இந்த அம்மாள் கூறியது உன்னைப்பற்றித்தான் இவர்தான் உன்னைப் பெற்ற தாய்'

'அப்படியா இவரா என் தாய்!'

என்று பொக்கிஷம் கண்டவன்போல், சாவின் உச்சப்படியில் ஊசலாடிக் கொண்டிருக்கும் அந்தக் கிழவியின் முகத்தை உற்றுப் பார்த்தான். அவளும் விழித்தாள்.

'அம்மா!'

'ஹா! மகனே!'

என்று அவனை மார்புறத் தழுவப் படுக்கையை விட்டெழுந்தாள். ஆனால், இன்பத்தின் எல்லை துன்பம் அல்லவா? சந்தோஷத்தின் துடிப்பாலும், மோட்டார் மோதலால் ஏற்பட்ட ஹிருதய ஹீனத்தாலும், அந்த அபலைத்தாய் சோர்ந்து படுக்கையில் வீழ்ந்தாள். மெதுவாக அவள் நா 'அன்று உனக்காகக் காதலனைப் புறக்கணித்து சமூகக் கூண்டிலிருந்து விடுவிக்கப்பட்டேன். இன்றும் உன்னாலேயே துன்ப உலகத்தினின்றும் விடுவிக்கப்படுகிறேன். நீ வாழ்க' என்று ஒலித்தது. மூச்சு நின்றது: உடல் சில்லிட்டது: வச்சல் அறிவு கிறுகிறுத்தது: ராமுவின் கண்கள் மேலும் கண்ணீர் உகுத்தன.




ஒருவன் நல்ல உடை யணிந்து கொண்டு வந்து ஒரு பிரபுவிடம் பிச்சை கேட்டான்.

பிரபு:—ஏனப்பா நீ நல்ல உடை யணிந்துகொண்டு பிச்சை கேட்டால் யார் கொடுப்பார்கள்?

பிச்சை கேட்பவன்:—ஔவையார் தான் 'இறக்கப் போனாலும் சிறக்கப்போ' என்று சொல்லி யிருக்கிறார். ஆகையால் நான் அப்படிச் செய்தேன். —N. M. மயில்சாமி

சுப்பன்:—(டாக்டரைத் தூக்கத்தில் எழுப்பினான்)

டாக்டர்:—என்னடா மடையா என்னைத் தூக்கத்தில் தொந்திரவு கொடுக்கிறாய்.

சுப்பன்:—ஐயையோ என்னைப் பாம்புக் கடித்து விட்டதே.

டாக்டர்:—அப்படியானால் நீ கருடனைக் கடித்துவிடடா.

—ல. கந்தசாமி

வைத்தியர்:—(ஒரு வியாதியஸ்தர் கையைப் பிடித்து பார்த்துவிட்டு ஐயா! இது ரொம்பவும் கடினமான வியாதி இதற்கு மருந்து செய்வதென்றால் 20 ரூபாய் பிடிக்கும்.

வியாதியஸ்தர்:—இப்பொழுதுதானே வடக்குத் தெருவு ராமு வைத்தியரிடம் இரண்டு ரூபாய் கொடுத்து மருந்து வாங்கினேன்.

வைத்தியர்:—(மறுபடியும் கையைப் பார்த்துவிட்டு) இரண்டு ரூபாய் கூட அதிகம். நான்கணவுக்கு ஓர் மாத்திரை வாங்கினால் போதுமானது! —A. ராஜ்மகம்மது

எஜமான்:—(வேலைக்கார ராமனைப் பார்த்து) அடே! ராமா! நீ இங்குள்ள ஒருவரையும் 'வா—போ' என்று பேசக்கூடாது. 'வாருங்கள்—போங்கள்' என்று சொல்ல வேண்டும் தெரிகிறதா?

ராமன்:—நல்லது எசமான்! அப்படியே பேசுறேன்.

எஜமான்:—சரி! என் மனைவியை நான் கூப்பிடுவதாகச் சொல்.

ராமன்:—(எஜமானரின் மனைவியிடம்) அம்மாங்கள் உங்கள் 'புருஷன்கள்' கூப்பிடுகிறார்கள். —K. S. சேதுராமலிங்கம்

வாங்குபவர்:—ஐயா! இந்த சைகில் எவ்வளவு வேகம் போகும்?

விற்பவர்:—விடும் ஆளின் சக்தியைப் பொருத்தது.

வாங்குபவர்:—அப்படியானல் எனக்கு வேண்டாம். எங் கண்ணு என்னிடம் சைகிலெல்லாம் குதிரையைவிட வேகமாகப் போகும் என்று சொன்னர். நீ என்னமோ ஒரு ஆள்வேகம் போகும் என்று சொல்லுகிருயே? கடத்தூர் R. அருணுஜலம்

புருஷன்:—(தன் மனைவியைப் பார்த்து) அடியே சமையல் ஆய்விட்டதா?

மனைவி:—நீங்கள் அப்போவே சமைக்க வேண்டாம் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டீர்களே.

புருஷன்:—நீ அப்படித்தான் சொல்வாய் என்று கிளப்பில் சாப்பிட்டு வந்துட்டேனே. —S. S. M. A. வெள்ளையன்

பாட்டி:—பள்ளிக்கூடம் போகாமல் விளையாடிக்கொண்டிருக்கும் பேரனைப் பார்த்து:—ஏன் பள்ளிக்கூடம் போகாமல் விளையாடிக் கொண்டிருக்கிருய் என்று அதட்டினுள்.

பேரன்:—என்ன பாட்டி ரொம்ப ரொம்ப மிரட்டுகிருயே? என்னையும் தாத்தா என்று நினைத்து விட்டாயோ?

—T. K. அனந்தராமன்

வேலன்:—கந்தா! என் பல்லெல்லாம் ஆடுது, வலியோ! சொல்ல முடியலே.

கந்தன்:—அதற்கென்ன நம்ம டாக்டரய்யாவிடம் போய் பல்லை யெடுத்துவிட்டுப் பொய்ப் பல் கட்டிக்கிறது.

வேலன்:—நாமாட்டேண்டா! அன்னிக்கு அவங்க காரில் வரும் போது, நான் குறுக்கே போனதற்கு இந்த முட்டாளின் பல்லை யுடைக்கணுமுண்ணு சொன்னுர்டா. —G. R. ராஜன், குகை

ஒரு பிச்சைக்காரன் ஒருவரிடம் பிச்சை கேட்டான்.

ஒருவர்:—ஏதாவது வேலை செய்கிறதுதானே? வெறுந் தடியனு இருக்கிருயே?

பிச்சைக்காரன்:—இல்லை ஐயா வேலை செய்யாமல் இல்லை. நான் பணக்காரனுகப் பத்து வழிகள் என்று ஒரு புத்தகம் கூட எழுதி இருக்கிறேன்.

ஒருவர்:—பின் ஏன் பிச்சை வாங்குகிருய்?

பிச்சைக்காரன்:—பத்து வழிகளில் இதுவும் ஒன்று.

—வேப்பேரி கே. பி. துரைசாமி

புருஷன்:—அடியே நமக்கு வெகு நாட்களாகக் குழந்தையே இல்லையே. கடவுள்தான் நமக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தால் ஆகாதா?

பெண்ஜாதி:—இதற்காகத் தாங்கள் ஏன் வருத்தப்பட வேண்டும். எனக்கு முன்னமே ஒரு குழந்தையுண்டு. இது தெரிந்தால் என்னைக் கல்யாணம் செய்து கொள்ள மாட்டீர்களே என்றுதான் சொல்லாம லிருந்தேன்.

—A. P. சாமியப்ப ஆசாரியார் அந்தியூர்

சாமான் வாங்க வந்தவர்:—உன்னுடைய குமாஸ்தா எனக்கு மரியாதை காட்டவில்லையே?

கடைகாரன்:—அவருக்கு அது இருக்கிற இடம் தெரியாது போலிருக்கு.

—T. S. அப்துல் ரசூல்

இராமாயண நாடகத்தில் கடலில் அணைகட்ட அனுமார் கற்களைக் கொட்டிவரும் கட்டத்தில், நாடகக் கொட்டகையின் மேல் மடமட வென்று கற்கள் எறியப்பட்டன.

இராவணன்:—அடே சேவகா! குரங்குகள் என்ன செய்கின்றன. கற்களை வாரி யிறைப்பதுபோல் தோன்றுகின்றதே. அவை எங்குள்ள குரங்குகள்?

சேவகன்:—அரசே! குரங்குகள் தங்கள் வேலையை ஆரம்பித்தன. இனி நாம் இங்கிருக்கப்படாது. தயாரா யிருங்கள். புறப்படுவதற்கு. தயங்கினால் ஆபத்தே.

—C. R. ராஜன் குகை

புருஷன்:—(பெண்சாதியைப் பார்த்து) ஏண்டீ! குழம்பில் உப்பு அதிகமாய் இருக்கிறதே.

பெண்சாதி:—நான் சாதத்தில் உப்புப் போடுவதற்கு மறந்து விட்டேன்.

—V. ராஜு

குரு:—ராமா உனக்கும் ஒரு எருமைக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமை என்ன?

ராமன்:—ஸார்! நானும் கருப்பு அதுவும் கருப்பு. என் குணமும் அதுபோலத்தான் என்று என் பாட்டி சொல்லி யிருக்கிறாள். எருமையும் நானும் ஒரே ஏரியில்தான் ஸ்நானம் செய்கிறோம்.

ஆனால் அதற்குக் கொம்பு, நாலு கால், வால் உண்டு அவைகள் எனக்கில்லை.

—காத்தூர் R. அருணாஜலம்.

# தமிழரசு

## ஆட்சியும் மாட்சியும்

[வித்வான் ஐ. நடேச பிள்ளை, பொன்னேரி]

வெண்பா

வாழ்க செந்தமிழ் வாழ்க தமிழரசு
வாழ்க தமிழரெலாம் வாடாமல்—வாழ்க
இருநிலமும் என்றும் எழிலியும் மற்றும்
வருமதியும் போல வளர்ந்து.

நிலவுலகில் தொன்றுதொட்டு சீரும்சிறப்பும் மிகுந்து செல்வம் நிறைந்து திகழப் பெற்றது தமிழ் நாடு. தமிழ் மொழி வழங்கும் காரணத்தாலேயே இது தமிழ் நாடு எனப்படுகிறது. இந்நாட்டிற் பிறந்தோர் தமிழர் எனப்படுவர். தமிழர்கட்குத் தமிழே தாய் என்னலாம். இதன் சிறப்புத் தெரிவதற்கின்றிப் பல மொழிகளாகிய புதர்கள் மூடி யிருக்கின்றன. தமிழாகிய மாணிக்கம் பிறமொழிகளாகிய மண்ணும் குப்பையும் கல்லும் முள்ளும் மூட மறைந்துளது. ஆகவே தமிழின் தனிச் சிறப்பைக் கூறி விளக்க வேண்டியது நம் கடமை.

சிவபெருமானுக்கு இராஜதானியாகிய மதுரையில் புகழுடன் நிலைத்து வளர்ந்தது தமிழ்ச் சங்கம். அச்சங்கத்தில் ஒரு புலவராயிருந்த சோமசுந்தரக் கடவுளும் தடாதகைப் பிராட்டியும் கணபதியும் முருகக் கடவுளும் திருஞான சம்பந்தரும் சுந்தரமூர்த்தி நாயனரும் திருநாவுக்கரசரும் மாணிக்கவாசகரும் அகத்தியரும் தொல்காப்பியரும் மெய்கண்டதேவரும் திருவிசைப்பாப் பாடிய திருமாளிகைத் தேவர் முதலியவர்களும் திருமூலரும் கபிலர், பரணர், நக்கீரர் முதலிய சங்கப் புலவர்களும் ஐயடிகள் காடவர்கோன் நாயனரும் சேரமான் பெருமாள் நாயனரும் திருவள்ளுவரும் ஆகிய கற்றோர் அனைவரும் தமிழின் தோற்றமே எனப் புகல்வது தகும்.

பஞ்சால் ஆகாத நூலாகவும், கையால் முறுக்கேற்றப்படாத பாவாகவும் அழுக்கடையாத இயற்கைக் கலையாகவும், சாயந்தோய்க்காமலே ஆகிய செந்தமிழாகவும் உள்ளது அது. உழுது பயிரிடாமலே சொற்கள் விளையும் நிலம் (செய்யுள்) மிகக் கொண்டிருக்கும் நம்முடைய தமிழ் (மொழி) நாடு வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா என்னும் ஐந்து குலத்திற்கும் தாயகமாக மிளிர்கிறது. தனக்கு ஒப்பும் உயர்வும் இன்றி சிறந்திருக்கிறது. உந்தித்தடமாகிய இடத்தில் வளிதரிக்க, சொல்லாகிய கருவாகி, தலை, கண்டம், மூக்கு, மார்பு ஆகிய இடங்களிற் சேர்ந்து உதடு,

பழந்தமிழ் நூல்களின் கருத்தைத் தொகுத்து எழுதப்பட்டது.

நா ஆகிய இரண்டின் முயற்சியால் அழகிய உரு அடைந்து முதல் முப்பது எழுத்தாகப் பிறந்துபின்னும் பல சார்பெழுத்தாகக் கிளைத்தது நம் தமிழ்!

எண், பெயர், முறை, பிறப்பு, உருவம், மாத்திரை, முதல் நிலை, இடை நிலை, ஈற்றுநிலை, போலி, பதம், புணர்ச்சி என்னும் பன்னிரண்டு பருவங்களாக வளரும்போது, பள்ளிக்கூடத்தில் சுவடி தூக்கும் பலகையாகிய தொட்டிலில் கிடத்திச் சிறுவர் தாலாட்டுப் பாடியும் மஞ்சள் குளிப்பாட்டியும் மையிட்டும், அறம் பொருள் இன்பமாகிய முப்பாலை ஊட்டியும் வளர்க்கப்பட்டது நம் தமிழ்!

பின் தன் மக்கட்கு, காப்புப் பருவம் முதலாகிய பத்துப் பருவம் வகுத்து வளர்த்தது. தம் மக்களாகிய தமிழரால் விரும்பப்படும் படிப்பு அனைத்தையும் கற்பித்தது. இன்னும் செய்யுளுக்குரிய இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொற்களையும் செந்தமிழ்க்குரிய பெயர்ச் சொல், வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களையும் அகத்திணைகளாகிய கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை ஆகிய எழுடன் புறத்திணைகளாகிய வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பையாகிய எழும் கூடிய பதினன்கு திணைகளையும் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை பா, பாவினம் என்னும் யாப்பு எட்டையும், தன்மையணி முதலிய முப்பத்தைந்து அணிகளையும் இயற்கை யழகாகப் பெற்றுள்ள ஒரு மாப்பிள்ளையாயிருக்கிறது நம் தண் தமிழ்!

அம்மாப்பிள்ளைக்குச் செப்பல், அகவல், துள்ளல், தூங்கல் என்னும் நான்கு பண்களும் பட்டமகிஷிகளாகவும் தோல், துளை, நரம்பு, கஞ்சம், மிடறு ஆகிய ஐந்து கருவிகளின் மூலம் தோன்றும் ஏழு பாலைகளையும் முதலாகவுடைய நூற்று மூன்று பண்களும் பின்முறை மணக்கிழத்திகளாகவும், வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், நகை, நடுவுநிலை, உருத்திரம் ஆகிய ஒன்பது சுவைகளையும் பிள்ளைகளாகவும் கொண்டு பெரு வாழ்வு நடத்துவது நம் நற்றமிழ்!

இந்நற்றமிழாகிய நாயகன் தனக்குரிய வாழ்வுகாளாகிய மலை, கடல், நாடு, நகர், சிறுபொழுது ஆறு, பெரும்பொழுது ஆறு, சூரியோதயம், சந்திரோதயம் ஆகிய பதினெட்டையும் கண்டு மகிழ்ந்து நாடகமாகிய பெண்ணின் வனப்பையும் நடிப்பையும் கண் விருந்தாக உட்கொண்டு வீற்றிருக்கின்றான்.

மேலும் பத்துத் திசையிலும் தமிழின் ஆட்சி இல்லாத திசை ஒன்றேனுமில்லை. தமிழாகிய பேரசனின் கீழ், திசைச் சொற்களாகிய பதினேழும் சிற்றரசர்களாயிருந்து ஐம்பத்தாறு தேச ஆளுகையும் ஒழுங்காக நடைபெறும் சிறப்பிற்கும் ஈடுண்டோ?

மேல்கடலும் கீழ்கடலும் குமரியாலும் வடவேங்கடமும் சூழ இடை நின்றது இதன் ஆட்சிக்குட்பட்ட நிலமாம். இதுவன்றி தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண், பூழி, பன்றி, அருவா, அருவாவடதலை, சீதம், மலாடு, புனல், ஆகிய பன்னிரண்டு நாடும் அப்பால் நிலமாம். இதனுள் வையை நதியின் வடக்கு, மருதயாற்றின் தெற்கு, கருவூரின் கிழக்கு, மருவூரின் மேற்கு ஆக நடுவுள்ளதாகச் சொல்லப்பட்ட நிலமே தமிழின் அரண்மனை.

சேரரும் சோழரும் பாண்டியரும் வானுலகு, பாதளவுலகு முதலிய இடங்கட்குச் செல்லுங்கால், அவர்களுடன் நம் தமிழும் அவர்களையே வாகனமாகக் கொண்டு அவர்களுடன் சென்று புகழ் பெற்றிருக்கிறது.

தமிழாகிய நமது அரசினுக்கு வேதாகமங்களே புரோகிதர். ராமாயணம் முதலிய வடமொழிக் காவியங்களும் வடமொழி நாடகங்களும் அலங்காரங்களுமே தோழர்கள். சாஸ்திரங்களே சேனபதிகள். பாரதமும் பதினெண் புராணங்களுமே சேனைகள். எழுத்து வருத்தனமென்னும் சொல்லணியே பார்ப்பார்.

நமது அரசுக்கு இரதபந்தமென்னும் சொல்லணியே ஊர்தியாகிய இரதம். கூடற் சதுக்கமெனும் சொல்லணியே உலாவரும் நான்கு ராஜ வீதிகள். மாலை மாற்று என்னும் சொல்லணியே பூமாலை. சதுரங்கபந்தமென்னும் சொல்லணியே நாற்படைகள். முரசபந்தம் என்னும் சொல்லணியே மும்முரசங்கள். இவ்வளவு சின்னங்களுடன் மூம்முடி வேந்தர் சூழ்ந்திருக்க மேன்மையான சங்கப் பலகையே சிங்காதனம். இப்படி வீற்றிருந்து ஆட்சி செய்த முறை வியப்பினும் வியப்பன்றோ !

பின்னும் நம் தமிழரசுக்கு அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவர் தேவாரமும், மணிவாசகருடைய திருவாசகம் திருக்கோவையாரும் காரைக் காலம்மையார் திருவிரட்டை மணிமாலையும், இலக்கண நூற்பாக்களும் சிந்தாமணி முதலிய பஞ்ச காவியங்களும், சூளாமணி கம்பராமாயண முதலிய பெருங் காப்பியங்களும் சேரமான் பாடிய பொன்வண்ணத் தந்தாதியும் திருவாரூர் மும்மணிக் கோவையும் திருவிடைமருதூர் மும் மணிக்கோவையும், நக்கீரர் முதலிய பேறிஞர் பாடிய பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் பதினெண் கீழ்க்கணக்கும், இரட்டைப் புலவர் இயற்றிய திருவாமாத்தூர்க் கலம்பகமும் கலிங்கத்துப்பரணியும் இராஜ ராஜ சேழன் உலாவும் குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழும் ஆகிய நூல்கள் மெய்க்காப்பாளராக இருக்க யாதொரு அசைவுமின்றி ராஜகாரியம் புரிந்தமை பெரும்புகழாம்.

சிம்மாசனம் நம் தமிழுக்கே உரித்தா யிருந்தமையால் அதற்கீடெவரும் இல்லை என்று மொழிதல் இழுக்காகாது.

வெண்பா முதலிய நாற்பாவும் வரப்பாகவும் பாவினங்கள் மடைப் போக்காகவும் உள்ள நிலத்தில் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு கரணங்களாகிய ஏரைப்பூட்டி, நான்கு நெறிகளாகிய தருப்பம், கௌடம், பாஞ்சாலம், மாகதம் என்னும் விதைகளை விதைத்து செவ்விதின் எருவிட்டு, நீர்ப்பாய்ச்சி, காவல்புரிந்து அப்பயிருடன் விளையும் களைகளைப் பிள்ளைப் பாண்டியன், வில்லி, ஒட்டக்கூத்தன் முதலியோர் பறித்தெறியப் பழுதின்றி வளர்ந்து பலன்தராநின்ற பயிரென்னலாம் நம் தமிழை !

அத்தமிழ்ப் பயிரில் பால் (க்ஷீரபாகம்) முந்திரிகை (திராக்ஷாபாகம்) வாழை (கதலீபாகம்) கரும்பு (இட்சுபாகம்) நாளிகேரம் (நாளிகேர பாகம்) ஆகிய இனிய சுவைப் பொருள்கள் விளைந்து இனிமை விளைத்தன. பின்னும் சிறந்த அவற்றினும் அமுதச் சுவையும் விளைந்து அதிலும் சிறந்த சுவையுடைய முத்திக்கனியும் தந்து நிற்பது நம் முத்தமிழ்ப் பயிர் !

நம் தமிழ் தேவலோகத்திலுள்ள சிந்தாமணியோடு சமமானது என்பதற்குச் சிந்தாமணி என்னும் நூல் ஒன்றே சான்று கூறும். இதன் சிறப்போ சொல்லும் தகுதியுடையதன்று. ஆயினும் சிறிது எடுத்துக் கூறுவோம்.

நமது தமிழ் தேவரினும் சிறந்ததே. முத்தேவர்களுக்குச் சத்துவம், இராசதம், தாமதம் என்னும் மூன்றே குணங்கள் உண்டு; நம் தமிழரசுக்கோ செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக் குணங்களுண்டு.

உலகில் இயற்கை வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என ஐந்தே. ஆனல் தமிழுக்கோ குறிலகவல் தூங்கிசைவண்ணம் முதலாக இடைமெல்லிசை மயங்கிசை வண்ணம் வரையில் நூறுவண்ணங்களாகும்.

சுவை கைப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என ஆறுயிருக்க, தமிழுக்கு வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், ஈகை, நடுவுநிலை, உருத்திரம் ஆகிய ஒன்பதாகும். ஆயினும் உணவுக்குரிய ஆறு சுவையும் உண்ணும்போதே தோன்றப்படுவன. தமிழின் சுவை ஒன்பதும் நினைக்குந்தோறும் புதுமையாகப் புதுமையாக இன்பம் தருவன.

மானிடர் யாவர்க்கும் வனப்பு ஒன்றே. தமிழுக்கோ வனப்பு எட்டு. அவை அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு என்பன.

எல்லா அரசரும் பொருள் கொள்ளும்வகை உடையவரில்லாமையால் வலிய வந்து சேர்ந்த பொருள், சுங்கத்தால் கிடைக்கும் பொருள், பகைவர் கப்பப் பொருள் என மூன்றே. தமிழ் பொருள் கொள்ளும்வகை எட்டு; அவை:—யாற்று நீர், மொழி மாற்று, நிரல் நிறை, விற்பூட்டு, தாப்பிசை, அளைமறிபாப்பு, கொண்டு கூட்டு, அடிமறிமாற்று.

உலகியலில் அறம், பொருள், இன்பம் என முப்பாலே உண்டு. அதுபோல் தமிழுக்கு ஆண், பெண், பலர், ஒன்று, பல என ஐம்பால் உண்டு.

யார்க்கும் இல்லாதவிதமாகத் தமிழுக்குச் சீர் முப்பதுண்டு. அவை ஓரசைச்சீர் இரண்டு, ஈரசைச்சீர் நான்கு, மூவசைச்சீர்எட்டு, நாலசைச்சீர் பதினறு. தமிழ் தனக்குண்டான தளைகள் ஏழு; அவை ஆசிரியத்தளையிரண்டு, வெண்தளை யிரண்டு, கலித்தளை யொன்று, வஞ்சித்தளை யிரண்டு. இப்படி ஏழுதளையை யுடைய தமிழ் சேரமான் கணைக்காலிரும்பொறையின் தாள் தளையை விடுவித்தது.

இனி பொருட் செல்வத்தினுள் சிறந்த கல்விச் செல்வத்துள் தமிழ் தலை சிறந்தது என்பதையும் காட்டுவோம்.

தமிழில் உள்ள சிந்தாமணி என்னும் நூலோடு சமத்துவத்தைக் காட்டவே தேவருலகத்திலுள்ள மணி அப்பெயர் பெற்றதென்னலாம். அரசர் முதலிய பலரும் அணியும் ஆபரணங்கள் எதுவும் தமிழிலக்கண அணி ஒன்றுககுச் சரியாகுமா? உலகில் வழங்கும் பல மொழிகள் வழக்கின் மூலம் தமிழ்நாட்டில் வந்து இடம்பெற்றும், தமிழ் தன் அழகில் குறையாமல் கன்னித் தமிழாகவே யிருப்பது மிக்க ஏற்றமுடைமையைக் காட்டுகிறது?

எல்லாத் தெய்வங்களும் தமிழை விரும்புவது கூற வேண்டுமோ? சிவபெருமான் சங்கத்தில் புலவராயிருந்து தமிழில் அகப்பொருள் இலக்கணம் கூறினார். கலைமகள் எப்போதும் கையில் சுவடி தாங்கியிருக்கிறாள். அவளுடைய மறுதோற்றமே தமிழெழுத்துக்களும் ஆகும். திருமால் ஒரு தமிழ்ப் பாட்டைத் தொடர்ந்து, காஞ்சியில் தாம் வீற்றிருந்த கோவிலை விட்டு நீங்கினார். முருகவேள் அகத்தியர் மூலம் தமிழை உலகில் பரவச் செய்தார். உருத்திர சன்மனாயிருந்து தமிழ் கேட்டு மகிழ்ந்தார். ஔவையாரோடு தமிழில் சொற்போர் நிகழ்த்தினார். காட்டில் பொய்யாமொழிப் புலவரிடம் செய்யுள் கேட்டார்.

தமிழின் இனிமைக்கு இரங்கியல்லவா சிவபெருமான் இரவில் இருளில் காலால் நடந்து தூது சென்றனர்.

மற்றும் அஃறிணைப் பொருளாகிய ஆண் பனையும் தமிழ்ப் பாவைக் கேட்டவுடன் பெண்பனையாகிக் காய்த்ததன்றோ!

தமிழ் பெண் வடிவானமை கூறுதலும் வேண்டுமோ! காரைக்காலம்மையாரும் திலகவதியாரும் தமிழின் தோற்றமே. திலகவதியுடன் பிறந்ததும் தமிழே. மங்கையர்க்கரியாருக்கு ஆசிரியராய் இருந்தது எது? தமிழே இசை ஞானியாருக்கு மகவாகவும் தோன்றியது. சிங்கடிக்கும் வனப்பகைக்கும் தந்தையாயினது தமிழல்லவா?

தமிழுக்கு மதுரைச் சொக்கநாதர் முழுதும் வசப்பட்டவராவார் என்பதை விளக்குவோம். நயந்து வேண்டிய தருமிக்குப் பொற்கிழி கிடைக்குமாறு பாடித் தந்தார்.

நக்கீரருடன் சொற்போர் புரிந்தார். பாண பத்திரருக்குத் திருமுகங் கொடுத்தார். இடைக்காடனாருடன் வடமதுரை சென்றார். காரியார் நாரியார்க்குப் பாப்பகுந்தளிக்கக் கடுங்கானகத்தில் நடந்தார். விறகும் விற்றார். இசைவாதும் வென்றார்.

தமிழின் பெருமை இன்னும் கூறக் கூற வளருமே ஒழிய முற்றுப் பெறுவதில்லை. வெள்ளத்தோடு போகும் ஏட்டை எதிரேறச் செய்ததும், நெருப்பில் ஏட்டை எரியாதிருக்கச் செய்ததும் ஔவை, கருத்துக்கிசைய நெய், பால், தயிர் கொணர்ந்ததும், சூலைநோய் தீர்த்ததும், வெப்பு நோய் நீக்கியதும் முதலையுண்ட பாலனை வருவித்ததும் எலும்பைப் பெண்ணாக்கியதும் மூடப்பட்ட கதவைத் திறந்து பின் மூடியதும் தமிழ் அல்லவா?

தமிழின் இனிமை கண்டல்லவா வேதமுரைத்த அயன் பின்னும் வள்ளுவராகப் பிறந்து திருக்குறள் கூறி மகிழ்ந்தார். எண்ணில்லாத குதிரைகளை நடத்தி வர ஒப்புக்கொண்ட சிவபெருமான் தமிழின் உயர்வை விளக்க அல்லவா வேதங்களைக் குதிரையாகக் கொண்டு ஏறி வந்தார்! தமிழின் இன்பத்தை அனுபவித்து அடங்காததால் அல்லவா தென்னாட்டுத் தில்லையில் சிவபெருமான் ஆடுகிறார்.

தமிழ்ச் சொல்லின் இனிமை மிகுதியாலன்றோ, பித்தா என்பதும், கள்வன் என்பதும் சிவபெருமானுக்கு ஏற்கும் இனிய பெயர்களாயின.

கல்லானை கரும்பு தின்ற பெருமை தமிழுக்கல்லாமல் வேறெம் மொழிக்குண்டு. கொள்ளம்பூதூர் வெள்ளத்தைக் கடத்திவிட்ட துணைப்

பெருமை தமிழினது அன்றோ? சமணரிட்ட நஞ்சின் கொடுமையை மாற்றியது தமிழின் இனிமை யன்றோ?

கல்லைக் கடலில் மிதக்கச் செய்ததும் ஆற்றிலிட்ட பொன்னைக் குளத்தில் கொணர்ந்து தந்ததும் தமிழின் சிறந்த செயலல்லவா?

சாக்கியரைக் கழுவேற்றிய திறமையும் பாண்டியனுடைய கூனை நிமிர்த்த நேர்மையும், பொதியத்திலுள்ள சந்தனத்தோடும் தென்றலோடும் நேசங்கொண்ட தன்மையும் சம்பந்தப் பெருமானுக்குச் சின்னம், காளம், சிவிகை முதலியன வாங்கித் தந்து முத்துப்பந்தரும் பெறச் செய்த பெருமையும் தமிழினுடையதல்லவா?

இவ்வளவு மாத்திரமா? வேயுறு தோளிபங்கன் என்னும் பாட்டைப் பாடிச் சென்றால் செல்லும் காரியம் எதுவெனினும் இடையூறின்றி முடிவேறுமே.

திருவையாற்றிற் காவிரி வழி விடுமாறு செய்தது தமிழே. பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியது தமிழே. தமிழின் சுவை யருந்துவதற்காக அன்றோ சிவபெருமான் பொதி சோறு சுமந்து கொண்டு சென்றனர்.

கேடில்விழுச் செல்வமாகவுள்ள தமிழின் மேம்பாட்டை யறிய திருவாவடுதுறையில் பொற்கிழி பெற்றதும், திருப்புகலூரில் செங்கல்லைப் பொன்னாக்கியதும், பட்டினப்பாலை என்னும் வஞ்சி நெடும்பாவிற்கு பதினறுகோடி பொன் பெற்றதும் ஆகிய அரிய பெரிய செயல்களே போதியதாகும்.

இனி இத்தமிழரசின் நெடும்பழமையையும் எடுத்துச் சிறிதே காட்டுவோம்.

அகத்தியர் கூறிய இலக்கணத்திலேயே தமிழுக்குத் தொன்மை தோல் என்னும் இருவகை யழகுக்ள் உண்டெனப் பெறுகிறோமாதலால், இவ்வழகு பெறுவதற்கு முன் எவ்வளவு ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழ் தோன்றி வழங்கி யிருக்க வேண்டும். பாருங்கள் திருப்புகழில்

'முத்தமிழடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே'

'பழமொழி எழுதிய கணபதி'

'பரசிவை......தமிழைத் தருபழையவள்'

'முதுதமிழுடையவன்......சிவன்,

'முதியமா தமிழ் இசையதாகவே மொழி செய்து'

எனப் பலவிதம் கூறியதே போதிய சான்றாகும்.

தமிழ் தெய்வ (கடவுள்) மொழி என்பதை
'கொன்றைச் சடையார்க்கு ஒன்றைத்
தெரியக் கொஞ்சித் தமிழாற் பகர்வோனே'

என்றதனுலும்

'தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்பு பெண் உருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்?'

என்னும் கேள்வியின் விடையாலும் விளங்கும்.

திருதராஷ்டிரன் காந்தாரி என்னும் ஆரிய நாட்டுப் பெண்ணை மணந்து கொள்ளுவதற்குமுன் குருநாடு முழுதும் தமிழே வழங்கியதாகத் தெரிகிறது. சனகன் தமிழரசன் என்பதும் அவனுடைய நாடும் தமிழ் நாடென்பதும் தெரிய வருகிறது. கிழக்கில் சந்தத்தீவு தொடங்கி மேற்கே மடகாசிகர் தீவுமட்டில், ஒரு காலத்தில் பரந்து கிடந்த லெமூரியாக் கண்டத்தில் வாழ்ந்த தொல்லோரால் பேசப்பட்டது தமிழே என்றும் தெரிய வருகிறது. இத்தாலியா தேசத்தில் பல நூற்றாண்டுகளுக்கு முன்னே தமிழர்களுக்குச் சம்பந்தமான சாதியார் இருந்தார்கள் என்று கால்டுவெல் அறிஞர் கூறி யிருக்கிறார். தமிழ் மொழி வரலாறென்னும் நூலில் கூறிய 'பதினாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட தமிழ் எழுத்துள்ள கல்வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன' என்னும் சொல்லும் பூதஊர் யோகியார் முத்துசாமி ஐயர் அவர்கள் 'பதினேழு யுகப்பிரளயத்துக்கு முன்னமே தமிழ் உளது; வேதங்களுக்கு முன்னமே தமிழுண்டு எனச் சித்தர் நூல்கள் கூறுகின்றன' என்பதும், 'தமிழருடைய பழமையை நோக்குங்கால் ஆரியருடைய பழமை கணப்பொழுதிற்கு முன் பெற்ற ஞாட்டர் தந்திச் செய்தியைப் போலாகும்' என்று சென்னை கவர்னரா யிருந்த கிராண்டப் அவர்கள் கூறியதும் நமக்கு எதைப் புலப்படுத்துகின்றன?

ஆரியத்தைக் காட்டிலும் தமிழ் முற்பட்டது. ஒரு காலத்தில் (ஆரியம் வருமுன்) சகம் முற்றிலும் தமிழ் இருந்தது. வேதங்களுக்குமுன் தமிழுண்டு என்னும் உண்மைகளை அறிவிக்கின்றன.

இப்படிக் கூறுவது எதற்கு என்றால் உண்மை விளங்கவே யாகும். அல்லாமல் மற்ற மொழிகளைக் குறை கூறுவதற்கன்று. இதனை அருணகிரிநாதர் கூறிய கயிலைமலையும் விநாயகக் கடவுளும் முற்பட்டமைபோல உலகில் தமிழ் முற்பட்டது என்னும் மொழியே காட்டும். திருவாசகத்தி லிருந்து அறியும் உண்மை ஒன்று இங்கே கூறுவோம். தமிழ் நாடாகிய தென்னாட்டிலிருந்த மகேந்திர மலையிலும் குமரி நாட்டைக் கடல் கொள்வதன் முன் ஒரு தமிழ்க் கழகம் இருந்திருக்க வேண்டும். இதனால் தமிழின் பழமையை ஐயப்படுவது எப்படி?

'கடுக்கனுக்கு முன்பே பொன் இருந்தது எப்படி உண்மையோ அது போல ஆரியத்துக்கு முன் தமிழ் இருந்ததும் உண்மை' என்பர் ஒரு பெரியார்.

இத்துணை சீரும் சிறப்பும் தொன்மையும் வாய்ந்த, அரசபதவியி லிருந்த, தமிழின் பெயரால் வெளியாகும் தமிழரசு என்னும் பத்திரிகையில் இக்கட்டுரை வெளிவருவது பாலில் இனிப்பு இயற்கையா யிருப்பது போலாகும்.

ஆகவே தமிழை வாழ்த்தி, தமிழரசை வாழ்த்தி, அதை ஆதரிக்கும் தமிழரையும் வாழ்த்துவோமாக.

தமிழ் வாழ்க.

---

20678
M211, N30TA

# வறியோன் கண்ட வான்மதி!

[புதுவை - எஸ். சிவப்பிரகாசம்]

நிலவே நிலவே! நெஞ்சங் கவருங்
கலையெலாம் நிறைந்த கவின்பெறு நிலவே!
திடமுடன் நீதான் சிந்தனை யின்றி
மடமட வென்றே வானிற் செல்கிறாய்.
நானோ மிகவும் நல்கூர்ந் ததனால்
வாணுதல் மனைவி மக்களைப் பிரிந்தே
பிழைப்புத் தேடி அலைகிறே னிங்கே;
உழைக்கும் வலிமை இருந்தும் அந்தோ
ஒருவரும் சீண்டுவா ரில்லை; அதனால்
உருக்கு லைந்த உளத்தால் இந்த
நடுநிசி தன்னில் நனிகுளிர் தாளாது
முடங்கிக் கிடந்து மூட உலகின்
சிறுசெய லெண்ணித் தியங்கிடும் போது,
முறுவல் செய்தே முகத்தெதிர் வந்தாய்.
என்நிலைக் கிரங்கி இன்மையைப் போக்கிட
நீசெலும் உலகில் ஆசையாய் வேலை
தேடித் தருவாய் என்ற மகிழ்வால்
வாடிக் கிடந்த தலையை நிமிர்த்தினேன்.
அந்தோ! அந்தோ! நீதான் என்றன்
ஆருயிர் மனைவியின் சீர்முகங் காட்டிக்,
குழந்தையு மவளும் கொண்ட உளத்தைப்
பழியுறு களங்க மதனில் காட்டி,
உடைந்த என் நெஞ்சை மீண்டும்
ஒடுங்கச் செய்தாய்! உய்வனோ இனியே?


**தேவை! தேவை!! தேவை!!!**

டாக்டர் மே. மாசிலாமணி முதலியாரால் தயாரிக்கப் படும் அரிய மருந்துகளையும், லக்பீடி கம்பெனியாரால் தயாரிக்கப்படும் பீடியையும், 'தமிழரசு' மாத சஞ்சிகையையும் பர்மாவில் விற்பனை செய்ய ஏஜெண்டு தேவை. ரூபாய் 5000 டிபாசிட் கட்டத் தகுதி யுடையவர்கள் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்
31, வைத்தியனாத முதலி வீதி, சென்னை.

# அல்லியும் அரவிந்தமும்

[நிறை, கரந்தை, தஞ்சை]

பலவகைப்பட்ட மலர்களுள் அல்லியும் அரவிந்தமும் தனிச் சிறப்பைப் பெற்று விளங்குவனவாம். பூவில் சிறந்தது தாமரையே என்பதைச் சிவப்பிரகாசர் 'பூவெனப்படுவது பொறி (இலக்குமி) வாழ் பூவே' என்று கூறியருளினர். குளத்தை அழகு பெறச் செய்வன அல்லியும் அரவிந்தமுமாகும். அரவிந்தம் காலையிலும், அல்லி மாலையிலும் மலர்ந்து இனிய காட்சி தந்து நம்மை மகிழ்விக்கின்றன. ஞாயிற்றின் தோற்றம் தாமரை மலரையும் திங்களின் தோற்றம் அல்லி மலரையும் மலரச் செய்வனவாகும். இதனால் புலவர்கள் ஆதவனை அரவிந்தத்தோடும் திங்களை அல்லியோடும் தொடர்பு வைத்துப் பாக்கள் இயற்றுவர். அங்ஙனம் புலவர் நாவில் பொருந்திய பூக்கள் அவர்களால் வருணிக்கப்படுவது கற்போருக்கு அகவிருந்து அளிப்பதாகும். அப்படிக் கவிஞரால் சொற்சுவையும் பொருட்சுவையும் அமைய எழுதிய பாக்களுள் ஒன்றிரண்டு கண்டு களிப்பது நன்றாகும்.

திருவிளையாடற் புராணத்தில் மாலைக் காலத்தை வருணிக்கப் புகுந்த பரஞ்சோதியார் அதன் தோற்றத்தை,

'வரவு நேர்ந்தழைப் பவரென ஆம்பல் வாய்மலர
இரவு கான்றுவெண் மதிநகைத் தெழவுயிர்த் துணைவர்
பிரிவு நோக்கினர் எனக்கணீர் பில்குதா மரையின்
நிரைகள் கூம்பிடக் கதிரவன் குடகடல் நீந்த'

என்று பாடியுள்ளார். இப்பாட்டில் புலவர் இரவைக் கக்குகின்ற சந்திரனாகிய தன் கணவன் வருகையைக் கண்டு அல்லியாகிய நங்கை வாய் மலர்ந்து நிற்க, தன் கணவனாகிய சூரியன் பிரிவிற்கு ஆற்றாது தாமரையாகிய பெண் தேனாகிய கண்ணீரைச் சொரிந்து தன் இதழ்கள் குவிந்து நின்றாள் என்பது வெளிப்படையான பொருள்.

இனி, இதற்கு வேறு வகையால் தொனிப் பொருள் உரைக்கப் படும். ஆம்பலைப் பொது மகளுக்கும் தாமரையைப் பத்தினிப் பெண்ணுக்கும் உவமிப்பது மரபு. அதன்படியே இங்கு ஆம்பலாகிய பொது மகள் சந்திரன் தன்னை நோக்கி நகையுடன் வருவது கண்டு தானும் மலர்ந்த வாயுடன் வரவேற்கிறாள். ஆனால் தாமரையாகிய பத்தினிப் பெண்ணோ தன் துணைவனாகிய சூரியன் தன்னை விட்டு நீங்கி, பொதுமகள் வீட்டுக்குத்தான் போகின்றானோ என்னவோ? என்று கவலை கொண்டு விழிநீர் பொழிகிறாள்.

அல்லி அரவிந்தங்கள் சிறப்பை வெளிப்படுத்தும் வேறொரு செய்யுளும் உண்டு. செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ் என்ற நூலில் ஆசிரியர், 'தொட்டிக் கலை' என்ற ஊரின் பெருமையை விளக்குமிடத்து,

'புதிய வாசம் தனைப்பரப்பிப்
புறத்தே எங்கும் திரிந்தயரும்
பொறிவண் டினங்கள் தமையழைத்தும்
புயத்தேன் ஊட்டிப் பகலோம்பி
முதிய நிசிவந் திடும்போது
முகைவிண் டலர்ந்த நறுங்குமுதம்
மூரிச் செழுந்தேன் முகந்தூட்டி
முழுதுங் காத்துக் கடல்வரைப்பின்
வதியும் இரவோர் தமைக்கீர்த்தி
மகளாந் தூதின் வரக்கூவி
மகிழ்ந்தெப் போதும் எவ்வாறும்
வழங்கிக் காக்கும் பெருங்கொடையோர்
கதிய தடம்சூழ் திருக்கலைசை..........'

என்று பாடியுள்ளார். இப்பாட்டில் கவிஞர் கலைசையிலுள்ள குளங்கள் தம்மிடத்தில் மலர்ந்துள்ள தாமரைப் பூக்களினின்று புதிய வாசனையை எங்கும் பரப்புகின்றன. அதனால் வெளிப்புறத்தே எல்லாவிடங்களிலும் சுற்றித்திரியும் வண்டுக் கூட்டங்களை 'இங்கே வாருங்கள்' என்று அழைத்து அத்தாமரை மலர்களிலுள்ள தேனை முகந்து உண்ணச் செய்து பகலில் காப்பாற்றுகின்றது. விருந்தினரைப் பகலில் மட்டும் உபசரித்தால் போதாது. இரவிலும் உணவு கொடுத்து ஆதரிக்க வேண்டும். தாமரை மலர் இரவில் குவிந்திருக்கும். அதனால் தம் விருந்தினராகி வண்டுகளை, குளங்கள் தம்மிடத்தேயுள்ள அல்லி மலர்களின் தேனை யூட்டிக் காப்பாற்றும். இங்ஙனம் நாள் முழுதும் வண்டினங்களை அல்லியும் அரவிந்தமும் கொண்டு காப்பாற்றிக் கடற்பக்கத்தே வாழும் இரவலர்களைப் புகழ் மகளாகிய தூதினால் வரும்படி செய்து, அன்னோர்க்கு எந்நேரத்தினும் எந்த வகையாலும் வழங்கிக் காப்பாற்றும் அறிஞர்களின் நன்னடக்கையுடையவை.

இவ்வாறே தாமரையையும் அல்லியையும் குறித்துவரும் கருத்தமைந்த பாக்கள் பல உள. அவற்றை இங்கே விரிப்பிற் பெருகும். மாணவர்கள் அத்தகைய பாக்களைப் பயிலுங்கால் ஊன்றிப் பார்த்து அகவிருந்து கொள்வது தகவுடையது ஆகும்.

# இரு மார்புக்கு ஒரு வாள்

[T. V. வேதமூர்த்தி]

தாம்பிரபரணி நதியின் நடுவில் மண்டபம் ஒன்று காணப்பட்டது. நதியின் ஜலப்பிரவாகம் அம்மண்டபத்தையும் தன்னுள் அடக்குவதற்கு எத்தனித்தது. ஒவ்வொரு விநாடியும் ஜலம் அதிகரித்துக்கொண்டேயிருந்தது.

சாயங்காலம் 5½-மணியிருக்கலாம். யுவதியொருவள் தன் இடுப்பில் ஓர் குடத்துடன், தன் இல்லத்தினின்றும் புறப்பட்டுக் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இருக்கும் நதியை நோக்கிச் சென்றாள். கதிரவன் மறைந்தும் மறையாததுமாய், பாராமுகமாய் இருந்தான். இதைக் கண்ட யுவதி சற்று விரைவாகவே நடந்து நதியையடைந்தாள்.

அந்த நதியின் விஸ்தீர்ணம் சுமார் 2 பர்லாங் இருக்கலாம். யுவதி நதியின் மத்தியில் வருவதற்குள் கதிரவன் மறைந்துகொண்டான். இருள் சூழ்ந்தது.

குடத்தில் ஜலத்துடன் திரும்புகையில் ஜலம் அதிகரிப்பதைக் கவனித்து, இனி நாம் இருந்தால் ஆபத்து என்று எண்ணிச் சற்று விரைவாக நடந்தாள். தன் புடவை தட்டிக் கீழே விழத் தானும் நனைந்ததுடன், ஆற்றுக்குள் வெகு தூரத்தில் தோண்டப்பெற்ற கிணற்றில் எடுத்த சுத்த ஜலம் குடத்தினின்றும் வெளிப்பட்டது. உடன் மறுபடியும் போய் தண்ணீர் எடுத்து வருவதற்குள் ஆற்று வெள்ளம் இடுப்புவரை அதிகரித்து விட்டது. யுவதி சற்றுத் தயங்கினாள். மாரளவுக்கு ஜலம் அதிகரிப்பதைக் கண்டு, எதிரில் மண்டபத்தை நாடி வந்தாள். சமாளித்துக்கொண்டு, படிக்கட்டுகளின் மூலம் மண்டபத்தின் மேல் சென்றாள். சிறிது நேரத்திற்குள் மண்டபத்தையும் ஜலப்பிரவாகம் சுற்றிக் கொண்டது.

முடிவாக அந்த யுவதி, 'ஐயோ என்னை இந்தப் பேராபத்திலிருந்தும் காப்பாற்றுவர் யாருமில்லையா' என ஓ வென்று கத்தினாள். நதியின் கரையோரம் தற்செயலாய் வந்த ஓர் வாலிபன் காதில் பேல்சொன்ன வார்த்தைகள் விழவே சற்றுக் கூர்ந்து கவனித்தான். ஓர் யுவதி எதிரே நதியினுள் இருக்கும் மண்டபத்தின்மேல், ஜலப்பிரவாகச் சுழலில் அகப்பட்டுத் தவிப்பதைக் கண்டான். சுமார் ஒரு பர்லாங்கு தூரத்தில் இருக்கும் கடைக்குப்போய், தாம்புக் கயிறுக் கட்டு ஒன்று கொண்டு வந்தான். அக்கயிற்றின் முனையொன்றை அங்கு நின்ற மரமொன்றில் கட்டினான். மற்றொரு முனையில் ஓர் சிறு கல்லைக் கட்டி யுவதினிடம் வீச, அவள் அடனே அக்கயிற்றை மண்டபத்தின்மேல் இருந்த ஸ்தூபத்தில் கட்டினாள். வாலிபன் கயிற்றின் உதவிகொண்டு மண்டபத்தின்மேல் இருக்கும்

யுவதியை தன் முதுகின்மேல் வைத்து, வெகு கஷ்டப்பட்டுக் தண்ணீரில் நீந்திக் கரையை அடைந்தான்.

கரையை அடைந்த யுவதியும் வாலிபனும் ஒருவரோடொருவர் நோக்கினர். கண்கள் இரண்டும் சந்தித்தன. சற்று மௌனம் சாதித்தனர். காதல் என்பது தெய்வீக நிகழ்ச்சியன்றோ! ஆதலின், காதல் தீயென்பது அவர்களிடையே மூண்டது.

அத்தியை அணைப்பதற்கு இருவரும் சற்றுத் தயங்கினர்க ளாயினும், சிறிது நேரத்தில் இருவரும் ஒருவரையொருவர் தழுவி இன்ப மெய்தினர்.

மறுவினடி, 'நன்று யிருக்கிறதடி. ஸரஸா நன்னுயிருக்கு' என்ற சப்தத்தைக்கேடட இருவரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்க (விதவையான) தன் அத்தை தன்னைத் தேடி அங்கு வந்திருப்பதைச் சரஸா அறிந்தாள். பின்னும் விதவை ரகுநாதனைப் பார்த்து, 'யார் இவன்? (கவனித்து ஆத்திரத்துடன்) ஐயையோ! கெடுத்திட்டியேடி குடியை. இவன் பறப்பயலாச்சே. இவனைத் தீண்டலாமோ? ஏண்டி. அழகா யிருக்கான்னு பார்த்துட்டியாடி. குடி முழுகிப் போயிடுத்தே........'

பறையன் என்றதும் ஸரஸா சற்றுத் தயங்கினளாகினும், ரகுநாதனிடம் தன் காதலை இன்னும் உறுதிப்படுத்த அவள் மனம் தூண்டியது. ஸரஸா பிராமணச் சிறுமி என்ற போதிலும் அவனும் ஸரஸாவைப் போலவே எண்ணம் கொண்டான்.

விதவைகோபத்துடன் 'அடியே துஷ்டே, குலத்தைக் கெடுத்த கோடாலிக் காம்பே, நீச்சன் அருகில் போவதே மகாபாவமாச்சே ஊர் சிரிக்கவைத்துட்டியே சண்டாளி. அறிவு கெட்ட முண்டமே வா. உன் தகப்பனிடம் சொல்லிப் பிராயச்சித்தம் செய்து துலைக்கி றேன்' என்று கையைப் பிடித்து இழுத்துச் செல்ல, 'நான் எவ்விதக் கஷ்டத்திற்குள் ஆயினும் உன்மேல் கொண்ட காதலை மறவேன் என்பதை, ரகுநாதனுக்கு விளங்கும்படி சைகை செய்துகொண்டே மறைந்தாள் சரஸா.

நாட்கள் பல ஓடி மறைந்தன. அரிஜனன் ரகுநாதனுக்கும் சரஸாவுக்கும் அன்பு அதிகரித்துக் கொண்டேயிருந்தது. இதை முற்றும் அறிந்த ஸரஸாவின் பெற்றோர்கள் அவளைக் கண்டித்துக் கேட்கா விட்டாலும் வெகு ஜாக்கிறதையாகப் பாதுகாத்து வந்தார்கள்.

நல் இரவு. இல்லத்தின் பின்புறம். தோட்டத்திற் கெதிர்த்தாப் போல் இரும்பழி பூட்டிய உக்ராணத்தில் சிறிய பிரகாசத்துடன் விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது.

ஸரஸா தன் தாயுடன் படுத்துக்கொண்டு ரகுநாதனிடம் சென்ற தன் உள்ளத்தைத் திரும்பப் பெறுவதற்கு வழியில்லாமல் ஓர்வித முடிவு கொண்டவளாய், தன் கையில் ஒரு கடிதத்தை வைத்து அதைப் பார்த்து அழுதவண்ணமாகயிருந்தாள்.

மேகங்கள் கலந்து இருள் சூழ்ந்திருந்தது. மின்வெட்டிப் பூச்சிகள் 'பளிச் பளிச்'சென்று பறந்துகொண் டிருந்தன. வழக்கப்படி ரகுநாதன் அவ்விடம் வந்ததைச் சரஸா தெரிந்து கொள்ளும் வண்ணம், அங்கு பறந்துகொண்டிருந்த மின்வெட்டிப் பூச்சிகளைக் குவியலாகப் பிடித்துத் தன்மேல் அங்கவஸ்திரத்தில் சிறு மூட்டையாக முடிந்து, அதை அசைத்துச் சைகை செய்யவே அவ்வொளியைக் கண்ட சரஸா, தன் காதலன் வந்திருப்பதை யறிந்தாள்.

தன் தாயார் நித்திரையில் இருப்பதாயும் சந்தடி செய்யாமல் அங்கேயே நிற்கும்படிச் சொன்னாள் ஸரஸா. தன்னிடம் இருக்கும் கடிதத்தை ரகுநாதனிடம் வீசி எறிந்தாள்.

ரகுநாதன் தன் இல்லம் அடைந்து கடிதத்தைப் படித்தான். அதில் பின்வருமாறு எழுதி யிருந்தது.

'என் அன்பார்ந்த காதலரே! மத வேற்றுமை என்னும் பேய் இப்பொழுது நம் விஷயத்தில்தான் தலையெடுத்தாடுகிறது. அத் தீண்டாமைப் பேயைத் தலை காட்டாமல் ஓட்டுவதற்கும், நம்போன்றவர்கள் வாழ்க்கை இனிதடைவதற்கும், நாம் உலகத்திற்கு ஒரு வழி காட்டியாக இருக்க விரும்புகிறேன். ஆகையால், நாம் எந்த இடத்தில் சந்தித்தோமோ அம்மண்டபத்திற்கு வருகிற பௌர்ணமி இரவு 1-மணிக்கு என்னை வந்து சந்திக்கவும். அப்பொழுது என் முழு அபிப்பிராயத்தையும் தெரிவிக்கிறேன்.'

இங்ஙனம் உமதன்புள்ள,
சரஸா.

இக் கடிதத்தை வாசித்ததும் பெரும் ஆலோசனையில் ஆழ்ந்தான்........

பூர்ண சந்திரன் தன் முழுக்கிரணங்களையும் வீசி நின்றான். மண்டபத்தின் கீழே அமர்ந்து, ஓடிய ஜலத்தை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தவண்ணம், ஸரஸா வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தான் ரகுநாதன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சரஸா அவ்விடம் வந்தாள். ரகுநாதன் அவளை அன்புடன் அழைத்துத் தன் அருகில் அமரச் செய்து, 'என் அன்பே உன் வரவை நான் எதிர்பார்த்துக்கொண்டே இருந்தேன். உன் கடிதத்தில் கண்டபடி உன் உள்ளத்தின் அபிப்பிராயத்தை அறிய, என் ஆவல் துரிதப்படுத்துகிறது. எங்கே சொல்' என்று சரஸாவைத் தன் மடியில் வைத்துக்கொண்டு, தன் கரத்தால் அவள் செவ்விய அதரத்தைப் பிடித்துக் கெஞ்சினான்.

சரஸாவின் கண்களில் இருந்தும் கண்ணீர் தாரை தாரையாய் வடிந்தது. (அழுகையல்ல. ஆனந்தக் கண்ணீர் வடித்தாள்.) மேலும் 'அன்பரே! இப்பொழுது நான் சொல்லப் போகும் ஒரு விஷயத்தால் தாங்கள் பெரிய திகிலடையப் போகிறீர் என்று நினைக்கிறேன்.'

ரகுநாத்:—என்ன? அப்பேர்ப்பட்ட விஷயம்.

சரஸா கண்ணில் மேலும் நீர் ததும்புகிறது. மெல்லிய குரலில் வார்த்தைகள் தடுமாற்றத்துடன் 'என்னுடைய முடிவு இன்றே இல்லை இன்னும் சற்று நேரத்திலேயே'.

ரகுநாத் பெரும் ஆச்சரியத்துடன் என்ன? என்ன? நீ சொல்வது ஒன்றும் விளங்கவில்லையே.

சரஸா:—காதலா! நாம் ஒருமைப்பட்டு வாழ்வதற்கு இடையூறாக மதமென்னும் பேய் நம்மை வாட்டிக் கொல்கிறது. அதிலும் என் குடும்பத்தாரிடம் குடி கொண்டிருக்கிறது. ஆதலால் பலவித நன்மைகளை யுத்தேசித்து நான் ஒரு முடிவுக்கு வந்துள்ளேன்.

என் குடும்பத்தினருக்குப் புத்தி கற்பிக்கவும், ஜாதி வேற்றுமையின்றி வாழ்க்கை இனிதடைவதற்கும், நான் தங்கள்மேல் கொண்ட காதல் மெய்க்காதல் என்பதை நிரூபிக்கவும், தீண்டாமை ஒழிவதற்கு உலகத்திற்கு வழிகாட்டியாகவும் இருக்க என் ஆவியைப் போக்கிக்கொள்ளத் தீர்மானித்து இங்கு வந்தேன். இதுதான் எனது அவா.

ரகுநாதன்:—கண்ணே! ஒன்று செய்யலாம். நாம் இருவரும் வெளியூருக்குப்போய் நம் வாழ்க்கை நடத்தினால் என்ன?

சரஸா:—அது அவ்வளவு சுதந்திர வாழ்க்கை யன்று. பிறகு ஒரு இகழ்ச்சிச் சொல்லுக்கு இடம் தருகிறது. சமூகமே இம் மதப் பேயை ஓட்டினால் தவிர, தாங்கள் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஆகையால் என்னைத் தடைசெய்ய வேண்டாம்.

ரகுநாதன்:—அப்படியாயின் உன்னைப் பிரிந்து நான் உயிர் தரியேன். நானும் உன்னுடன் இறப்பேன். இதுசத்தியம்.

உடன் திரும்பிப்பார்க்கச் சற்று தூரத்தில் ஏதோ ஒன்று கண்ணுக்குத் தோன்றியது.

ஆம். அது இரு பக்கத்திலும் கூர்மையுள்ளதும் மத்தியில் கைப்பிடி வைத்து அமைத்த கத்தியே.

இரு பக்கமும் கூர்மையுள்ள அக் கத்தியை ரகுநாதன் எடுத்துக் 'கண்ணே! இதோ மனம்போல் வாழ்வு. தக்க சமயத்தில் நமக்கு உதவ வந்தது. இக் கத்தி'.

ஸரஸா அக் கத்தியைத்தான் வாங்கி தன் நடுமார்பில் வைத்து, மற்றொரு கூர்மையான பக்கத்தை ரகுநாதன் மார்பில் சொருகி ஏகோபித்து இருவரும் இருகக் கட்டிக் கொண்டனர். கத்தி இருவர் மார்பிலும் நுழைந்து வெளிப்பட்டது. இரு ஆவியும் அகன்றது.

---

# இலங்கை

[தேவகோட்டை, ஸ்ரீ V. இராமநாதன்]

(சென்றமாதத் தொடர்ச்சி)

'நேபிள்ஸ் (Neples) நகரைப் பார்! அதன் பிறகே இறப்பாய்!' என்று சொல்வதுண்டு. ஒருவனுக்கு மோக்ஷம் கிட்டுவதாக இருந்தாலும், நேபிள்ஸ் நகரத்தைப் பார்க்காமல் செத்து விட்டால் ஒருபொழுதும் மோக்ஷம் கிட்டாதாம்! இது உலகத்தாரின் ஒருமித்த அபிப்பிராயம்! அஃது எவ்வளவு தூரம் உண்மை என்பதை அதனைப் பார்க்காத நான் ஊர்ஜிதப் படுத்த முடியாதன்றோ? ஆனால் 'கண்டியைக் காணுங்கள்,—கட்டாயம் கைலாயம் உண்டு!' என்று சொல்லத் தைரியம் பிறக்கிறது. அவ்வாறு நான் சொல்வதாக எண்ணிவிடாதீர்கள்! அந்த நகரத்தின் அழகு அவ்வாறு சொல்லச் செய்கிறது!

கொழும்பிலிருந்து 74 கட்டை களுக்கப்பால்,—அடடே! கட்டை புகுந்து விட்டதே! என்ன சார்! விறகுக் கட்டை அல்லது வேறு கட்டை என்று யோஜனை செய்கிறீர்கள்? இல்லை! 'தேசங்கள் தோறும் பாஷைகள் வேறு' என்று கூறுகிறார்களல்லவா? அதே போல, 'இத்தனை மைல்கள்' என்பதற்குப் பதிலாக 'இத்தனை கட்டைகள்' என்று சொல்வது அங்கு பழக்கம். அது எனக்கும் வழக்கமாகி விட்டது.

நாற்புறமும் மலைகளால் சூழப்பட்டு நடுவில் அமைந்துளது நம் கண்டி. அந்த நகரத்தின் கடைசி அரசர் சர் விக்கிரம ராஜ சிங்ஹா (Sir Wickrama Raja Singha) என்பவரால் உண்டாக்கப்பட்ட 45 ஏக்கர் பரப்புள்ள ஏரி ஒன்று கண்டியின் அழகைப் பொற்குடத்திற்குப் பொட்டிட்டாற்போல் மிளரச் செய்கின்றது.

இலங்கைத் தீவிலுள்ள புத்தர்களுக்குக் கண்டி ஒரு பிரதான பூஜை ஸ்தலமாக விளங்குகின்றது. ஒரு பௌத்த ஆலயத்தில் பல் ஒன்று பூஜிக்கப் பெறுகிறது. அதனைப் புத்த பகவானின் பல் என்று கொண்டாடுகின்றனர். ஆங்கு நடைபெறும் 'பெரஹர' என்ற விழா முற்றிலும் பார்க்கற் பாலதாகும்.

கண்டிக்கு வாருங்கள். உங்களுக்கு ஒரு பிரைஸ்! ஆனால் கிடைக்காது! அங்குள்ள பூந்தோட்டத்தைப் பாருங்கள்! பார்த்துக் களிகூறுங்கள்! பெரிய பூந்தோட்டம்! ஆம், ரொம்பப் பெரிது. நூற்றி நாற்பது ஏக்கர் பரப்பு! அங்கு இல்லாத செடி, கொடி, காய், கனி, கிழங்கு ஏதாவதொன்றை நீங்கள் கூறிவிட்டால் உங்களுக்கு ஒரு சன்மானம்! கூறினால்தானே கிடைக்கும்!

அது எல்லாம் நிறைந்த இன்பச் சோலை! இதனைப் பார்ப்பது,—இதனுள் நடப்பது,—இதுதான் இன்பம்! சீதோஷ்ணமோ துரை

களுக் கேற்றது! ஆயிரத்தி ஆறு நூறு அடிப் பிரதேச மென்றால் அப்படித்தானே இருக்கும்! அங்கு நாமும் தாராளமாக வசிக்க லாம். ஆகவே அடுத்த மாதம் வரை அங்கேயே இருங்கள். அப்பால் நுவரல்யாவிற்கு அழைத்துச் செல்கிறேன். 'ஆனால் அது குளிர்,—தாங்க முடியாத குளிர்ப் பிரதேசம்! ஆகவே அதற்கு வேண்டிய மாதிரியான உடுப்புக்களை ரெடி பண்ணி வைத்துக் கொள்ளுங்கள்.

இது இவ்வாறாக, இடையில் இன்னொரு விஷயம். ஆசிரியரவர் கள் தமிழரசின் பக்கங்களில், கூடக் கொஞ்சம் எடுத்துக் கொள்ளு மாறு கூறுகின்றார்கள். அதற்கு இணங்கு முகத்தான், நுவரல்யாப் பிரயாணத்திற்கு முன்பு,—இங்கு வேறு துறையில் புகுவோம்.

பொதுவாக இலங்கையின் பெரும் பகுதிகளிலும் சிறப்பாகக் கொழும்பிலும் நடைபெறும் திருவிழா ஒன்றைப் பார்த்தோம். அது பௌத்தத் திருநாள். வெசாக் விழா என்பது அதன் பெயர். ஆயிரக் கணக்கான,—இல்லை,—இலட்சக் கணக்கான மின்சார தீபங்களை அழகுறப் பிணைத்து, அவைகளின் நடுவில் புத்த பகவா னின் திரு உருவத்தை நிறுத்தி, பெரிய கட்டிடங்களின் முகப்புக் களிலும் முகடுகளிலும் பலவிதமாக அலங்கரித்து வைக்கின்றனர்.

இதனைப் பார்க்க ஜாதிமத பேதமின்றி பல மதத்தினரும் கூடுகின்றனர். சில இடங்களில் எள்ளும் விழமுடியாத கூட்ட மாகும். அங்கு ஆண் பெண் அனைவரும் ஒருங்கேதான் நிற்கும் நிலை ஏற்படுகிறது. அலங்கார வைபத்தில் ஈடுபட்டுச் சொக்கி நிற்கும் அவர்கள் இந்தக் கஷ்ட நிஷ்டூரங்களைப் பொருட் படுத்துவதில்லை!

அடுத்து, காரோடு கார் மட்டுமல்ல, கரத்தையும் (கரத்தை—வண்டி) முட்டும். இதுபோன்ற பல நிகழ்ச்சிகளை மறு நாள் பத்திரிகைகளில் காணலாம். அஹிம்சா மூர்த்தியின் பொருட்டுக் கொண்டாடப்பெறும் இவ்வைபத்தில் எதிர் பாராதவிதத்தில் ஏற்படும் உயிர்ச் சேதம் வருந்தற் பாலதாகும்.

இந்தத் திருவிழாவில் முக்கிய தமாஷ் அங்கம் குல்லாய்கள்! வெசாக் குல்லாய்கள்!! அந்த விநோத வேடிக்கையை விவரிக்க முடியாது! அடே, அப்பா! எத்தனைவிதக் குல்லாய்கள்! யார் யார் தலைகளின் மேல்!!

இந்த ஆண்டு கொழும்பிலும் கண்டியிலும் இதர இடங் களிலும் வெசாக் விழா கொண்டாடப் பெற்றதையும் அலங்காரங் களையும் படம் பிடிக்க மெல்போர்னிலிருந்து எம். பிரிபால் என்னும் மாது வந்துள்ளதாகவும் பல இடங்களில் நடந்த வெசாக் வைபவங்களை வர்ணப் படங்கள் பிடித்ததாகவும் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

இவ்வாறாகப் பலரின் கவர்ச்சிக் குரியதாகவுள்ள இந்தத் திருவிழாவிற்கு எல்லோரும் கட்டாயம் வருக! கண்டு களிப்புறுக!

(தொடரும்)

# கருணா — கனகா

[வேப்பேரி, கே. பி. துரைசாமி]

கந்தசாமி முதலியார் நல்ல மனிதர். நற்குணம், நற்செய்கைகளில் மேம்பட்டவர். அவர் மனைவியும் அவருக்கேற்றவளாகவே இருந்தாள். இவர்கள் துரதிருஷ்ட வசமாகக் கையிலிருந்த பணம் முழுவதும் செலவழிந்து விட்டது. பிழைக்கும் வழி வேறொன்றும் தோன்றாமையால், கந்தசாமி முதலியார் தன் மனைவியுடனும், ஐந்து வயதுள்ள அவர் பெண் கனகாவுடன் பெங்களூர் சென்றார்.

நற்காலத்திற் கறிகுறியாகவே, இவர் போனதுமே எண்பது ரூபாய் சம்பளத்தில் ஸ்பென்ஸர் கம்பெனியில் ஹெட் கிளார்க் வேலை கிடைத்தது. வருஷங்களும் ஒன்றிரண்டெனக் கழிந்து கொண்டிருந்தன. இவர் உத்தியோகத்திற் சேர்ந்த ஐந்தாண்டுகட்குள் அதிர்ஷ்டவசமாக மானேஜர் வேலை கிடைத்தது. அப்பொழுது அவர் சம்பளம் இருநூற்றைம்பது ரூபாய்.

அதே கம்பெனியில் கிளார்க் வேலையில் இருந்த ஷண்முக முதலியார் ஹெட் கிளார்க் வேலையை ஏற்றுக் கொண்டார். அவர் குமாரன் கருணாகரன் பள்ளியில் வாசித்துக் கொண்டிருந்தான். கந்தசாமி முதலியாருக்கும், ஷண்முக முதலியாருக்கும் நாட்கள் செல்லச் செல்ல, நட்பு வளரலாயிற்று. சின்னாட்களுக்குள் கந்தசாமி முதலியார் ஸிடியில் முப்பதாயிரம் ரூபாய் செலவழித்து இரு குடும்பங்களும் வசிக்க ஓர் பெரும் பங்களாவைக் கட்டினார். அதைச் சுற்றிக் கண்டோருள்ளம் கவரும் வண்ணம் புஷ்பச் செடிகளைப் பயிராக்கினார். இவ்விரு குடும்பத்தார்களும், அப்பங்களாவிலேயே, அளவளாவி, அன்புடன் வாழ்ந்து வந்தனர். இவர்கள் இருவர் உயிரும் ஒன்றெனக் கண்டோரெண்ணும்படி எப்பொழுதும் ஒருவரை ஒருவர்விட்டுப் பிரியாமல் வாழ்ந்து வந்தனர்.

கனகாவின் புத்தி நுட்பத்தால், கருணாகரனும், கனகமும், ஒரே வகுப்பில், ஒரே கலாசாலையில் பயின்று வந்தனர். எப்பொழுதும் இருவரும், மகிழ்வுடன் பேசிக் கொண்டிருப்பார்கள். கனகம், ஷண்முக முதலியாரை மாமா என்றே கூப்பிடுவாள். கருணாகரனுக்கும், கனகத்திற்கும் நாட்கள் செல்லச் செல்ல அன்பு அதிகரித்தது.

இவ்வாறு நாட்கள் பலவாயின. ஒரு நாள் கருணாகரன் பங்களாவின் பின்னிருந்த குளத்தருகில் சோர்வுடன், மனக் கலக்கமுற்று உட்கார்ந்திருந்தான். கனகம், கருணாகரனைக் காணமல் தோட்டம் முழுதும் தேடிவிட்டுக் கடைசியாகப் பங்களாவின்

பின்புறம் வந்தாள். கருணாகரன் கலக்கமுற்று உட்கார்ந்திருப்பதைக் கண்டவுடன் கனகத்தின் முகமும் கலக்க மடைந்தது.

'கருணாகரா ஏன் கவலையுடன் உட்கார்ந்திருக்கிறாய்?' என்று மங்கிய குரலில் கேட்டாள் கனகம். கருணாகரன் முகத்தை மாற்றிக் கொண்டு 'ஒன்றுமில்லை வா போகலாம்' என்றான்.

கனகம் திகைத்தாள்.

'கருணாகரா இன்றுவரை ஒரு நாளேனும், நின்முகம் வாடாமலிருக்க, இன்று வாடினதேன்?'

'கனகா நான் சொன்னால் நீயும் கவலைப் படுவாய் வா போகலாம். அதனால் இதை இத்துடன் விட்டு விடுவோம்.'

'என் மனம் வருந்தக்கூடிய விஷயம் யாதுளது? அப்படிச் சொன்னாலும், என் உள்ளம் வருந்தாது. தயவு செய்து சொல்லும்.'

கருணாகரன் சுற்று முற்றும் பார்த்தான்.

'கனகா என் மனம் உன்னையே நாடுகிறது. நாம் இப்பொழுது இவ்வண்ணம் இன்பமாய் இருந்துவிட்டுப் பின் உன்னைப் பிரிய என் மனம் இசையவில்லை. இதுவே காரணம்' என்று மெதுவாகக் கூறினான்.

கனகத்தின் முகத்தில் புன்னகை பூத்தது. அன்று மலர்ந்த, ரோஜா மலரென அவள் இனிய வதனம் திகழ்ந்தது.

'கருணாகரா என்னுயிர் என்னுடலை விட்டுப் பிரியினும், உன்னையன்றி யாருக்கும் வாழ்க்கைப் படேன்.'

'கண்ணே கனகா! நீ சொல்லுவது உண்மையா?

'இது சத்தியம் வாருங்கள் போகலாம்' என்று கூறினாள்.

இச் சொல்லமிர்தம் கருணாகரனை இன்பக் கடலில் ஆழ்த்தியது.

இச் சம்பவம் நடந்த சின்னாட்களுக்குள் கனகம் நன்மை தீமை ஈதெனப் பகுத்தறியும் மங்கைப் பருவமுற்றாள். மாதங்கள் ஒன்றிரண்டெனப் பெருகிக் கொண்டே வந்தன.

எக்காரணம் பற்றியோ, கந்தசாமி முதலியாருக்கும், ஷண்முக முதலியாருக்கும் விரோதம் ஏற்பட்டது. இருவருக்கும் பேச்சு வார்த்தை நின்றது. கனகம் ஓர் நாள் கருணாகரனுடன் பேசுவதைக் கண்ட கந்தசாமி முதலியார், அவனுடன் பேசக் கூடாது என்று கூறிவிட்டார். கனகம் செய்வதறியாது கலங்கினாள். ஷண்முக முதலியாருக்கும், கந்தசாமி முதலியாருக்கும் விரோதம் ஏற்பட்டு, இரண்டாண்டுகள் ஓடி ஒளிந்தன. கருணாகரனும் கலாசாலைப் படிப்பைவிட்டு, வீட்டிலேயே இருந்தான். ஷண்முக முதலியார்

தன் அருமை மகன் கருணுகரனுக்கு மணம் செய்ய எண்ணினர். கருணுகரனும், கனகமும் தனிமையாகவே காலம் கழிக்க நேரிட்டது.

திடீரென வந்த இளைப்பிருமல் நோயால் ஷண்முக முதலியார் இறந்து விட்டார். கருணுகரன் தன் தந்தையின் பிரிவைக் குறித்துக் கலங்கிக் கொண்டிருக்கும் போதெல்லாம், அவனுக்கு ஆதரவா யிருந்தாள் அவன் அன்னை. அவனை ஒருவாறு தேற்றுவாள். விதியின் பயனை யாரே தடுக்க வல்லார்? அந்தோ அவன் தாயும் தன் கணவர் பிரிவாற்ருமைக்கு, மனம் நொந்து, தேகம் மெலிந்து சின்னுட்களுக்குள் இப் பூவுலக வாழ்வை நீத்தாள். எனவே கருணு கரன் அனுதையானுன். அப்பொழுது அவனுக்கு வயது இருபத்து ஐந்து.

பௌர்ணமி இரவு. பால் போன்ற நிலவு வீசிக் கொண் டிருந்தது. கந்தசாமி முதலியார் பங்களா இந்திரன் மனைபோல் விளங்கிக் கொண்டிருந்தது. அவர், தன் மகள் கனகத்தைச் சந்திர சேகர முதலியார் மகன் தீனதயாளுவுக்கு மணம் செய்ய ஏற்பாடு செய்தார். அன்றுதான் கனகத்தின் கலியாணம். கனகத்திற்கு தீனதயாளுவை மணக்க எள்ளளவேனும் பிரியமில்லை. கருணுகரன் அனலிலிட்ட புழுவேபோல் துடித்தான். மணத்திற்கு வந்திருந்த விருந்தினர் கனகத்தைப்பற்றிப் புகழ்ந்து பலவிதமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

அன்றிரவு சுமார் மணி பத்தரை இருக்கலாம். காதலர் இருவரின் கலக்கத்தைக் கண்டு சகியாதவன்போல், நிலாவும், அடிக்கடி தோன்றி மறைந்து கொண்டிருந்தது. பங்களாவின் பின்னிருந்த பூங்காவில், கனகம் தனிமையாக வாடின பூவேபோல் மெதுவாக நடந்துகொண்டு, சுற்றிலும் பார்த்தாள். ஆ! அவள் கண்ட காட்சியை என்னென்பது. கருணுகரன், அங்கிருந்த சிறிய பளிங்கு மேடையில், தனிமைமாகக் கண்ணீர் வடித்துக்கொண்டு, உட்கார்ந்திருந்தான். கனகமும் மெதுவாக நடந்து வந்து கருணு கரன் இருக்குமிடத்தை அடைந்தாள். இருவர் விழிகளும் ஒன்றை ஒன்று நோக்கின. இருவர் விழிகளிலிருந்து பெருகின கண்ணீர் ஒன்று சேர்ந்து, பிரவாகமாயின.

‘நாம் என் செய்வது? எல்லாம் கடவுள் செயல். கண்ணே கனகா நீ மணம் செய்துகொண்டு சுகமாக வாழ்க’ என்று குழறிக் கொண்டே சொன்னுன். ‘ஆ! என்னருமைக் காதலா நாமிருவரும், சுவர்க்கத்திலாவது தொல்லையற்று எல்லை இல்லா இன்பத்தில் மூழ்கி யிருக்கலாம்’ என்ருள் கனகம்.

கனகா கனகா என் கண்ணே உன்னைவிட்டு அரைக் கணமும் வாழச் சகியேன் என்று சொல்லிக் கொண்டே அடியற்ற மரம்

போல் கீழே விழுந்தான் கருணகரன். அக்கணமே கனகமும் அவன்மேல் சாய்ந்தாள்.

விடியற்காலம், கனகத்தை மங்கள ஸ்நானம் செய்து வைப்பதற்குத் தேடினர்கள். வீட்டில் காணப்படவில்லை. எல்லோர்க்கும் திகைப்புண்டாயிற்று. பங்களாத் தோட்டத்தில் இருவர் மூர்ச்சித்துக் கிடப்பதை ஒருவர் கண்டறிந்து எல்லோருக்கும் தெரிவித்தார். எல்லோரும் சென்றனர். கருணகரனும், கனகமும் மூர்ச்சித்திருப்பதைக் கண்டார்கள். அவர்களைப் பங்களாவிற்குக் கொண்டுவந்து மூர்ச்சை தெளிவித்தார்கள். அவர்கள் மூர்ச்சை தெளிந்து நன்னிலை பெற மணி பத்தாயிற்று. கனகம், உறுதியாகக் கருணகரனையே மணப்பதாகக் கூறினள். அங்கு வந்திருந்த பெரியோர்களும் அவ்விருவர் காதலன்பை ஊன்றிக் கவனித்துக் கனகத்தைக் கருணகரனுக்கு மணம் செய்து வைப்பதே நலமாகும் என்றனர். அதன்படியே கருணகரனுக்கும், கனகத்திற்கும் மணம் நடந்தேறியது. பிற்கால வாழ்க்கையில் அவ்விருவர்களைப்போல் மிக்க அன்னியோன்னியமான தம்பதிகள் இனி உலகில் இருக்க மாட்டார்கள் என்று யாவரும் புகழ இருவரும் இனிது வாழ்ந்து வந்தனர்.

---

## நடு வெழுத்து அலங்கார விடை

நடு வெழுத்தைக் கூட்டத் 'தமிழரசு' என்று வரும்.

| | | | | |
|---|---|---|---|---|
| ம | த் | த | வ | ம் |
| க | ம் | மி | ய | ன் |
| ம | கி | ழ | ம் | பூ |
| க | தி | ர | வ | ன் |
| எ | ண் | சு | வ | டி |

—S. V. சிக்குராஜு




# 'சாட்சி சொன்ன புறா'

[மிஸ். G. கோமதி ! நாகூர்]

**பா**லூர் என்ற ஊரில் பாலன், வேலன், என்ற இரு நண்பர்கள் இருந்தனர். அவர்களுக்கு நெடுநாளாக யாதொரு தொழிலும் கிடைக்காமல் வயிறு வளர்ப்பதற்கே கஷ்டமாயிருந்தது. பின்பு இருவரும் பஞ்சமா பாதகங்களில் ஒன்றாகிய கொள்ளை என்பதைக் கடைப்பிடித்து ஜீவனம் செய்து வாழலாமெனத் தீர்மானித்தனர். பாலூருக்குப் பத்து மைல் தூரத்தில் மருதூர் என்ற ஊரில் வாரந்தோறும் பல வியாபாரங்கள் கூடிய சந்தை நடைபெறும். பாலனும் வேலனும் பாலூருக்கும் மருதூருக்கும் நடுவில் ஓர் காட்டில் வாழ்ந்து வந்தனர். இருவரும் அவ்வழியே செல்லும் வழிப்போக்கர்களை மடக்கி பொருள்களையும் அபகரித்து அவர்களையும் கொன்று விடுவார்கள்.

ஓர்நாள் ஒரு வயோதிகர் தன் மாட்டு வண்டியில் பல சாமான்களை ஏற்றிக்கொண்டு அவர்கள் இருக்கும் வழியாக வந்தார். வழக்கம்போல் இருவரும் வயோதிகரை அடித்து இம்சித்தனர். அவரைக் கொல்லப் போகும் சமயத்தில் வயோதிகர், 'ஐயோ! எனக்கு ஒருவரும் துணையில்லையா' என்று உரக்கக் கத்தினார். அச்சமயம் ஓர் புறாவைக் கண்டார். அப்புறாவைக்கண்டு 'ஏ புறாவே! நீயே எனக்குச் சாட்சி. நீயே கடவுள். இவ்விரு கொலைஞர்களுக்கும் நீயே உயிர்ச் சத்துரு' என்று சொல்லிவிட்டு உயிரை விட்டார். அக்கொலைஞர்கள் மிகப் பரிகாசமாக, 'ஆஹா! என்ன புத்திசாலி. இப்பகுத்தறிவில்லாப் புறாவிடம் ஏதோ பிதற்றினானே!' என்று சிரித்தவண்ணம் அவரைக் காலால் உதைத்துத் தள்ளிவிட்டுச் சென்றனர். இப்படியாகச் சில நாட்கள் கொள்ளை, கொலை செய்து வந்தனர். அவ்வழியே செல்ல வழிப் போக்கர்கள் பயந்தனர். இருவர்களுக்

கும் கொள்ளைத் தொழில் செய்ய வசதி ஏற்படவில்லை. பின்பு அத் தொழிலை விட்டுவிட்டுத் தேவபுரி என்ற நகருக்கு வந்து அவ்வூர் அரசனை வேலை கேட்டனர். அரசர் இருவரையும் தனது குதிரைச் சேவகராக நியமித்துக் கொண்டார்.

ஓர்நாள் அரசர், வேலன், பாலன் மற்றும் குதிரைச் சேவகர்கள் காட்டுக்கு வேட்டையாட வந்தனர். அநேகவிதப் பிராணிகளை வேட்டையாடினர். அரசர் எல்லாப் பிராணிகளையும் பார்த்துப் பூரித்தார். வேலனும் பாலனும் புறாவை எடுத்துக் கையில் வைத்துக் கொண்டு, ஒருவரை யொருவர் பார்த்து நகைத்த வண்ணமிருந்தனர். அரசருக்கு வந்தது கோபம். 'அடா என்ன என்னைக் கண்டு சிறிதும் மரியாதையின்றி நகைக்கிறீர்கள். யாது காரணம்?' என்று கேட்டார். பாலனும் வேலனும் ஒன்றுங் கூறாது விழித்தனர். 'அடே! உள்ளதை உரைக்கிறீர்களா? இல்லாவிடில் இவ்வுரையிலிருக்கும் வாளுக்கு இரையாகிறீர்களா?' என்று அரசர் கடுங் கோபத்துடன் கேட்டார். இருவரும் பலவிதமான பதிலைச் சொல்லினர். அரசர் நம்பவில்லை. 'இல்லை. ஏதோ விஷயமிருக்கிறது. சொல்கிறீர்களா! இதோ கொல்லட்டுமா?' என்று அரசர் கேட்டார். இருவரும் நடுங்கியவண்ணம் 'மகராஜ்! நாங்கள் இக்காட்டில் சிலகாலம் வழிப்போக்கர்களைக் கொன்றும், அவர்கள் பொருளையும் அபகரித்து வாழ்ந்து வந்தோம். ஓர் வயோதிகரைக் கொல்லும் சமயம் அவ்வயோதிகர் இப்புறாவைக் கண்டு 'புறாவே நீயே சாட்சி நீயே கடவுள். நீயே இக் கொலைஞர்களுக்கு உயிர்ச் சத்துரு' என்று பிதற்றினர். அதை நினைத்து வயோதிகரின் புத்திக் குறைவைக் கண்டு சிரித்தோம்' என்றனர். 'அடே கொலை கொள்ளைக்கு அஞ்சா மூர்க்கர்களே அவ்வயோதிகரின் வாக்குப்படி இப்புறாவே சாட்சி சொல்லிற்று! இப்புறாவே உங்கள் உயிருக்குச் சத்துரு' என்று சொல்லிவிட்டுக் கத்தியால் இருவரையும் கொன்றார். இருவரும் இறக்கும்போது 'தன்வினை தன்னைச் சுடும்' என்று சொல்லிய வண்ணம் உயிர் துறந்தனர்.

---

## மதிப்புரை

கூட்டுறவு :—சென்னை பச்சையப்பன் கல்லூரி, பொருளாதார உதவிப் பேராசிரியர், அ. முத்தையா எம். ஏ. அவர்களால் எழுதப்பட்ட 'கூட்டுறவு' என்னும் புத்தகம் கிடைக்கப் பெற்றோம். கூட்டுறவு இயக்க சம்பந்தமாக மக்கள் அறிய வேண்டிய இன்றியமையாத விஷயங்கள் யாவும் தெளிவாக விளக்கி எழுதியுள்ளார். இதில் ஒவ்வொருவரும் அவசியம் வாசித்தறிய வேண்டிய பல அரிய விஷயங்கள் அடங்கி யிருக்கின்றன. விலை ரூ. 2—0—0.

கிடைக்குமிடம்: புத்தறிவுப் பதிப்பகம் 7, சிங்கார முதலி தெரு, தியாகராயநகர் சென்னை.

# ‘இந்திராபாய்’

[வி. ராஜரத்தினம்]

(உரிமை ஆசிரியருடையது)

## அங்கம் 1.

காலம்: இரவு.

இடம்: டெல்லியில் ஒரு வீதி, குருக்களின் வீடு.

நடர்: சங்கரக்குருக்கள்.

கமலாதேவி (அவர் மனைவி.)

மோகனன் (செல்வச் செருக்காலும், துஷ்ட சகவாசத்தாலும், சூதாடல், மதுவுண்ணல் இத்தகைய பேய் வாய்ப்பட்டு காமாந்தகாரம் கண்களிற் கவ்வ, கண்ணிற் படுங் கன்னிகைகளைக் கணிகைகளென மதித்து, மதியிழந்து பின்பற்றித் தொந்தரை யிழைத்து, ஆபத்துக்குள்ளாய் அல்லற்படுத்தித் திரியும் ஓர் வாலிபன்.)

மதனன் (மோகனன் சஹாக்களிலொருவன்.)

[தருமம் தலைசாய வொட்டாது தலை நிமிர்ந்து, எல்லா மதத்தினரையும் சமமாகப் பாவித்து, பாரபட்சமின்றிச் செங்கோல் செலுத்திவரும் மாசிலா மனத்தோனாகிய மன்னன் ‘அக்பருக்கு’த் தன்னுடன் பிறந்தான் ‘ஹகீம்மிர்ஸா’. தனக்கு விரோதியாய் நின்று விளைவித்து வரும், கலகத்தால் சிறிது காலம் தன் மனம் நிம்மதியற்றிருக்க, நாடெங்கும், கலவரமும் குழப்பமுமா யிருக்க நேர்ந்தது. ஜனங்கள் ஓட்டமும் நடையுமாக அவரவரில்லஞ் சேருகிறார்கள். தெருக்கள்தோறும், குதிரை வீரர்கள், உருவிய கத்தியுடன் அங்குமிங்குமாகக் குதிரைகளை வேகமாகத் தூண்டிப் ‘பாரா’க் கொடுத்தபடி யிருக்கிறார்கள். அச்சமயம் வீட்டின் கூடத்தில் புறங்கை கட்டி உலாத்தியபடி, யார் வரவையோ எதிர்பார்த்திருந்த,]

கமலா:—அடடா! என்ன இவ்வளவு நாழியாயும் இன்னும் வரக்காணோம்.

[என்று அங்கிருந்த கட்டிலின்மீது உட்கார, மதுவின் மகிமையால் தள்ளாடியபடி வந்த மோகனன்; மதனனை வெளியில் நிறுத்திக் கதவைத் தட்டினான். சப்தத்தைக் கேட்டுச் சடக்கென்றெழுந்த கமலா பரபரப்புடன் வந்து கதவைத் திறந்து மோகனனை உள்ளே விட்டுக் கதவைத் தாளிட்டாள். இருவரும் கூடத்துள் நுழைந்ததும்,]

மோகனன்:—(மெதுவாக) குருக்கள் எங்கே?

கமலா:—அந்தப் பிணம் போச்சு சுடுகாட்டுக்கு. அதெல்லாம் உமக்கென்னத்துக்கோ? சமயம் பார்த்துச் சொல்லி யனுப்பினாலும் வருவதற்கு இவ்வளவு நாழியோ?

மோகனன்:—இல்லை கமலம். கோபிக்காதே! இப்படி உட்கார்.

[என்று அவள் கையைப் பிடித்திழுக்க முடுக்குடன் அவனருகில் உட்கார்ந்த,]

கமலம்:—போதும், போதும். இதிலே ஒண்ணுங் கொறச்சலில்லை.

[தன் மேலிருந்த பட்டாடையை எடுத்துக் கட்டிலின்மீது ஒரு புறமாக வைத்து; அவள் கன்னத்தைத் தடவிய,]

மோகனன்:—ஏது? கமலா! என்மேல் என்றுமில்லாமல் இவ்வளவு கோபம்?

கமலா:—ஊம்! கோபமா? ஒண்ணுந் தெரியாதவர்போல் பாசாங்கு செய்கிறீரே? நாளைக் காலை 'பவானிதேவி' உற்சவமல்லவா?

மோகனன்:—அது தெரிந்த விஷயந்தானே; அதற்கென்ன?

கமலா:—ஓஹோ! தெரிந்த விஷயந்தான். அதற்கென்னவா? பேஷ்! ரொம்ப நன்னா யிருக்கு. சரிதான் இதுவும் என் விதிப் பயன். யாரைத் தூஷிப்பது என்னைப்போலொத்தவர்களெல்லாம் நாளைக்கு எவ்வளவு சிங்காரம். ஆனந்தம். நகை நட்டுகள் புது ஆடைகளுடன் புறப்படுவார்கள். அட தெய்வமே! என் கதி இப்படியா ஆகவேண்டும். கட்டிக்கொண்ட புருஷனோ அந்தக் கதி. எவ்வளவோ பணக்காரனென்று உங்களை சிநேகஞ் செய்தும் இந்தக் கதி.

[என்று முகத்தைத் தொங்கவிட்டு முந்தாணியால் துடைத்தபடி அழுதாள்.]

மோகனன்:—அட, அசடே! இதற்கா அழுகை?

[சட்டைப்பைக்குள் கைவிட்டு ஒரு முடிப்பை எடுத்து நீட்டினான்.]

கமலம்:—(முகத்தில் மயக்கச் சிரிப்புத் ததும்ப) அதை வாங்கிப் பிரிக்க, விலையுயர்ந்த ஆபரணங்களும், பொன் காசுகளும் இருந்தன.

இப்போத்தான் உங்கள் அன்பு தெரிந்தது. குட்டுப் பட்டாலும் நான் மோதிரக் கையால் தான் குட்டுப் பட்டேன். இந்த ஊரில் என்னைவிட அதிர்ஷ்டசாலிகள் யாருமில்லை.

[அப்பொழுது பட, பட வென்று பலமாகக் கதவைத் தட்டுஞ் சப்தங் கேட்டு, ஐயோ! வென்று திடுக்கிட்டு, மதுவெறி மாய மாய்ப் பறக்க, கை கால்கள் பதற எழுந்து நின்ற மோகனன் நெஞ்சம் திக், திக்கென்றடித்துக் கொண்டது.]

கமலம்:—ஐயோ! என்ன செய்வது? சிவபூஜையில் கரடி புகுந்த மாதிரி வந்துவிட்டதே அந்தப் பிணம். அட தெய்வமே! நானென்ன செய்வேன்?

மோகனன்:—(நடுநடுங்கி வாய் குளற) ஐயோ! கமலா? நானெப்படித் தப்பிப் போவது? நீதான் இந்தச் சமயம் என்னைக் காப்பாற்ற வேண்டும்.

[என்று அவள் கால்களைக் கெட்டியாய்ப் பிடிக்க, மறுபடியும் கதவைப் படபடவென்று பலமாய்த் தட்டியபடி]

குருக்கள்:—ஏண்டி! என்னடி பண்றே? கதவைத் தொ வேண்டி. என்னேரம்.

கமலா:—(மோகனனைப் பார்த்து) உஸ்! சப்தம் போடாதே; இந்தக் கட்டிலினடியில் புகுந்து கொள். மூச்சுக் கூட விடக் கூடாது. தெரியுமா?

மோகனன்:—அப்படியே!

[என்று, கட்டிலினடியில் புகுந்துகொண்டான். கதவைத் திறந்த கமலம், குருக்கள் உள் நுழையக் கதவைத் தாளிட்டாள்.]

குருக்கள்:—ஏண்டீ! நான் வந்து என்னேரமா?........ஊம்!

கமலம்:—போதும், போதும், நிறுத்தும். அதிருக்கட்டும் ஓய்! பிராம்மணு? நாளை உற்சவத்திற்காகக் கோவிலில் வேண்டியவைகளைத் தயார் செய்ய வேண்டுமென்று போனீரே! எதற்காகத் திரும்பி வந்தீர்? சரிதான் நான் நினைத்தபடி ஆச்சு. ஏகாம்பரக் குருக்களோடு தாசி வீட்டிற்குப் போய்த் திரும்புகிறீராக்கும்!

குருக்கள்:—என்னடீ? என்ன?

[என்று கட்டிலின்மீது உட்கார, பளுவால் கட்டில் தாழ அடியில் மோகனன் அகப்பட்டுத் தவிக்கிறுன்]

கமலா:—அட, அசடே? உமக்கெதற்குங் காணும் தாசி........ இந்த மூஞ்சிக்குத் தஞ்சாவூர் மஞ்சளா?

[என்று முகத்திலிடித்து, உச்சிக் குடுமியைப் பிடித்தாட்டி, வீட்டிலெல்லாம் சுப்ர தீபம், மாத்திக் கட்ட ஒரு புடவைக்குமேல் கதியில்லே, காலணு நகைக்கு விதியில்லே, தாசி வீடு, ஒரு கேடா?]

குருக்கள்:—ஐயையோ! இதென்னடி கமலம். நான் தாசி வீடுபோய் என்ன செய்வது? உடம்பு குணமில்லாததால் எனக்குப் பதிலாக, ஏகாம்பரக் குருக்களே அனுப்பிவிட்டுத் திரும்பினேன்.

[என்று தற்செயலாய் கட்டிலின்மீது கிடந்த மோகனினன்பட்டின்மீது கைவைத்தார். திரும்பிப் பார்த்து அதைக் கையிலெடுத்து எழுந்து நின்று கோபமாகத் தன் மனேவியை நோக்கி]

குருக்கள்:—ஏண்டி; இது யாருடையது? இங்கு யார் வந்தார்கள்?

கமலா:—ஊம்! சரிதான். இப்படிப்பட்ட புருஷாளிருந்தால் எல்லோருந்தான் வருவார்கள். அட பிணமே! உமக்குப் புத்தி யிருந்தால் இப்படிக் கேழ்ப்பீரா? நாளே உற்சவத்திற்கு இப்படித்தான் போவீராக்கும். காலே அம்பி வந்தான், உமக்காக ஒரு பட்டுக் கேட்டேன். கொண்டுவந்து கொடுத்தான்.

குருக்கள்:—ஓ! ஹோ, அப்படியா? பேஷ்! பட்டு நன்ருயிருக்கே? என்று அதைத் திருப்பித் திருப்பிப் பார்க்க வாரம்பித்தார்.

[அச்சமயம், வெளியில் நின்றிருந்த மதனன் மோகனனே ஆபத்தினின்று வெளி

## உதிர்ந்த மலர்

[ புதுவை - நடனம் ]

மாலைப் பொழுதில் சோலையில் இருந்தேன்
முல்லை மலர்த்தாய் மணமெனும் மகளொடு
நல்லுரை பேசி நனிமகிழ்ந் திருக்கையில்
தென்றற் காதலன் திடீரென வந்து
மணமெனு மகளை வாவென் றழைத்து
மனஞ்செயக் கருதித் தூக்கிச் சென்றான்.
கன்றைப் பிரிந்த பசுப்போல் அந்த
மலர்த்தாய் வாடினள் வதங்கினள்
உலர்ந்தாள் பின்னர் உதிர்ந்தாள் நிலத்திலே!

## வாழ்க தமிழ் மொழி!

[கோட்டார் கே. சி. தாணு]

வாழ்க பைந்தமிழ்! வாழ்க தமிழ்நலம்
வீழ்க ஏனைய வீணர்தம் சூட்சிகள்
ஏழ்க திர்ஒளி என்னத் தமிழ்மணம்
சூழ்க! எங்கும் சுதந்திரம் சூழ்கவே!

---

யேற்ற எண்ணங்கொண்டு, கதவைப் படபட வென்று தட்ட ஓடோடியும் வந்து கதவைத் திறந்தார்.]

குருக்கள்:—யாரப்பா! நீ எங்கே வந்தாய்?

மதனன்:—சாமி! நானே பவானிதேவிக்கு அர்ச்சனை முதலியவை செய்ய, எஜமான் உங்களைக் கையோடு கூட்டி வரச்சொன்னார்.

குருக்கள்:—ஓ!—ஹோ, அப்படியா? இதோ வந்து விட்டேன். அடியே! கமலம் கொஞ்சம் வெளியே போய் வருகிறேன் ஜாக்கிரதையா யிரு.

[என்று மதனனுடன் கிளம்ப, மரண வஸ்தையில் தத்தளித்துக் கொண்டிருந்த மோகனன் வெளிவந்து இடுப்பைப் பிடித்த படி, அப்பாடா. போதும் போதுமென்று திரும்பிப் பாராமல் ஓட்டம் பிடித்தான்.

(தொடரும்)

# வனிதா அல்லது கொலையுண்ட காரிகை

[A. வாசிமலை]

(All rights reserved with the author)

[முன்னல் நடந்தவை:—ராமகிருஷ்ணனும் வனிதாவும் காதலர்கள். உறவினரே. பக்கத்தூரில் ஒரு நண்பர் வீட்டு விருந்திற்குப் போகத் தீர்மானித்தனர். ராமகிருஷ்ணனின் நண்பர்களான ரங்கனும் கோவிந்தனும் இது விஷயம் அறிந்து சூட்சியால் வனிதாவைக் காரில் அழைத்துச் செல்கின்றனர். விருந்திற்குச் செல்ல வனிதாவைத் தேடுகிருன். டிரைவர் மூலம் கார் திருடப்பட்டதாக அறிகிருன். வனிதாவின் பெற்றோர்கள் பெண்ணைப் பற்றி ராமகிருஷ்ணனிடம் விசாரிக்கின்றனர். போலீசுக்குத் தகவல் அறிவிக்கப்பட்டது. 'வனிதா கொலை செய்யப் பட்டாள்' என்று தினசரிகளில் வெளியாகிறது. போலீசார் பல சாதனங்களின் மூலம் ராமகிருஷ்ணனே கொலையாளி என்று தீர்மானித்துத் தண்டிக்கின்றனர். துப்பறியும் துளசிதாஸ் மூலம் தந்திரமாகத் தப்புவிக்கப்படுகிருன். துளசிதாஸ் அவன் தன் அனுமதியின்றி எதுவும் செய்யாதபடி உறுதி பெற்ருர். நடந்தவற்றை விளக்கிக் கூறினர். கீழப்பட்டியில் கோவிந்தனும் ரெங்கனும் மார்வாடிபோல் நடித்து வருகின்றனர். துளசிதாஸ் உதவியால் ராமகிருஷ்ணன் ஓர் கிழவன்போல் மாறுவேட மிடப்பட்டு இருந்து வருகிருன். மார்வாடிகள் இவனையும் இவன் இருப்பிடத்தையும் நன்கு தெரிந்து கொள்கின்றனர்.]

மறுநாள் மாலை மணி ஏழு இருக்கலாம். காடு சென்ற ஆடு மாடுகள், வயிறு நிரம்பப் புல் மேய்ந்து தண்ணீர் பருகியதால், மெதுவாக ஆடி அசைந்து நடந்து வீடு நோக்கி வந்து கொண்டிருந்தன. பகலெல்லாம் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்ட மாந்தர், தங்கள் வேலை தீர்ந்து விட்டதால் நீராடிவிட்டு, தெருவில் நடக்கும் எதையும் கவனிக்காமல் பசியோடு நேராகத் தங்கள் வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர். இதன் மத்தியில் ராமகிருஷ்ணக் கிழவனர், கிராமங்களின் மாலைத் தோற்றத்தைத் தனக்குள்ளாகவே புகழ்ந்து கொண்டு, மெதுவாகத் தள்ளாடிக் கொண்டே வழக்கம்போல் செல்லும் தெரு வழியாகக் கழியூன்றி நடந்து சென்ருர். அப்பொழுது சேட்டுகள் இருவரும் தங்கள் வீட்டின் வாயிலில் நின்று, ஏதோ ஒரு விஷயத்தைப்பற்றி வாதாடிக் கொண்டிருந்தனர். ராமகிருஷ்ணன் அருகில் வந்தவுடன், இருவரும் அவரைப் பார்த்து 'ஐயா, பெரியவரே! இங்கு கொஞ்சம் தயவு செய்து வந்து விட்டுப் போகவேண்டும். ஒரு நிமிஷம்' என்று சொல்லி ராமகிருஷ்ணனை அழைத்தனர். கிழவர் என்ன காரண

மாகத்தான் தன்னை அழைக்கிறார்கள் என்று பார்க்கலாமென் றெண்ணி, அவர்களண்டையில் சென்றான். அந்தச் சேட்டுகள் இருவரும் அவரைத் தக்க மரியாதையுடன் வரவேற்று, 'கொஞ்சம் எங்கள் வழக்கத்தைத் தீர்த்துவிட்டுப் போய் விடுங்கள் தாத்தா. தாத்தா! இந்த சேட், நாளைக்குப்போய் வியாபாரம் செய்துகொண்டு வந்து விட்டால், இவர் நாளைக்கு வெளியில் எங்கும் போக மாட் டேன் என்கிறார்; இது ஞாயமா?' என்றான் முதல் சேட்.

இரண்டாவது சேட்:—தாத்தா! நான் சொல்வதைக் கொஞ்சம் கேட்கணும். நான் முதலில் இவரோடு ஒப்பந்தம் செய்து கொள்ளும் பொழுதே, வியாபாரத்தில் அதிகமாகப் பணம் நானே போட்டிருப்பதால், என் இஷ்டம் போல்தான் வியாபாரம் செய்யப் போவேனென்று சொல்லி யிருக்கிறேன். அப்படி யிருக்க நான் நாளைக்குச் சென்று வியாபாரம் செய்து வரவேண்டும் என்று எந்தச் சட்டத்தில் சொல்லப்பட் டிருக்கிறது?

முதல் சேட்:—அப்படியானால் நாளைக் கடைக்குச் சென்று ஜவுளியாவது எடுத்துக் கொண்டுவர வேண்டுமல்லவா? அதற்கும் ஒப்பந்தம் செய்யும்போது, அப்படிப் பேசவில்லை என்று சொல்லு வாரோ? நீங்கள்தான் சொல்லுங்கள் தாத்தா; பேசாமல் நிற்கிறீர்களே.

ராமகிருஷ்ணன் இதுவரைக்கும் அவர்கள் சேட்டுகளா யிருந்தும், நன்கு தமிழ் பேசுவதைக் கண்டு வியப்புற்று நின்றிருந்த வனாதலால், அவர்கள் சொன்னதைச் சரிவரக் கவனிக்கவில்லை. எனவே அவன், 'நீங்கள் சொல்வது எனக்கு ஒன்றும் புரிய வில்லையே. யாராகிலும் ஒருவர் பொறுமையாய்ச் சங்கதியைச் சொன்னால் கேட்கலாம். நீங்கள் இப்படித் தாறுமாறாக உளறினால் எப்படி நியாயந் தீர்ப்பது?' என்றான்.

சேட்டுகள்:—'அப்படிச் சொல்லுங்கள். இங்கே கொஞ்சம் வாங்க தாத்தா. இப்படி வந்து முதலில் அமருங்கள்' என்று சொல்லிக் கொண்டே, ராமகிருஷ்ணனுடைய கையைப் பிடித்து அவனை இழுத்துச் சென்று வீட்டிற்குள் ஓரிடத்தில் உட்கார வைத்து விட்டனர். ராமகிருஷ்ணன் அவர்களுடைய வழக்கைத் தெரிவிக்கும்படி கூறினான். அவனுக்கு மனதில் இச் சேட்டுகளின் தோற்றங்களைப் பார்க்கச் சிறிது பயமாகவே யிருந்தது. என்ன செய்வது? சேட்டு கையைப் பிடிக்கும் பொழுதே, திமிறிக் கையை அவனிடமிருந்து விடுவிக்க முயன்றால் நடிப்புக்குப் பங்கம் நேரிடுமே!

இப்பொழுதும் சேட்டுகள் பொறுமையுடன் விஷயத்தைச் சொன்னார்களில்லை. 'நான் முந்தி நீ முந்தி' யென்று ஒருவருச்

கொருவர் போட்டியிட்டுச் சத்தமிட்டனர். கடைசியாக வாய்ச் சண்டையை நிறுத்திக் கைச்சண்டையையும் ஆரம்பித்து விட்டனர். பாவம்! ராமகிருஷ்ணனுக்கு இப்பொழுது என்ன செய்வதென்று தோன்றவில்லை. ஆயினும் தன் நடிப்புக்குப் பங்கம் வராமல் காத்துக் கொள்ளத் தீர்மானித்து, தான் கிழவனுயிருப்பதால் வேறு யாரை யாகிலும் அழைத்து வந்தாவது சண்டையை நிறுத்தச் சொல்லலாம் என்றெண்ணி வெளியில் புறப்பட அடி யெடுத்து வைக்கவும், சேட்டுகள் இருவரும் சடுதியில் அவன்மேல் பாய்ந்து கீழே விழச் செய்து, வாயிலும் துணியை வைத்துச் செலுத்திக் கைகளையும் பின்னல் சேர்த்துக் கட்டிவிட்டனர். ராமகிருஷ்ணனுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. இவ்வெதிர்பாரா விபத்திலிருந்து தப்ப ஒரு மார்க்கமும் அவன் மனதில் படவில்லை. இதற்குள் அவனை அவ்விருவரும் தூக்கிச் சென்று, 'எங்களைக் கொல்வது நீதானு?' என்று சொல்லிக்கொண்டே ஒரு அறையில் போட்டு மூடி விட்டனர்.

மணியும் பதினென்றானது. சேட்டுகளிருவரும் எல்லாக் கதவு களையும் மூடிவிட்டு, ஒரு பாஷாணம் நிறைந்த சீசாவைக் கையி லெடுத்துக்கொண்டு, ராமகிருஷ்ணனிருந்த அறைக்குள் நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டனர். அங்கு அவர்களைச் சற்றும் கவனியாதவன் போலிருக்கும் ராமகிருஷ்ணனைப் பார்த்து அவர்கள் 'ராமகிருஷ்ணு! இன்று உன்னை உன் காதலியிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கப் போகிறோம். சந்தோஷந்தானே!' என்றனர்.

ராமகிருஷ்ணன்:—சதிகாரத் துரோகிகளே! நான் உங்கள் கையில் சிக்கிக் கொண்டதால் நீங்கள் எதையும் பேசலாம். இப்பொழுது நான் இறக்கப் போவதைப்பற்றிச் சிறிதும் வருந்த வில்லை. சந்தோஷமே அடைகிறேன். ஆனல் மித்திரத் துரோகி களாகிய உங்களை, என் காதலியைக் கொன்றதற்காகப் பழிக்குப் பழி வாங்காமல் போகின்றேனே என்றுதான் என் மனம் வருந்து கிறது. சேட்டுகளிலொருவன் 'போதும். உன் பிரசங்கத்தை நிறுத்து. நாங்கள்தான் உன் காதலியைக் கொன்றவர்களென்று உனக்கு மட்டும் நிச்சயமாய்த் தெரிந்திருக்கும். இனி உன்னை உயிருடன் வைத்தால், அதுவும் எங்கள் பக்கத்திலேயே யிருந்து வாழ விட் டால், நீ தக்க மனிதரை வைத்துத் தக்கது செய்து விடுவாய். ஆனது பற்றியே இப்பொழுது உன்னைக் கொல்ல வேண்டிய அவசியம் எங்களுக் கேற்பட்டது. கடைசியாகச் சொல்கிறோம். நீ உனக் கிஷ்டப்பட்ட தெய்வத்தை மனதில் தியானித்துக் கொண்டு, இக் கிண்ணத்திலிருக்கும் பாஷாணத்தை அருந்திவிடு' என்று சொல்லிக் கிண்ணத்தை அவனுக்கெதிரே நீட்டினன். என்ன செய்வான்

பாவம்! மடியிலிருந்த துப்பாக்கியையும் முன்பே பறித்துக் கொண்டனர் அக் கொலை பாதகர்கள். எதிரிகளில் ஒருவன் கையில் பாஷாணக் கிண்ணமும் மற்றவன் கையில் கூர்மையான கத்தியுமிருந்து ஒளிவீசி நின்றது. எனவே, ராமகிருஷ்ணன் கிண்ணத்தைக் கையில் வாங்கி தன்னுடைய இஷ்ட தேவதையான வனிதாவை மனதில் நினைத்து 'வனிதா! இதோ உன்னை வந்து காணப்போகும் நேரம் வந்துவிட்டது. ஆம்; என் பிரிய காதலி! உன்னைக் கொன்ற அச்சண்டாளர்களே என்னையும் கொண்டுவந்து உன்னிடம் சேர்ப்பிக்கப் போகின்றனர்' என்று சொல்லிக் கிண்ணத்தை வாயில் வைத்துப் பாஷாணத்தை உட்கொள்ளப் போனான். அதே சமயத்தில் பக்கத்து மதிலிலிருந்து ஒரு செங்கல் விழுந்தது. திடீரென்று ஒரு துப்பாக்கி வெடித்த சப்தம்! மறுவினாடியில் ராமகிருஷ்ணன் கையிலிருந்த கிண்ணம் எதிர்ச் சுவற்றில்போய் மோதிக் கீழே விழுந்தது. சேட்டு வேஷத்திலிருக்கும் ரெங்கநாதனும் கோவிந்தனும் திடுக்கிட்டுச் சத்தம் வந்த திசையை நோக்கினர். துப்பறியும் துளஸிதாஸ் கையில் ரிவால்வாருடன் 'அசைந்தால் தாக்ஷயண்யமின்றிச் சுட்டு வீழ்த்துவேன். ராமகிருஷ்ணா! அவ் வஸ்திரத்தை எடுத்து அவர்கள் இருவருடைய கால்களையும் கைகளையும் பின்கட்டாகக் கட்டு' என்றார்.

உடனே ராமகிருஷ்ணன் சிறிதும் தயங்காமல் அவர்களை அப்படியே கட்டிவிட்டு, 'நண்பரே! இவர்களை இங்கேயே கொன்றுவிட்டுப் போய்விட்டாலென்ன?' என்றான்.

து-தாஸ்:—'வேண்டாம், ராமகிருஷ்ணா! அப்படிச் செய்தால் நாம் சர்க்காருக்குத் துரோகம் செய்தவர்களாவோம். நான் நினைத்தது சரியாய் முடிந்து விட்டது. நாம் எதிரிகளைப் பிடித்துக் கூண்டிலடைத்து விட்டோம். இனி நாம் சென்று போலீஸாரைக் கூட்டிவந்து, அவர்களைக் கொண்டே இவர்களைக் கைது செய்யலாம்' என்று சொல்ல, இருவரும் புறப்பட்டனர்.

துளஸிதாஸ் தனது சைகிள் மோட்டாரை வீட்டின் பின்புறத்தில் செடிகள் நிறைந்த புதரொன்றுக் கருகில் நிறுத்தியிருந்தார். எனவே அவர் வீட்டின் பின்புறமாக ராமகிருஷ்ணனை அழைத்துச் சென்று, அவனை முதலில் சுவரேறிக் குதிக்கச் சொல்லி பின்பு தாமும் ஏறிக் குதிக்க, சுவற்றில் ஏறினர். அவர் அதிலிருந்து குதிக்கப் போகும் சமயம், வீட்டின் பின்பக்கத் தாழ்வாரத்திலிருந்து ஒரு பெண்மணி சுட, அக்குண்டானது துளஸிதாஸின் விலாப் புறத்தில் பாய்ந்து ஊடுருவிச் சென்றது. துளஸிதாஸ் மறுகணத்தில் 'ஆ!' என்றலறிக் கொண்டே பொத்தென்று வெளிப் பக்கத்தில் விழுந்தார். அந்தோ பரிதாபம்! காலனே அம் மாயப் பெண்ணுருவாக வந்தான் போலும்!

இதைக் கண்ட ராமகிருஷ்ணன், உடனே அவரைத் தூக்கிக் கொண்டு சென்று அவருடைய மூன்று சக்கர மோட்டார் சைகிளில் வைக்கவே, அவர் 'கிருஷ்ணு! இவ்வூரில் சேட்டுகளின் வார்த்தைக்கு அதிக மதிப்புண்டு. ஆனதால் வெடிச் சத்தத்தைக் கேட்ட ஜனங்கள் வந்து கூடுவதற்குள் நாம் தப்பிச் சென்றுவிட வேண்டும். உம்; விரைவில் காரைச் செலுத்து' என்ருர். அதற்குள் ஜனங்களும் நடந்த விஷயம் என்னவென்று பார்க்க வீட்டைவிட்டு வெளியில் ஓடிவந்தனர். ஆனல் ராமகிருஷ்ணன் சைகிள் மோட்டாரை, துளஸிதாஸ் சொன்ன பிரகாரம் அவர் தனிமையாக வசித்து வந்ததும், ஜன சஞ்சாரமில்லாத இடத்திலிருந்ததுமான ஒரு பாழடைந்த வீட்டை நோக்கி வெகு விரைவாகச் செலுத்திச் சென்று விட்டான்.

துளஸிதாஸ் ஏன் பாழடைந்த மண்டபங்களிலும், ஜன சஞ்சாரமில்லாத இடத்திலும் அதிகமாகத் தன் ஜாகையை வைத்துக் கொள்கிருர் என்று நேயர்கள் கேட்கலாம். அவருடைய அபிப்பிராயம் என்னவெனில், துப்பறிவோன் ஜாகை பிறருக்குத் தெரிந்தால் ஆபத்து உண்டாகும் என்பதே. ஒரு துப்பறிபவனுக்கு இவ்வுலகில் அநேக எதிரிகளிருப்பதால், அவனுக்கு ரகசியமான ஒரு ஜாகையு மிருக்க வேண்டும் என்பது அவருடைய அபிப்பிராயம். மேலும் அவர் தன் ரகசிய விடுதிக்குச் செல்லுங் காலத்து, தன்னை யாராவது பின்ருெடர்ந்து வருகிருர்களா என்று தீர ஆராய்ந்து பார்த்துவிட்டே போவது வழக்கம்.

## அத்தியாயம் 9.

கட்டுண்டு கிடந்த சேட்டுகளின் கட்டுகளை துளஸிதாஸைச் சுட்டு வீழ்த்தின அதே பெண்மணி வந்து அவிழ்த்து விட்டாள். உடனே கோவிந்தன், 'கண்ணே! ரமணி! துப்பாக்கி வெடித்த சப்தம் கேட்டதே, காரண மென்ன? ஒரு வேளை அச்சண்டாளத் திருடர்கள் உன்னையும் சுட்டுக் கொல்ல முயற்சித்தார்களோ என்று தான் நான் மிகவும் பயந்தேன்' என்ருன்.

ரமணி:—நாதா! அவர்களை நானே துப்பாக்கி கொண்டு சுட்டுத் துரத்திவிட்டேன். நமது வீட்டில் வந்து திருட அவர்களுக்கு எவ்வளவு தைரியம் பாருங்களேன்.

கோவிந்தன்:—அது சரி; நீ அவர்களை எப்படிப் பார்த்தாய்?

ரமணி:—நான் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஏதோ துப்பாக்கி வெடித்த சப்தம் கேட்கவே, திடுக்கிட்டெழுந்தேன். எழுந்தவள் அங்கு தாமதியாது நீங்கள் எப்பொழுதும் இருக்கும் அறைக்குச் சென்று பார்த்தேன். தங்களைக்

காணோம். எனவே, நான் அங்கிருந்த கைத் துப்பாக்கியையும் கையி லெடுத்துக்கொண்டு வீட்டின் பல பாகங்களிலும் சென்று, தேடிப் பார்த்து, கடைசியாக நாம் உடுப்பு அணிந்து கொள்ளும் அறையில் (Dressing Room) வந்து பார்த்தேன். அப்பொழுது யாரோ இருவர் பேசிக்கொண்டே ஓடும் சப்தம் கேட்டது. குரலும் என்றும் கேட்டிராததாகத் தோன்றிற்று. உடனே வெளியில் வந்து பார்த் தேன். ஒருவரையுங் காணோம். பின் பக்கத் தாழ்வாரத்து வரைக்கும் போய்ப் பார்த்தேன். அப்பொழுதுதான் யாரோ ஒருவன் சுவரேறிக் கீழே குதிக்கப் போவதைக் கண்டு துப்பாக்கி யால் சுட்டேன். அவன் 'ஆ!' என்றலறிக்கொண்டு விழுந்ததி லிருந்தே குண்டு தப்பாமல் அவன் சிரேகத்தில் பாய்ந்திருக்கு மென்றே நினைக்கிறேன். இப்பொழுது வீட்டு வாசலில் ஊர் ஜனங்கள் வந்து கூடிவிட்டனர். நீங்கள் விரைவில் சென்று அவர் களுக்கு நடந்த சங்கதியைப்பற்றித் தெரிவித்தாக வேண்டும். இல்லை யேல், ஒரு வேளை ஜனங்கள் கதவை இடித்துக்கொண்டு வீட்டிற்குள் வந்து விடுவார்கள் போலத் தோன்றுகிறது. விரைவில் போங்கள்.

அதற்குள் ரெங்கநாதன் கோவிந்தனைத் தடுத்து, ரகசியமாக 'ராமகிருஷ்ணனும் அவன் நண்பனும் போலீஸாரைக் கூட்டிவந்து விட்டால் என்ன செய்வது? அதற்குத் தக்கவழி செய்ய வேண் டாமா?' என்றான். அதற்குக் கோவிந்தன், 'நீ பயப்படாதே. இப்பொழுதே சென்று அவர்கள் போலீஸ் ஸ்டேஷன் செல்வதற்குள் கொன்று போட்டுவிட்டு வந்துவிடலாம்' என்று சொல்லிவிட்டு, வெளிக்கதவைத் திறந்து, அங்கு நின்ற ஜனங்களுக்கு, யாரோ கள்வர்கள் வந்து அவர்கள் வீட்டில் திருட வந்ததாகவும், அவர் களைத் துப்பாக்கி கொண்டு சுட்டு விரட்டி விட்டதாகவும் கூறி அவர்களைத் திருப்தி செய்து விட்டான். அதற்குள் சிலர் 'இதோ இப்பொழுதுதான் இரண்டு பேர் இந்தப் பக்கம் ஒரு மோட்டார் சைகிளில் போகின்றனர்' என்று சொன்னார்கள். பின்பு இரு சேட்டு களும் எல்லோரையும் போகச் சொல்லிவிட்டு, ரமணியும் சென்று படுத்தவுடன் அவர்கள் ஜவுளி முதலியவைகள் வாங்கி வருவதற் காக வைத்திருந்த காரில் ஏறிக்கொண்டு, ராமகிருஷ்ணன் குடி யிருந்த கிராமத்தை நோக்கிச் சென்றனர். அவர்களுக்கு ராம கிருஷ்ணன் துளஸிதாஸ் ஆகிய இருவர்களில் ஒருவர் காய மடைந் திருப்பது நிச்சயமாகத் தெரிந்திருப்பதால், அவர்கள் அக்காயத் திற்கு வேண்டிய பரிகாரம் செய்யாமல் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போகமாட்டார்களென்றும், இருவரும் நேராக ராமகிருஷ்ணனின் ஜாகைக்கே சென்றிருக்க வேண்டுமென்றும் மனதில் தோன்றிய தாலேயே, அவர்கள் நேராக ராமகிருஷ்ணன் குடியிருந்த கிராமத் திற்குக் காரைச் செலுத்திக்கொண்டு சென்றனர். நிற்க.

இதே சமயத்தில் துளஸிதாஸின் நிலைமையைப்பற்றிப் பார்ப்போமானுல், அவர் மிகவும் அபாயகரமான ஸ்திதியி லிருந்தார் என்றே கூறமுடியும். ராமகிருஷ்ணன் ஒரு டாக்டரைக் கூட்டி வருவதாக எவ்வளவோ சொல்லியும், துளஸிதாஸ் தான் இனிப் பிழைப்பது அரிது என்பதை அறிந்து கொண்டவராதலால், டாக்டரை அழைத்துவர வேண்டாமென்று சொல்லித் தடுத்துவிட்டார். மேலும் தான் அதிவிரைவில் இறந்துவிடப் போவதால் தன்னைத் தனிமையான ஒரு இடத்தில் போட்டுவிட்டு அவன் போகக்கூடா தென்று தெரிவித்து விட்டார். பின்பு கிருஷ்ணன் காயத்திற்கு வேண்டிய சிகிச்சை செய்துகொண்டே, 'நண்பரே! என்னை ஏன் அச்சண்டாளர்கள் குடியிருக்கும் தெருப் பக்கமே அடிக்கடி போகச் சொன்னீர்கள்? அதனுலல்லவா நமக்கு இவ்வளவு கஷ்டங்களும் ஏற்பட்டு விட்டது' என்ருன்.

துளஸிதாஸ்:—ராமகிருஷ்ணு! அதைச் சொல்கிறேன் கேள். எனக்கு இவ்விரு சேட்டுகளும் இவ்வூரில் வந்து தனிமையாய் இருப்பதைப் பார்க்கவே சிறிது சந்தேகம் உதித்து விட்டது. மேலும் ஒரு நாள் நான் மறைந்திருந்து அதிக நேரம் அவர்கள் முகக் குறிகளை உற்றுநோக்கிப் பார்த்த பொழுது, என்னை மண்டபத்தில் சந்தித்த அந்த இரு பரதேசிகளே, இவ்வாறு சேட்டுகள் போல் வேஷம் போட்டுக் கொண்டிருக்கிருர்கள் என்று ஒருவாறு உணர்ந்தேன். நீயும் அவர்களைச் சரியாய் உற்றுநோக்கி யிருந்தால், முதலில் பார்த்தவுடனேயே அவர்கள் இன்னுரென்று கண்டு கொண்டிருப்பாய். ஆனுல், நீ எங்கே உன் வேஷத்தைப் பிறர் கண்டு கொள்கிருர்களோ என்றெண்ணிச் சரியாய் முகத்தைக்கூட ஜனங்களிருக்கும் பக்கம் திருப்பினுயில்லை. பின்பு நான் அவர்கள் வேஷதாரிகளா என்று தெளிவாய் அறிந்து கொள்வதற்காக, மற்ருெருநாள் ஒரு தாடி வளர்த்த மகமதிய வழிப் போக்கன் போல் சென்று அவர்களைச் சந்தித்து, திருச்சிக்குப் போகவழி எதுவென்று உருது பாஷையில் கேட்டேன். அவர்கள் தமிழிலேயே பேசத் தொடங்கி, 'நாங்கள் தமிழ் நாட்டிலேயே வெகு காலமிருந்து தமிழர்களோடு பழகி வந்ததால், உருது பாஷை சரியாய் எங்களுக்குத் தெரியாது' என்று சொல்லி விட்டார்கள். 'அப்படி நீங்கள் தமிழர்களோடு பழகி உருது பாஷையை மறந்திருந்தால், ஏன் நீங்கள் சேட்டுகளென்று சொல்லிக் கொள்ளாமல் தமிழர்களென்றே சொல்லி அவர்களோடு போய் வாழக்கூடாது?' என்று உருதுவிலேயே சொன்னேன். அதற்கவர்கள், நான் அவர்களைத் திட்டுவதாக எண்ணி என்னைக் கழிகொண்டு அடிக்க வரவும், நான் ஓடிவந்து விட்டேன். அதன் பிறகே பின்னும் உண்மையை அறிய எண்ணி, உன்னை ஒரு குடியானக் கிழவன்போல் வேஷம் போட்டுக் கொள்ளச் செய்து,

அத்தெருவழியே அடிக்கடி போய்வந்து கொண்டிருக்கும்படி தெரிவித்தேன். நீ போட்டிருந்த வேஷத்தில், உன்னோடு எப்பொழுதும் இருந்து உன் நடையுடை பாவனைகளை நன்கறிந்தவர்கள் இலகுவில் உன்னைக் கண்டு கொள்ள முடியும். மேலும் உன்னை உருமாறித் திரியும்படி செய்தது, போலீஸாரிடம் அகப்பட்டுக் கொள்ளாமலிருக்க வேண்டியே யொழிய, உன் எதிரிகளுக்கு நீ தெரியாமலிருக்க வேண்டுமென்ற நோக்கத் தோடல்ல. நீ அவ்வழியாகப் போகும் பொழுதெல்லாம் நானும் உருமாறி உன் பின்னாலேயே வந்து நடப்பவைகளைக் கவனித்துக்கொண்டு வந்தேன். பின்பு ஓர் நாள் அவர்கள் உன்னைப் பின்பற்றியே வந்து உன் ஜாகையை அறிந்துகொண்டு போனார்கள். மற்றொரு நாளும் இரவு 9 மணிக்கு உன்னை வந்து பார்த்துவிட்டு, ஏதேதோ பேசிக்கொண்டே போனார்கள். அவர்கள் பேசியதுமட்டும் என் காதுக்குக் கேட்கவில்லை. இன்று நடந்த எல்லாவற்றையும்கூட நான் கவனித்துக் கொண்டுதானிருந்தேன். ஆனால், அவர்கள் உன்னை இலகுவில் ஏமாற்றி விட்டார்கள். அவர்கள் இவ்வாறு உன்னை ஏமாற்றிக் கொல்ல முயற்சிப்பார்களென்று நான் நினைக்கவே யில்லை. அதன் பின்பு, எனக்கு அவர்களே கோவிந்தனும் ரெங்கநாதனுமாயிருக்க வேண்டுமென்று நிச்சயமாய்த் தெரிந்திருந்த படியால், உனக்கு ஆபத்து விளைவது நிச்சயமென்றெண்ணி அவ் வீட்டிற்குள் நுழைய வழி பார்த்தேன். ஆனால் வெளிக் கதவுகள் எல்லாவற்றையும் அவர்கள் சாத்தி விட்டார்கள். பின்பு நான் பின்பக்கச் சுவற்றின் மேலேறிக் குதித்து வந்து உன்னை அவ்வீடு பூராவும் தேடிப் பார்த்தேன். கடைசியாக அவ்வீட்டில் ஒரு அறை பூட்டப்பட்டிருந்ததைக் கண்டு, கதவிலிருக்கும் சாவித் துவாரத்தின் வழியாகப் பார்த்தேன். நீ கட்டப்பட்டுக் கிடந்தாய். உன்னைக் காப்பாற்ற வேறு வழி ஒன்றுமில்லையாதலால், உடனே என் ஜாகைக்கு விரைந்து சென்று, என்னுடைய ஸாதனக் கன்னக்கோலை எடுத்துக்கொண்டு சைகிள் மோட்டாரில் வருவதற்குள், காரியம் எவ்வளவோ நடந்து விட்டது. மேலும் மோட்டார் சத்தம் ஊரிலுள்ளவர்கட்குக் கேட்காமலிருக்கும் வண்ணம், ஊருக்கு இரண்டு மூன்று பர்லாங்குகளுக்கு அப்பாலிருந்தே மோட்டாரை விட்டிறங்கித் தள்ளிக்கொண்டு வர வேண்டியிருந்தது. நான் இவ்வாறெல்லாம் காரியம் நடக்குமென்று எதிர்பார்க்கவேயில்லை. இப்பொழுது என்னைச் சுட்டவர்கள் யாரென்று தெரியவில்லையே என்றுதான் எனக்குச் சிறிது வருத்தமாயிருக்கிறது. நானறிய அவ்வீட்டில் அவர்களைத் தவிர வேறு ஒருவருமில்லை. அவ்வீட்டில் மற்றொரு அறையின் கதவும் மூடப்பட்டிருந்தது. ஒருவேளை அதற்குள்ளிருந்துதான் யாராவது வந்து என்னைச் சுட்டிருக்க வேண்டும். அவ்வறையிலிருந்த விளக்குகளெல்லாம் அணைக்கப்பட்டிருந்தபடியால், நான் சாவித் துவாரத்

தின் வழியாகப் பார்த்தபொழுது ஒன்றும் தெரியவில்லை. சரி, கிருஷ்ணு ! என்னல் வேதனை பொறுக்க முடியவில்லை. இதோ இன்னும் கொஞ்ச நேரத்தில் என் உயிர் உடலைவிட்டு நீங்கிவிடும். நீ பாலச்சந்திரனை உனக்குதவியாக வைத்துக்கொண்டு அக் கொலை பாதகர்களைப் பழிக்குப் பழி வாங்கியே தீரவேண்டும். தஞ்சாவூரிலிருக்கும் பாலனுக்கு நான் இறந்து விட்டதையும் தெரிவித்து விடு. அவனைப்பற்றி உனக்குத் தெரிவித்திருக்கிறேன். அவனைக் கைவிட்டு விடாதே. நீ அந்தப் பாவிகளை பழிக்குப் பழி வாங்கும் வரை வேறு ஒரு காரியமும் செய்து கொள்வதில்லை யென்று எனக்குச் சத்தியம் செய்துகொடு. இல்லாவிடில் என் உயிர் சந்தோஷமாக என்னை விட்டகலாது' என்றார். ராம கிருஷ்ணன் அப்படியே சத்தியம் செய்து கொடுத்தான். துளஸி தாஸின் உயிரும் பூதவுடலை நீத்துப் புகழுடம் பெய்தியது.

ராமகிருஷ்ணன் அவர் திரேகத்தில் விழுந்து புரண்டு புரண்டு அழுதான். பயனென்ன? கடைசியாக அவன் 'என் சொந்தத் தகப்பனைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமாக என்மேல் பிரியம் வைத்திருந்த எனது நண்பரை யிழந்தேன். எனது ஆருயிர்க் காதலி வனிதாவையும் பறிகொடுத்தேன். இனி எனக்கிவ்வுலகில் என்ன வேலை? என்னல் ஒரு கீர்த்திவாய்ந்த துப்பறியும் சிங்கம், துளஸிதாஸ் தன் உயிரை யிழந்தார். இதோ இப்பொழுதே சென்று அவ்விரு மித்திரத் துரோகிகளையும் கொன்றுவிட்டு, நானும் துளஸி தாஸ் சென்ற பாதையிலேயே சென்று விடுகிறேன்' என்று தனக்குத்தானே கூறிக்கொண்டு, கையில் ரிவால்வாருடன் மோட்டார் சைகிளில் ஏறிச் சேட்டுகள் வசித்த வீட்டை நோக்கி அதிவிரை வாகச் செலுத்திக் கொண்டு வந்தான்.

(தொடரும்)


## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| தடவை 1-க்கு | ஒரு பக்கத்திற்கு | ரூ. 20. |
| ,, ,, | ½ பக்கத்திற்கு | ரூ. 12. |

நீண்டகால விளம்பரங்களுக்கும், அட்டை விளம்பரத்திற்கும் மானேஜருக்கு எழுதவும். விளம்பரத் தொகையை முன் பணமாகவே அனுப்ப வேண்டும்.

மானேஜர்,
'தமிழரசு'
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

முதல் தரமான

## உயர்ந்த சந்தனக் கட்டை

எங்களிடம் முதல்தரமான உயர்ந்த சந்தனக்கட்டையும், சந்தனத் தூளும், சந்தனச் சக்கையும், வேரும் கிடைக்கும். உலகத்திலேயே வாசனையில் சிறந்த முதல்தர சந்தனக் கட்டையை நாங்கள் வரவழைத்து வியாபாரம் செய்வதால், உயர்தர சந்தனக்கட்டை வேண்டியவர்கள் எங்களிடம் வந்து பார்த்து வாங்கவும். சில்லரையிலும் மொத்தத்திலும் கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| சந்தனத் தூள் | 1 | பவுன் பெட்டி | 0—9—0. |
| „ | ½ | „ | 0—5—0. |
| „ | ¼ | „ | 0—3—0. |

**பழனியாண்டவர் கம்பெனி,**

சந்தன வியாபாரம்,

220, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.



வெளி வந்து விட்டது ! வெளி வந்து விட்டது !!

## தாசிகளும் தாசிகாந்தர்களும்

### (ஓர் அரிய புதிய நாடக நூல்)

தமிழ்ப் புலவர் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை எழுதியது.

இந்நூல் தமிழர்களுக்கு ஒரு சிறந்த விருந்தாகவும், அநுபவ பொக்கிஷமாகவும், அறிவு புகட்டும் அருமை நண்பனாகவும் விளங்கும். இந் நூலைச் சில பக்கங்கள் வரையில் படித்தால் கடைசி வரையில் படித்து முடிக்கும்படித் தூண்டுமென்பதற் கையமில்லை. நல்ல கிளேஸ் காகிதத்தில் சித்திரப் படங்களோடு கூடிய அழகிய இப்புத்தகத்தின் விலை எட்டணா தான். தபால் செலவு அணா 2. 10 அணா ஸ்டாம்ப் அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

கிடைக்குமிடம்:

**'தமிழரசு' புத்தகாலயம்,**

**31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.**

# கோல்டனல்

நண்பர்களே! இந்த மருந்தானது தங்கம் முதலான விலையுயர்ந்த வஸ்துக்களினால் தயார் செய்யப்பட்டது. இதனை அநேகர் உபயோகித்து வருகின்றனர். இதன் உயர்ந்த குணத்தைப் பலரும் புகழ்கின்றனர். சிறுவர்கள் முதல் வயோதிகர் வரையில் நிர்ப்பயமாய் உபயோகிக்கலாம். தாது விருத்திக்கு நல்ல மருந்து. மலேரியா என்னும் விஷ சுரத்தினாலாவது அல்லது வேறு எந்த சுரத்தினாலாவது சரீரம் இளைத்து இரத்தம் குறைந்து சோகை போலும் வெளுத்துக் காணப்படும் இளைத்த தேகிகளுக்கு ஒரு ஆச்சரிய அபூர்வமெனவே சொல்ல வேண்டும்.

இதைச் சாப்பிடுபவர்களுக்கு மயிர் கறுத்து வளரும்; பசியின்மை நீங்கும்; மலம் தாராளமாய்க் கழியும்; தாது விருத்தி உண்டாகும்; பரிசுத்த இரத்தம் பெருகும்; நல்ல பசியுண்டாகும்; முகம் வசீகரமாய்க் காணும்; மேனி சிவக்கும்; நரம்புகள் தடிக்கும்; பசி அதிகரிக்கும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் வீரர்களாகவும், பலசாலிகளாகவும், இரத்த சுத்தியும், இரத்தப் பெருக்கும் பெற்று பித்த சோகை, பித்தபாண்டு, ஊதுகாமாலை, எலும்புருக்கி முதலிய நோய் நீங்கப் பெறுவார்கள்.

இம் மருந்தால் மலமும் தாராளமாய்க் கழியும். இம் மருந்தைச் சாப்பிட்டவர்கள் பயில்வான்களாவார்கள். திடகாத்திர புத்திரர்களைப் பெறுவார்கள்; இன்பத்தையும் அடைவார்கள்.

இம் மருந்தைப் பால்யர் முதல் வயோதிகர் வரை ஆண் பெண் இரு பாலர்களும் எந்தக் காலத்திலும் சஞ்சீவியைப்போல் உபயோகித்து வரலாம்.

இம் மருந்தை ஒரு மாதம் சாப்பிட்டால் பலசாலிகளான புத்திரர்களைப் பெறலாம் புத்திர சந்தானம் உண்டாவதற்கு இம் மருந்தை ஆண் பெண் இருபாலர்களும் சாப்பிட வேண்டும்.

**புட்டி 1-க்கு விலை ரூபா 1—4—0.**

## கர்ணபிந்து

சகலவிதமான காது நோய்களுக்கும் இலேசாக அனல் காட்டி காதில் 3 துளி விட்டு, பஞ்சு வைக்கவும். மருந்து உபயோகிக்கும் போது, காதில் சீழ்வடிந்தால் சுத்தம் செய்த பிறகு உபயோகிக்கவும்.

தீரும் வியாதிகள்:—காது குத்தல், சீழ்வடிதல், ஆராத இரணங்களுக்கு முக்கியமானது.

**புட்டி 1-க்கு விலை அணா 8.**

# கார்டோலின்

## (ஆஸ்தமாவுக்கு அரிய ஔடதம்)

அநேக மருந்துகளால் தீராதெனக் கைவிட்ட நோயைத் தீர்த்திருக்கிறது. ஈளை இருமல், சுவாசகாசம், காச இருமல், மந்தாரகாசம் முதலிய நோய்களுக்குச் சிறந்த மருந்து.

மக்கள் சுவாசக் குழாயிலுண்டாகும் வீக்கத்தினாலும், இரணத்தாலும், சுவாசம் விடுவதற்கு ஆயாசப்பட்டும், இழுப்பு இருமலினால் துன்பப்பட்டும் வாடி வருந்துகிறார்கள். ஆங்கிலர்கள் இவ்வியாதியை இரண்டு விதமாகக் கொள்கின்றார்கள். அவையாவையெனில் பிரான் கயடிஸ், ஆஸ்தமா என்பவையாம். இந்தியர்கள் இதை எட்டுவிதமாகப் பிரிக்கிறார்கள். ஈளை இருமல், காச இருமல், சுவாசகாசம், மந்தாரகாசம் என்பனவாகிய பெயர்களால் நோயைக் கணிக்கின்றார்கள். இந்நோயானது மழைக் காலங்களில் பெரும்பான்மையும், துன்பத்தை உண்டுபண்ணுகின்றது. சிற்சிலருக்கு அதிக வெப்பமான காலத்திலும் துன்பம் தருகின்றது.

இந்த நோயால் துன்பமடைவோர்கள் எத்தனையோவிதமான மருந்துகளை சாப்பிட்டும் நோய் நிவர்த்தி ஆகாமையால் மருந்துகளில் நம்பிக்கை இழக்கின்றார்கள்.

வைத்தியர்கள் தங்களால் இயன்ற மருந்துகளை உபயோகித்துப் பார்த்தும் குணமடையாமையைக் கண்டு இந்நோயானது கர்மத்தால் வந்ததெனக் கூறிவிடுகின்றார்கள்.

இத்தகையர்களின் மனதை மாற்றுவான் வேண்டியே நமது கார்டோலின் என்னும் மருந்து வெளிவந்திருக்கிறது. இம்மருந்தால் சுமார் 30, 40 வருடங்களாகக் கஷ்டப்பட்டிருந்த காசநோய் இருந்த அநேகர் சுகப்பட்டிருக்கின்றனர். அஸ்தமா இருமலானது எந்த நிலைமையில் இருந்தாலும் இம் மருந்தானது குணப்படுத்திவிடும். ஆஸ்தமா என்னும் சுவாச ரோகத்தால் துன்பப்படுபவர்கள் அவநம்பிக்கையன்றி இம் மருந்தை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.

---

அன்புள்ள, டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு, தாங்கள் எனது குமாரனுக்கு ஏற்பட்டிருந்த அஸ்தமா வியாதிக்குக் கொடுத்த கார்டோலினால் என்னும் மருந்தை உபயோகித்ததிலிருந்து இழுப்பு இருமல் நின்றுவிட்டது. இப்பொழுது என்னுடைய மகன் சுகமா இருக்கின்றான்.

சென்னை பெரியமெட்டு கண்டிராக்டர் நா. கணபதி முதலியார்.

**இதன் விலை புட்டி 1-க்கு ரூபா 10.**

# கூழ்ப்பாண்ட லேகியம்

இந்த லேகியத்தில் ஒரு கெச்சக்காய் அளவு காலை மாலைகளில் சாப்பிட பலம் தரும், மலம் தள்ளும், சரீர உஷ்ணம் நீங்கும். மலச் சிக்கல் நீங்குவதும் கணச்சூடு விலகுவதும் இம்மருந்தின் முக்கிய குணம். எலும்புருக்கி நோயால் இளைக்கும் தேகத்தைப் பலப்படுத்தும். குழந்தைகள் முதல் யாவரும் சாப்பிடலாம். யாதொரு பத்தியமும் இல்லை. எண்ணெய் ஸ்நானம் செய்யும் தினம் மருந்தை நிறுத்த வேண்டும். சுரம், தலைவலி யிருக்கும் காலத்தில் மருந்து சாப்பிடலாகாது. மருந்து குளிர்ச்சியைத் தரக்கூடியது.

## சில அபிப்பிராயங்கள்

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

என்னுடைய பேத்திக்குக் கொடுத்த கூழ்ப்பாண்ட லேகியம் 6 மாதமாய்க் கொடுத்து வந்ததில் தேகம் மேனியும் சதையும் பிடித்திருக்கின்றது. இனி மீன் எண்ணெயை உபயோகிக்கவே மாட்டோம். இன்னும் 10 பவுன் கூழ்ப்பாண்ட லேகியம் அனுப்பவும். என்னுடைய குமாரன் வக்கீலுக்குப் படிப்பதால் அவனுக்கும் இதைக் கொடுத்து வருகிறேன். இதனால் சரீரத்தில் உஷ்ணம் ஏற்படாமலும், மலச்சிக்கலில்லாமலும், சாப்பிட வாய்க்கு ருசியாயும் இருப்பதால் அதிகமாய்ச் சாப்பிட்டு வருகிறான்.

எங்கள் குடும்பத்திற்காகக் கூழ்ப்பாண்ட லேகியத்தை ஒரு ஜாடி செய்து கொடுத்தால் நலமாய் இருக்கும்.

என்னுடைய ஜூனியர் மாயவரம் பார்த்தசாரதி ஐயங்காரும், இந்த லேகியத்தை அடிக்கடி கேட்டுக்கொண் டிருக்கிறபடியால் அவருக்காகக் கொஞ்சம் தயார் செய்யவும். இந்தக் காலத்துப் பையன்களுக்கு இது மிகவும் அவசியமானது.

R. சடகோபாச்சாரியார், B. A. B. L. ஐகோர்ட் வக்கீல்.

---

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

தங்களைப் பார்த்து வெகுநாளாய் விட்டது. நான் இளையாளை மணந்த பிறகு 'டனுக்கு' என்னும் ஊருக்கு ஜில்லா முனிசீப்பாக இருக்கிறேன். தங்கள் கூழ்ப்பாண்ட லேகியத்தினால்தான் என் குழந்தைபெருத்து நன்றாக பலத்து இருந்தது. இப்போது எனக்குக் கூழ்ப்பாண்ட லேகியம் 5 பவுன் வி. பி. யில் அனுப்ப வேண்டியது.

இப்படிக்கு,

C. ராஜகோபாலாசாரியார் B. A. B. L.

District Munsiff, Tanuku.

ஒரு பவுன் புட்டி விலை ரூ. 2.

# காஸ்டோலின்

## (இது சர்வ படையையும் சம்மரிக்கும்)



சரீரத்தில் இடுப்பிலும், கழுத்துப் பட்டைகளிலும், தொடையின் இடுக்கிலும், சாமான் கூட்டின் மேலும் படரும் படையானது இரவு பகலாக மானாபிமானம் விட்டு பலர் முன்னிலையில் சாமான் கூட்டில் கையை வைத்து நமை நீங்க சொரிந்து கொள்ளச் செய்கின்றது.

சிலர்க்கு முகத்திலும் கழுத்திலும் படர்ந்து விகாரத்தை உண்டு பண்ணுகின்றது. சிற்சிலருக்கு முழங்காலுக்கு கீழ், கணுக்காலுக்குமேல் படர்ந்து எந்நேரமும் நீர் கசிந்து கொண்டு இரணமாய் இருக்கின்றது.

இத்தகைய வியாதிக்கு இங்கிலீஷ் மருந்தில் ஆசிட்சாலிசிலிக் என்னும் பவுடரை மெதிலேடட் ஸ்பிரிட் என்னும் திரவத்துடன் கலந்து பலர் படை மருந்து என்று விற்கின்றார்கள். இம் மருந்தை வாங்கி பூசினவுடன் எரிச்சல் கொடுத்து உதிர்வதுபோல் காணப் பட்டு மீண்டும் திரும்பி விடுகின்றது. எரிச்சலும் பொறுப்பது கஷ்டமாகின்றது. சிலருக்குக் குணமே கிடைப்பதில்லை. ஆதலால் அத்தகைய மருந்தைக் காட்டிலும் தமிழ் மருந்தே வேருடன் களையக் கூடியது. ஆகையால் எங்களால் தயார் செய்யப்பட்டுள்ள காஸ்டோலின் என்னும் விளக்கெண்ணெயினால் தயார் செய்த படை மருந்தை உபயோகித்துப் பாருங்கள்.

எவ்வித படைகளையும் நொடியில் போக்கும் தன்மை வாய்ந்தது. உபயோகிக்கும்போது எரிச்சல் உண்டாகாது. வேஷ்டியில் கரை பிடிக்காது. எத்தனை வருஷமாக இருக்கப்பட்ட இரணமானாலும் போக்கக் கூடியது.

இதனை உபயோகித்தவர்கள் உங்களுக்கு இதன் பெருமையைச் சொல்லுவார்கள்.

**வேண்டுவோர் 6 அணா தபால் தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.**

## நற்சாட்சி பத்திரம்

**வைத்திய ஆசிரியர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,**

என் குடும்பத்தில் ஒருவருக்கு சரீரம் முழுதும் 'எச்சிற்றழும்பு'போல் ஒருவித படை உண்டாகி இருந்தது. அதற்கு வேண்டிய வைத்தியங்கள் செய்தோம். ஒன்றும் குணப்பட்டு வரவில்லை. இறுதியில் அவர் கஷ்டம் தாங்க முடியாது பாயும் படுக்கையுமானார்.

இப்படி யிருக்கையில் சென்னை சென்று வந்த என் நண்பரோருவர் தன்னிடம் தங்களால் தயாரிக்கப்பட்ட 'காஸ்டோலின்' என்ற படை மருந்து இருக்கிறதென்றும், ஒரு சமயம் இந்த மருந்தினால் மேற் கூறப்பட்டவரின் படை வியாதி நீங்கினாலும் நீங்கக் கூடும் என்றும் கூறி என்னிடம் மேற்படி மருந்தைக் கொடுத்தார்.

அதைப் பாயும் படுக்கையுமாகக் கிடந்த படை வியாதியினருக்கு நான் அதில் கூறிய முறைப்படி போட்டதில் மிகுந்த ஆச்சர்யமான குணத்தைக் கொடுத்தது. அவர் உங்களை வாழ்த்தாத நேரமில்லை. இப்போது அவருக்கு 3, 4, மாதங்களாக தேகத்தில் ஒருவித வியாதியும் இல்லாமல் இருந்து வருகிறது. நமது இந்தியர்கள் தங்களின் 'காஸ்டோலின்' மருந்தை வாங்கி உபயோகிப்பார்களானால் எவ்வளவோ நன்மை யடைவார்கள். வேறு மருந்துகளுக்குப் பணத்தை வீணில் கொடுத்து தேகத்தையும் அனியாயமாகக் கெடுத்துக் கொள்வதினின்றும் காக்கப்படுவார்கள். தங்களின் 'காஸ்டோலின்' ஒரு சிறந்த ஔடதம் என்பதை மனமுழு உண்மையுடன் கூறுகிறேன். தங்களின் வைத்தியம் சிறப்பதாக !

அன்புள்ள,

G. M. அலிஹுஸைன் M. H. A.,

கௌரவ காரியதரிசி, 'ஹுஸைனியா சங்கம்'

ஜெனரல் அட்வர்ட்டைசர், ஆர்டிகலிஸ்ட் நாகூர் 26–12–34.

---

ம-ள-ள-ஸ்ரீ டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்களுக்கு,

ஹெட்மாஸ்டர் D. S. ரங்கா ராவ் வணக்கமாய் எழுதிக் கொண்டது. இப்பவும் நான் இரண்டு வருஷகாலமாகத் தங்கள் மருந்து (காஸ்டோலின்) வரவழைத்து என் சிநேகிதர்கள் படை சௌக்கியமா யிருப்பதைக் காண எனக்கு கணக்கில்லாத ஆனந்தம் ஏற்பட்டிருக்கிறதை இக்கடித மூலம் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என் அநுபோகத்தில் இம்மருந்தை மிகவும் சிலாக்யமாய்க் கருதுகிறேன். எனக்குப் படை ஏற்பட்ட இடத்தின் அடையாளமே இல்லாமல் வேறு தோல் வளர்ந்தது. ஆகையால் தாங்கள் தயவு செய்து இந்த லெட்டர் கண்டவுடன் இதில் அனுப்பிய 7 அணு ஸ்டாம்பைப் பெற்றுக்கொண்டு உடனே இன்னுமொரு காஸ்டோலின் மருந்து பாட்டிலை அடியில் கண்ட விலாசத்திற்கு அனுப்பக் கோருகிறேன்.

இப்படிக்கு,

D. S. ரங்கா ராவ், ஹெட்மாஸ்டர்.

பசுபதிபாளையம், எலிமெண்டரி ஸ்கூல்,

மேலபாளையம் போஸ்டு, வையா கரூர்

# காங்க்ரீன் என்னும் இரண சஞ்சீவி

இம் மருந்தானது எல்லாவித இரணங்களேயும், கட்டிகளேயும் ஆற்றும். மதுமேக நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்குக் காணும் இராஜக் கட்டியானது எவ்வளவு அபாய நிலேயில் இருந்தாலும் குணமாய் விடும். ஆஸ்பத்திரிகளில் பார்த்து தீராதென அனுப்பி விட்ட கேசுகளே ஆச்சரியகரமாய் குணம் செய்யும். அநேக ஆங்கில வைத்தியர்கள் இதை உபயோகிக்கின்றனர்.

ஆஸ்பத்திரிகளில் பெரிய டாக்டர்களாக இருக்கும் என் சகோதர வைத்தியர்களுக்குத் தெரிவிப்பது: உங்கள் ஆஸ்பத்திரி களிலாவது அல்லது தனிப்பட்டாவது பார்க்கப்பட்ட ராஜகட்டி கள் (சைன்ஸ்) வைத்து (டையபடிக் கோமா) வந்து இனி இக்கேசு பிழைக்காது என்று நினேக்கும் சமயம் நீங்கள் கைவிட்ட சமயம் உங்கள் (இன்சொலின்) குணம் தராத காலத்திலாவது இதை உபயோகித்து உயிரைக் காப்பாற்றுங்கள். ஆஸ்பத்திரிகளில் ஆப்ப ரேஷன் செய்யாமல் இரணங்களே ஆற்றி விடுங்கள். உங்களுக்கு இதன் குணம் தெரிந்துக்கொள்ளும் வரையில் உங்களால் முடியாது என்றபோது இதை உபயோகித்துப் பாருங்கள். முக்கியமாய் ஜெனரல் ஆஸ்பத்திரி, ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, டிஸ்ட்ரிக்ட் ஆஸ்பத்திரிகளிலிருக்கும் டாக்டர்களுக்கும், இந்தியன் மெடிகல் ஸ்கூல் பிரின்சிபால் அவர்களுக்கும் வற்புறுத்தி மறுமுறையும் கேட்டுக் கொள்வதாவது உங்களால் முடியாது என்று எண்ணிய பிறகாவது எங்கள் இரண சஞ்சீவியை உபயோகித்துப் பாருங்கள்.

கண்டமாலே, அறையாப்புக் கட்டி இவைகளேயும், எத்தகைய ராஜ கட்டிகளேயும், புரைப் புண்களேயும் ஆற்றிவிடும்.

இம்மருந்து சேர்த்துப்புண், சொரி சிரங்கு, முகத்தில் காணும் மோகப்பருவு இவைகளே நீக்கும்.

ஆராத மேகப்புண், மேகப்படை கட்டி இவைகளுக்குப் பூச இரணம் ஆறும். பவுத்திர வியாதிக்கு மேல் பூசினுல் இரணம் ஆறிவிடும்.

## சில அபிப்பிராயங்கள்

சென்னே கந்தப்ப முதலித் தெருவு, நெ. 21, P. சோமசுந்திர செட்டியார் தெரிவிப்பது:—நான் என் தாயாருக்கு ஏற்பட்டிருந்த ராஜகட்டிக்காக டாக்டர் மல்லய்யாவிடமும், ரங்காசாரியாரிடமும் இராயப்பேட்டை ஆஸ்பத்திரியிலும் காட்டி குணமடையாமல் சாகும் நிலேயில் இருந்தபோது துரைசாமி ஐயங்கார் சொல்லியபடி

தங்களிடம் வந்து மருந்து கேட்டேன். தாங்கள் கொடுத்த இரண சஞ்சீவியால் முள்ளந்தண்டிலும் மார்பிலும் வயிற்றிலும் இருந்த கட்டிகள் சுகமாய்விட்டன. பிறகு இன்பசாரம் சாப்பிட்டதில் இரத்தம் விருத்தி யடைந்தது. நீரில் சர்க்கரை அதிகமாய் இருந்ததும் மறைந்து விட்டது. 12—12—33.

---

தே. வ. இ. சோமசுந்திரம் செட்டியார், கல்லல். தெரிவிப்பது :—

எனக்கு முதுகில் ஏற்பட்டிருந்த ராஜகட்டிகளை ஒரு தரம் திருப்பத்தூர் ஆஸ்பத்திரியில் ஆப்பரேஷன் செய்து ஒரு வருடமாய் ஆராமல் நீர் வந்துகொண்டே இருந்ததும் தவிர மேல்கொண்டு பல கட்டிகளும் முதுகு பூராவும் சல்லடைக் கண்கள் போல் உண்டாய் விட்டன. பாதை பொறுக்க முடியாமல் கஷ்டப்பட்டிருக்கும் சமயத்தில் டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் அவர்கள் கல்லல் ஆ. மு. ஆ. வீட்டுக்கு வந்தபோது காண்பித்தேன். அவர் பட்டணம் வந்தால் பூரணமாய்க் குணப்படுத்தலாம் என்று சொல்லி இரண சஞ்சீவியைப் போடக் கொடுத்தார். கொஞ்சம் வலி குறைவாயிருந்தது. அதுசமயம் ஆ. மு. ஆ. முருகப்ப செட்டியார் அவர்கள் இந்தக் கேசை உங்களால் குணப்படுத்த முடியுமானல் பட்டணம் அனுப்பலாம், இல்லாவிடில் திருப்பத்தூரிலேயே பார்க்கலாம், என் மகன் இந்த வியாதியால் இறந்து போனன் என்று சொன்னதைக் கேட்டபின் உறுதி சொன்னதின் மேல் நான் பட்டணம் வந்து ஒரு மாதம் மருந்தைப் போட்டதில் சகல கட்டிகளும் ஆச்சரியமான வகையில் இரண சஞ்சீவியால் குணமாய் விட்டது. என்னிடம் ஒரு டஜன் இரண சஞ்சீவியை வைத்துக்கொண்டு ஏழைகளுக்குக் கொடுத்து சுகப்படுத்தி வருகிறேன். இரண சஞ்சீவியை ஒவ்வொரு வீட்டிலும் கையிருப்பாக வைத்திருப்பது அவசியம். 10—9—33.

குறிப்பு :—இன்னும் கணக்கற்ற இரணங்களும் இராஜகட்டிகளும் குணமான நற்சாட்சி பத்திரங்கள் எங்களிடம் இருப்பினும் இடமில்லாமையால் இரண்டு மாத்திரம் இங்கு குறிப்பிட்டோம்.

விலை புட்டி 1-க்கு ரூபா 1.

82
m311, N30T8
839·ம.6
201678
சென்னை-600 008

எமது விலாசம்:

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார்,
31, வைத்தியநாத முதலி வீதி, சென்னை.

டாக்டர் மே. மாசிலாமணி முதலியார் இயற்றிய
அரிய நூல்கள்

# அனுபவ வைத்திய நூல்

(2 - ஆம் பதிப்பு)

இப் புத்தகம் ஒவ்வொரு வீட்டிலும் தவறாது இருக்க வேண்டியது இன்றியமையாததாகும். இந் நூல் வீட்டில் இருப்பது குடும்ப வைத்தியர் ஒருவர் உங்கள் இல்லத்தில் கூடவேயிருப் பதுபோலாகும். நோய் உண்டான காலத்தில் நீங்களே இந் நூலின் உதவியைக்கொண்டு சிகிச்சை செய்து கொள்ளலாம். இந் நூலில் எல்லா நோய்களின் விவரமும், அவைகள் உண்டாவதற்கு முன் தோன்றும் குறிகளும், அவைகளைப் போக்கும் சுலபமான வழி களும், அதற்குரிய எளிய மருந்து வகைகளும் காணக் கிடைக்கும்.

இதன் விலை ரூபா 2. தபால் சார்ஜ் வேறு.

# ஜீவ இரகசியம்

இதில் டாக்டர். முதலியார் அவர்கள் நீண்ட காலமாக அனேக சாதுக்களிடத்திலும், யோகிகளிடத்திலும், அறிஞர் களிடத்திலும் பழகி அவர்களிடமிருந்து அறிந்து கொண்ட விஷ யங்களில் தமது அறிவிற்கும் அனுபவத்திற்கும் உண்மை யெனப் பட்ட பல அரிய பொருள்களை ஆராய்ந்திருக்கிறார்கள்.

இந் நூலில் உயிர் வாழ்வதற்கு மிகவும் அவசியமான சுகத்தை —தேகம் சுகம், மனோ சுகம், ஆன்ம சுகம் என மூன்று பிரிவாக வகுத்து ஒவ்வொரு பிரிவைப் பற்றியும் விரிவுபடுத்தி எழுதப்பட் டிருக்கிறது. மற்றும் இப் புத்தகத்தில் சகல மதங்களில் உற்பத்தி யைப் பற்றியும், அவற்றின் கருத்துக்களைப் பற்றியும் அறியலாம்.

இந் நூலை ஒவ்வொருவரும் படித்தறிய வேண்டியது மிகமிக அவசியமாகும்.

இதன் விலை ரூபா 1. தபால் சார்ஜ் வேறு.

'தமிழரசு' புத்தகாலயம்,
31, வைத்தியநாத முதலி தெரு, சென்னை.

'TAMIL ARASU' RGD. M. NO. 2559.

வெளி வந்துவிட்டது! வெளி வந்துவிட்டது!!

## எது? எது?

# LUK

# பீடி

ரிஜிஸ்டர்ட்

உலகில் எத்தனையோ பீடிகள் இருந்தாலும் அவற்றுள் எங்கள் பீடி தலை சிறந்தது என்பதற்கு ஒருமுறை வாங்கி உபயோகித்தால் தெரியும். இந்த பீடியை உபயோகித்தால் அதிக பசியை உண்டாக்கும், இருமலைப் போக்கும், சளியைக் கரைக்கும், போதுமான காரம் இருக்கும், கசப்பு இராது, சிகரெட்டுக்குள்ள மணம் இருக்கும் இதைப்போல் வேறு எந்த பீடியும் இருக்காது. பீடியைப் பிடித்தபின் மற்ற பீடிகளைப்போல் வாயில் ஏற்படும் கெட்ட வாசனை (புகையிலை வாசனை) இதில் இராது. 24 பீடிகள் ஒரு அழகிய பெட்டியில் பாக் செய்து விற்கப்படுகிறது. இந்த பீடி சட்டைப் பையில் வைத்தால் புகையிலைத் தூள் கொட்டி சொக்காய் கரை பிடித்துப் போவதைத் தடுத்து நாகரீக முறையில் சொக்காய்ப் பையில் வைத்துக்கொள்ள அனுகூலமாய் இருக்கும். இதனை லக்ஷக் கணக்கில் மக்கள் உபயோகித்து கொண்டாடுகிறார்கள். வேண்டுவோர் மொத்த விலை விபரம் எழுதி தெரிந்து கொள்ளவும். ஏஜெண்டுகள் தேவை.

விலாசம் :—

## லக் பீடி ஆபீஸ்,

## LUK TOBACCO CO.,

30, VAITHIYANATHA MUDALI STREET, MADRAS.

தந்தி விலாசம் :—வாசனை, சென்னை

Edited, Printed and Published by Dr. M. Masilamani Mudaliar at Meenatchi Press, 31, Vaithiyanatha Mudali Street, Madras.